வெளியீடு: 22-3-2004 Issued: 22-3-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT


வியாழக்கிழமை, பிப்ரவரி 5, 2004—தொகுதி 55—எண் 1

Thursday, the 5th February, 2004 – Volume 55 – No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

... Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

5-2-2004

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii - vii |
| Governor and Council of Ministers | ix - xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், அலுவலர்கள் பட்டியல் | xiii - xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xvii - xxvii |
| **1. இரங்கற் குறிப்புகள்–** | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு | 1 - 3 |
| **2. வினாக்கள்–விடைகள்–** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 3 - 38 |
| **3. அறிவிப்புகள்–** | |
| (அ) குற்ற வழக்கு விசாரணை முறைத் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) தொகுப்புச் சட்டமுன்வடிவு, 2002, பேரவையின் மறுபரிசீலனைக்காக ஆளுநரால் திருப்பியனுப்பப் பெறுதல் (ஆசெ.) | 38 - 39 |
| (ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 39 |
| **4. தகவல் கோரல்–** | |
| (அ) பேரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்த பாட்டாளி மக்கள் கட்சியினரின் சைக்கிள்களை, நிறுத்திய இடத்திலிருந்து காவல் துறையினர் அகற்றியது | 40 - 42 |
| (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 42 |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்— | 43-123 |
| *திரு. சி. இராசேந்திரன் | 43-60 |
| *திருமதி செல்வி முருகேசன் | 43, 101-111 |
| *திரு. இ. புகழேந்தி | 60-78 |
| திரு. வி.கே. லட்சுமணன் | 79-90 |
| திரு. தி. வேல் முருகன் | 90-100 |
| திரு. என். நன்மாறன் | 111-117 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 118-122 |
| 6. அரசினர் தீர்மானம்— | |
| விதி 32—ஐத் தளர்த்துதல் | 123 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 124-128 |


185087



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் — திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**நிதி மற்றும் உணவு அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

4. சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. செம்மலை:

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

8. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

9. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.



10. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

11. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்,

12. தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

13. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

14. வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:

வணிக வரிகள் மற்றும் கூட்டுறவு.

15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்

கால்நடை பராமரிப்பு.

16 வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** ,, **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

**19. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**21. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

**23. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.



**24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம். செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

---

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance and Food** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies, Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics. |
| 4. **Minister for Law, Information Technology and Electricity** | .. | **The Hon. Thiru D. Jayakumar:**<br>Law, Courts, Information Technology, Electricity and Non-conventional Energy Development. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:**<br>Hindu Religious and Charitable Endowments. |

6. **Minister for Education** .. **The Hon. Thiru S. Semmalai:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

7. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities

9. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

14. **Minister for Commercial Taxes and Co-operation** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Commercial Taxes and Co-operation.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Labour** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

20. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

21. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

22. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.

23. **Minister for Agriculture** .. **The Hon. Thiru P. Annavi:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

24. **Minister for Information & Publicity and Local Administration** .. **The Hon. Thiru K.P. Anbalagan:**

Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural-indebtedness, Urban and Rural Water Supply.

25. **Minister for Sports and Youth Welfare** .. **The Hon. Thiru Inbathtamilan:**

Sports and Youth Welfare.

------



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. செ.கு. தமிழரசன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

# 5—2—2004 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | - பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. ரவிச்சந்திர ராஜ், பி.ஏ., | - குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு.ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |

—



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | - | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | - | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | - | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | - | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | - | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | - | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | - | புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | - | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | - | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | - | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | - | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | - | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | - | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | - | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | - | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | - | வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆம்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடானை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செ.வ)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ)
33. இராஜவேல், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ)
34. இராஜரத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. வா.இ. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
64. கார்த்தி, திரு. மு. - சேலம்-2
65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)

67. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
71. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
82. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
86. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
87. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
88. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆவா.)
89. சாமி, திரு. ஆர். - மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்



91. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
102. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்

114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்

116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்

117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்

118. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)

119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்

120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்

121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்

122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி

123. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)

124. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்

125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு

126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்

127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி

128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்

129. துரைமுருகன், திரு. - காட்பாடி

130. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி

131. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு

132. நடராஜன், திரு. அ. - குத்தாலம்

133. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி

134. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்

135. நடராசன், திரு. வ.து. - இளையான்குடி

136. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி



137. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு

138. நளினி மனோகரன், திருமதி - போளூர்

139. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு

140. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு

141. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்

142. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்

143. பச்சைமால், திரு. தா. - குளச்சல்

144. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்

145. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1

146. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)

147. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)

148. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை

149. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)

150. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்

151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

152. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

153. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு

154. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை

155. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)

156. பாரிமோகன், திரு. இ. - தருமபுரி

157. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி

158. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்

159. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
160. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
161. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
162. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
163. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
164. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
165. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
166. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
167. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
168. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
171. பேரொளுர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
174. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
176. மணி, திரு. டி. - விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
178. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
179. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
180. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
181. மில்லர், திரு. அ. - கூடலூர்



182. முரளிதரன், திரு. கே.வி. - தளி
183. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
184. முருகேசன், திரு. ஆகு. - ஆத்தூர்
185. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
186. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
187. மோகன், திரு. ப. - சின்னசேலம்
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்
192. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
193. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
194. ராமசாமி, திரு பி.சி. - மொடக்குறிச்சி
195. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
196. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
197. ராஜகோபால், திரு. ஆ - சிவகாசி
198. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
199. ராஜா, திரு. எச். - காரைக்குடி
200. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
201. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
202. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்
204. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு

205. வியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி
206. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி
207. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்
208. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு
209. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
210. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்
211. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
212. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்
213. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்
214. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை
215. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி
216. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை
217. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
218. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-1
219. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
220. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
221. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
222. வேல் முருகன், திரு. இ. - பண்ருட்டி
223. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
224. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
225. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்
226. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி



227. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)
228. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
229. ஜெயராமன், திரு. வி. - பொள்ளாச்சி
230. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
231. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
232. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி
233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
234. வெற்றிடம் - மங்களூர் (செ.வ.)
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

---

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 22, சுபானு – திருவள்ளுவர் ஆண்டு 2035

## 2004 பிப்ரவரி 5, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்*
*துன்பம் துடைத்தூன்றும் தூண்"*

*தன்னலம் விரும்பாமல், தான் மேற்கொண்ட செயலை நிறைவேற்ற விரும்புகின்றவர் தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றத்தார், நண்பர்கள், நாட்டு மக்கள் ஆகிய அனைவரின் துன்பம் துடைத்து, அவர்களைத் தாங்குகிற தூணாவார்.*

## 1. இரங்கற் குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 17–9–2003 அன்றும், ஏ.டி. கருப்பையா அவர்கள் 6–11–2003 அன்றும், க. கந்தசாமி அவர்கள் 15–11–2003 அன்றும், தி. சுப்பிரமணியன் அவர்கள் 6–12–2003 அன்றும், ஆர். நாகசுந்தரம் அவர்கள் 16–12–2003 அன்றும், ஏ.எம்.டி. நாச்சியப்பன் அவர்கள் 17–12–2003 அன்றும், ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் 2–1–2004 அன்றும், கே. சகாதேவ கண்டர் அவர்கள் 1–2–2004 அன்றும் மறைவுற்றதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*திரு. எம். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேராவூரணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967 முதல் 1971 வரை நன்கு பணியாற்றியுள்ளார்.*

திரு. ஏ.டி. கருப்பையா அவர்கள் வால்பாறை (செ.வ.) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1980 முதல் 1984 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. க. கந்தசாமி அவர்கள் உசிலம்பட்டி தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 13–9–1971 முதல் 1976 வரையிலும், மீண்டும் ஆண்டிப்பட்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1977 முதல் 1980 வரையிலும் சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. தி. சுப்பிரமணியன் அவர்கள் ஆண்டிமடம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1977 முதல் 1980 வரை செவ்வனே பணியாற்றியுள்ளார்.

திரு. ஆர் நாகசுந்தரம் அவர்கள் திருச்சிராப்பள்ளி–2 தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967 முதல் 1971 வரை சிறப்பான முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஏ.எம்.டி. நாச்சியப்பன் அவர்கள் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1971 முதல் 1976 வரை பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் அவிநாசி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967 முதல் 17–6–1970 வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. சகாதேவ கண்டர் அவர்கள் தண்டராம்பட்டு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967 முதல் 1971 வரை பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினர்கள் மறைவினால் அவர்களை இழந்து தவிக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கு இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும்



தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்)*

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 1, திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

1–

### மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்

***23268–திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்ட அளவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் அமைப்பது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வட்ட அளவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, இருக்கையில் இல்லை.

[2004 பிப்ரவரி 5

வினா எண் 2, திருமதி பூபதி மாரியப்பன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

2–

## புதிய நீதிமன்றம்

***37908–திருமதி பூபதி மாரியப்பன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வலங்கைமான் தொகுதியில் புதிய நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வலங்கைமான் தொகுதியில் புதிய நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**திருமதி பூபதி மாரியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வலங்கைமான் தொகுதியில், நீதிமன்றம் செல்பவர்கள் திருவாரூர் மாவட்டம், வலங்கைமானிலிருந்து, தஞ்சை மாவட்டம், பாபநாசம் செல்கிறார்கள். பாபநாசம் 35 கிலோ மீட்டர் தூரம் உள்ளதால், வலங்கைமான் தொகுதியிலுள்ள மக்களின் தேவைக்கேற்ப அதனை மறுபரிசிலனை செய்து, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அடுத்த ஆண்டாவது புதிய நீதிமன்றம் அமைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலங்கைமான் வட்டத்திற்கான சிவில் வழக்குகள் கும்பகோணத்திலுள்ள இரண்டு உரிமையியல் நீதிமன்றங்களிலும், கிரிமினல் வழக்குகள் பாபநாசம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலும் நடைபெற்று வருகின்றன. வலங்கைமானிலிருந்து கும்பகோணம் 10 கிலோ மீட்டர் தொலைவிலும், பாபநாசம் 19 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. ஆகஸ்ட் 2003 நிலவரப்படி, வலங்கைமான் வட்டத்திற்கான சிவில் வழக்குகள் 49–ஆகவும், கிரிமினல் வழக்குகள் 525–ஆகவும் நிலுவையில் இருக்கிற சூழ்நிலையில்–மிகக் குறைந்த அளவிலே இருக்கிற காரணத்தால்–தற்போது அந்த இடத்தில் நீதிமன்றம் அமைப்பதற்கான கருத்துரு ஆய்வில் இல்லை.



**திருமதி பூபதி மாரியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலங்கைமானில் வாரத்திற்கு இரண்டு முறையாவது நீதிமன்றம் வருவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடமாடும் நீதிமன்றத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்கள். நடமாடும் நீதிமன்றம் அமைக்கப்படுமா என்பது குறித்து உயர் நீதிமன்றத்திடம் கருத்துக் கேட்கப்படும். உயர் நீதிமன்றத்திற்கு அந்தக் கருத்து சாத்தியக்கூறாக இருந்தால், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஏற்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலே நீதிமன்றங்களைக் கூடுதலாக்க வேண்டிய அவசியத்திலே நாம் இருந்துகொண்டிருக்கிறோம். காரணம், 10 ஆண்டுகளுக்கு மேலாகக்கூட வழக்குகள் எல்லாம் முடிவு பெறாமல் இன்னும் நிலுவையிலேயே இருந்து கொண்டிருக்கின்றன. 'காலம் தாழ்த்தப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி' என்று சொல்வார்களே, அந்த அடிப்படையிலே இன்றைய நடைமுறையில் குற்றங்கள் செய்யாத சிலர்கூட, தவறான புகார்கள் கொடுக்கப்படுகின்ற காரணத்தாலே, ஜாமீன் பெற்று நீதிமன்றங்களுக்குப் பல வருடங்களாக அலைந்து கொண்டிருக்கக்கூடிய அவலமான சூழ்நிலை எல்லாம் உருவாகிக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு, இன்னும் கூடுதலாக வட்ட அளவிலோ அல்லது மாவட்டங்களிலே 2, 3 இடங்களிலோ பல்வேறு நீதிமன்றங்களை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'Justice delayed is justice denied' என்று சொல்வார்கள். 'காலம்

தாழ்த்தி வழங்கப்படுகிற நீதி மறுக்கப்படுகின்ற நீதிக்கு ஒப்பாகும்' என்கிற நிலை இருக்கக்கூடாது என்கின்ற அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையில் இன்றைக்கு உயர் நீதிமன்றம் நல்ல நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாக, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில், quick disposal and quality judgement என்கின்ற வகையிலே நல்ல தீர்ப்புகள் எல்லாம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே 31-10-2003-லேகூட 'தினமணி' நாளிதழிலே 'விரைவு நீதிமன்றம் – தமிழ்நாடு சாதனை – ஜெட்லி பாராட்டு' என்ற தலைப்பின்கீழ், 'தமிழ்நாட்டிலே விரைவு நீதிமன்றங்கள் மாதத்திற்கு 51 வழக்குகளில் தீர்ப்புகள் வழங்குகின்றன' என்ற கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்கள். மொத்தம் 49 விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டதிலே, கிட்டத்தட்ட 65 ஆயிரம் வழக்குகள் தீர்வு செய்யப்பட்டு, இன்னும் கிட்டத்தட்ட 29 ஆயிரம் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. இன்னும் ஓராண்டிலே அந்த வழக்குகளும்கூட நிச்சயமாகத் தீர்க்கப்பட்டுவிடும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, ரூபாய் 140 கோடி மதிப்பீட்டில் கருத்துருவை மைய அரசுக்குப் பரிந்துரை செய்ததன் அடிப்படையில் மேல் நடவடிக்கை என்ன என்பதையும், அந்த நிதியைப் பெற மத்திய அரசை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து வலியுறுத்துமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்ததுபோல, மத்திய அரசுக்கு ஒரு கருத்துரு–concrete proposal–அனுப்பப்பட்டிருக்கிறது. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அவர்களும் கிட்டத்தட்ட 100 சதவிகிதம் என்று கொடுக்காமல், அவ்வப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணத்திற்கு ஏற்ப, மீண்டும் மத்திய அரசை நிச்சயமாக அரசு வலியுறுத்தும்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் ஏற்கெனவே கேட்ட கேள்விக்கு ஒரு பதிலாக, இந்திய நீதிபதிகள் சங்கம் மற்றும் பிறர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மேல் முறையீட்டு மனு— 21-3-2002-ல், உச்ச நீதிமன்றம் பிறப்பித்திருந்த தீர்ப்பின் அடிப்படையில், வட்ட அளவில்கூட நீதிமன்றங்கள் அமைத்து, quick disposal என்ற முறையில் வழக்குகளை விரைந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உயர் நீதிமன்றம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. உயர் நீதிமன்றம் அந்த ஆய்வைச் செய்து, அரசுக்குக் கருத்துரு அனுப்பும்பட்சத்தில், அரசு நிதிநிலைக்கு ஏற்ப அதைப் பரிசீலிக்கும்.



முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நீதிமன்றங்கள் தொடங்குவதற்கான வாய்ப்பு இல்லையென்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். குறிப்பாக திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியிலே Sub Court அமைப்பதற்கு அனைத்து கருத்துருக்களும் உருவாக்கப்பட்டு, தொடங்குகின்ற சூழ்நிலையில் நிறுத்தப்பட்டுவிட்டது. திரும்ப அந்தப் பகுதியிலே அந்தக் கோரிக்கை எல்லா மக்களிடத்திலேயிருந்தும் வந்துகொண்டிருக்கிறது. அது மிக அவசியத் தேவையாக இருக்கிறது. மிகப் பழமையான நீதிமன்றமாக அது செயல்படுகின்ற காரணத்தினாலே, மன்னார்குடியிலே சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுமா? இங்கே விரைவு நீதிமன்றங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். விரைவு நீதிமன்றங்கள் மூலமாக நிலுவையிலுள்ள வழக்குகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன என்றாலும், விரைவு நீதிமன்றங்களை மூடுவதற்குரிய முயற்சி எடுக்கப்படுவதாக ஒரு செய்தி சொல்லப்படுகிறதே, அப்படியிருந்தால் மீதமுள்ள அந்த வழக்குகள் பைசல் செய்யப்படுவதில் தடை ஏற்படுமே, அதைப் பற்றி அரசு என்ன கருதுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நிறைய கற்பனை வளம் உண்டு என்று நினைக்கின்றேன். நிச்சயமாக அந்த வழக்குகளை, இன்னும் 25,000-ஐ, முடிக்கின்ற பட்சத்தில், நீடிக்குமா, நீடிக்காதா என்பது அந்த நேரத்திலே முடிவு செய்யப்படவேண்டியது. இப்பொழுது அதை முடிவு செய்யவேண்டிய அவசியம் இல்லை. Sub Court இங்கே constitute செய்யவேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். ஒரு Sub Court

constitute செய்யவேண்டுமென்றால், recurring expenditure 26,80,000 ரூபாய்; non-recurring expenditure, அதாவது, தொடராச் செலவினம் ரூபாய் 6,00,000–மும் செலவாகின்றது. எனவே, ஒவ்வொரு இடத்திலும் Sub Court constitute செய்ய முடியுமா என்பது பற்றி, அரசின் நிதிநிலைமைக்கு ஏற்ற வகையிலேதான் முடிவு செய்யப்படும். இப்பொழுது சென்னையைப் பொறுத்த வரையிலே கிட்டத்தட்ட 95 நீதிமன்றங்கள் இருக்கின்றன. சென்னையைத் தவிர பிற மாவட்டங்களிலுள்ள நீதிமன்றங்களின் மொத்த எண்ணிக்கை 635. எனவே, இந்த நீதிமன்றங்களின் மூலம் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நாம் அதிகமான அளவிற்கு வழக்குகளை முடித்துக்கொண்டு இருக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றங்களிலே நீதிபதிகளை நியமிக்கின்ற நிலையில் இட ஒதுக்கீடு பின்பற்றப்படவில்லை. அதனால், தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குப் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்கின்ற கருத்து எல்லா இடங்களிலும் இருக்கின்றதே, அதற்கு அரசினுடைய நடவடிக்கை என்ன என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் ஒரே நீதிமன்றமாக, உரிமையியல் வழக்குகளையும், குற்றவியல் வழக்குகளையும், சில இடங்களிலே நடத்துகின்றன. அவ்வாறு நடத்துகின்றபோது, குறிப்பாகக் குறிப்பிடவேண்டுமென்றால், சிவகாசியில் உரிமையியல் வழக்குகள் அதிகமான அளவிலே தாக்கல் ஆகின்றன; குற்றவியலிலும் அதேபோன்று வழக்குகள் பதிவாகின்றன. ஆகவே, இந்த இரண்டு பிரிவுகளிலும் வழக்குகள் அதிகமாகப் பதிவு ஆவதால், தேக்க நிலைமை ஏற்படுகின்றது. இதை மாற்றுவதற்கு உயர் நீதிமன்றத்திடம் கருத்துரு அனுப்பி, அவ்வாறு இருக்கக்கூடிய இடங்களிலே உரிமையியல்



வழக்குகளைத் தனியாக நடத்துவதற்கு உரிமையியல் நீதிமன்றங்களையும், குற்றவியல் வழக்குகளைத் தனியாக நடத்துவதற்கு குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களையும் நியமிக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Judiciary set-up-ல் அந்த system–ஐ மாற்றவேண்டுமென்றால் அரசு தன்னிச்சையாக எந்த முடிவும் எடுக்கமுடியாது. எனவே, உயர் நீதிமன்றத்திற்கு மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கருத்து அனுப்பப்படும். உயர் நீதிமன்றம் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துப்படி, அது முரண்பாடாக இருந்தால் நிச்சயமாகக் கனிவோடு அதைப் பரிசீலிக்கும். அவர்கள் பரிசீலித்து அரசுக்கு அந்தக் கருத்துரு அனுப்பப்பட்டால், அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. இளவழகன்.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, District Sessions Court-களில் Bail Petitions தற்போது தாக்கல் செய்யப்படுகின்றன. அதே மனுக்களை விரைவு நீதிமன்றங்களில் தாக்கல் செய்து, Bail கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்தும் உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நெடு நாள் கோரிக்கையான, மதுரையிலே உயர் நீதிமன்றத்தினுடைய கிளை எப்போது தொடங்கப்படும்? எத்தனை உயர் நீதிமன்ற நீதிபதிகள்... (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் உரையைப் படியுங்கள்.

*வினா எண் 3, திரு. ஆ.கு.சி. அன்பழகன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

3–

[2004 பிப்ரவரி 5

## கோயில் திருப்பணி

***20482–திரு. ஆ.கு.சி. அன்பழகன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

பெரணமல்லூர் புராதன சிவன் கோயிலைச் செப்பனிடும் பணி மேற்கொள்ளப்படுமா?

முற்பகல் 10–15

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரணமல்லூர் அருள்மிகு கரையீஸ்வரர் திருக்கோயிலில் போதிய நிதி வசதியில்லாததால், திருப்பணிக் குழு அமைத்து பொது மக்கள் நன்கொடை வசூல் செய்யவும், உபயதாரர் மூலம் பணி மேற்கொள்ளவும் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, திருக்கோயிலைச் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் அன்னதானத் திட்டம், ஒரு கால சிறப்பு பூஜை, ஆலயங்கள்தோறும் புனரமைத்தல், இவற்றின் காரணமாக சோழர்களின் பொற்கால ஆட்சிக்கு இணையாக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி நடக்கிறது. பெரணமல்லூர் புராதனக் கோயிலான ஸ்ரீ கரையீஸ்வரர் திருக்கோயிலை, பொது மக்களிடமிருந்து நன்கொடை வசூல் செய்து அதன் மூலமாகச் செப்பனிடுவதற்குக் காலதாமதமாகும். பெரணமல்லூர் சிவன் கோயிலைச் செப்பனிடுவதற்கு, திட்டச் செலவு சுமார் 15 இலட்சம் ரூபாய் அளவிலே ஆகும். எனவே, அதிக நிதி வருவாய் உள்ள திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் திருக்கோயில் நிதியிலிருந்து அதைச் செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், பெரணமல்லூர் அருள்மிகு கரையீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய



2004 பிப்ரவரி 5]

அறநிலைய ஆட்சித் துறை ஆலயங்கள் உள்ள பட்டியலில் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிர்வாகத்தில், திரு. என். இராமமூர்த்தி, த/பெ. திரு நடேச முதலியார் என்பவர் பரம்பரை அல்லாத அறங்காவலராக இருந்து வருகிறார். ஆலயத்திற்குச் சொந்தமாக 80 சென்ட் நிலம் மட்டும்தான் உள்ளது. வருடத்திற்கு 660 ரூபாய் மட்டும்தான் வருவாய் வருகிறது. எனவே, அந்த ஆலயத்தினுடைய நிதியிலிருந்து எடுத்துச் செய்ய வசதியில்லை. வேறு வசதி படைத்த ஆலயத்திலேயிருந்தும், அங்கே இருக்கின்ற வசதி படைத்த நன்கொடையாளர்களிடமிருந்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வசூல் செய்தால், அதன் மூலமும்—இப்போது தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு 2,822 ஆலயங்கள் பொது மக்கள் மூலமாகவும், அறநிலையத் துறையின் மூலமாகவும் செய்யப்பட்டதைப்போல, இந்த ஆலயத்திலும்—திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. வில்வநாதன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 1991 முதல் 1996 வரை இருந்தபோதும், 2001 முதல் தொடங்கி இப்போது நடந்து வருகின்ற நிலையிலும், தமிழகத்திலேயுள்ள பல்லாயிரக்கணக்கான கோயில்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு, குடமுழுக்குச் செய்யப்பட்டு, ஒரு கால பூஜைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, அந்தந்தக் கோயில்களிலே அன்னதானம் வழங்கப்பட்டு மிகவும் சீரும் சிறப்புமாக நடந்து வருகிறது. வேலூர் மாவட்டத்திலே உள்ள மிகவும் புராதனமான, பழமையான பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில் திருப்பணி செய்யப்படாமலேயே இருக்கிறது. அந்தக் கோயில் உலகப் பிரசித்தி பெற்ற கோயில். காரணம் என்னவென்று சொன்னால், ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் வருகின்ற வைகுண்ட ஏகாதசி தினத்தன்று இந்தியா பூராவிலிருந்தும்கூட அந்தக் கோயிலுக்கு பக்தர்கள் வருகை தருகிறார்கள். ஸ்பெஷல் சர்வீஸ் பஸ்கள்கூட ஏற்பாடு செய்யப்படுகின்றன. அந்த வகையிலே மிகவும் புராதனம் பெற்ற கோயில். புண்டரீக மகரிஷிக்குக் காட்சி கொடுப்பதற்காக வெங்கடேசப் பெருமாள், ஆவுடையார் மேலே நின்றதாக ஒரு உருவ அமைப்பு, அந்த பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் ஆலயத்திலே உள்ளது. அப்படிப்பட்ட ஆலயம் நீண்ட நெடுங்காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல், சீர்கேடடைந்த

நிலையில் உள்ளது. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னாலே சில பெரியோர்கள் நிதி உதவி அளித்தார்கள். அந்த வகையிலே நானும்கூட 50,000/- ரூபாயினை அந்தத் திருக்கோயிலுக்கு அளித்து ஒரு மண்டபத்தைப் புனரமைப்புச் செய்ய ஏற்றுக் கொண்டிருக்கிறேன். கடந்த 4 மாதங்களுக்கு முன்னாலே காஞ்சிப் பெரியவர் அவர்கள் அந்தக் கோயிலுக்கு வருகை தந்து, அக்கோயிலில் திருப்பணி செய்வதற்கு ஆவன செய்வதாக உறுதி அளித்திருக்கிறார்கள். இருந்தபோதிலும், கடந்த 2 வருடங்களுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட அந்தத் திருப்பணியைத் தொடர்ந்து செய்ய முடியாமல், போதிய நிதி ஆதாரம் இல்லாமல் கிடப்பிலே இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்தத் திருக்கோயிலின்மீது கவனம் செலுத்தி, இந்தத் திருக்கோயிலில் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்யவேண்டுமாய் மிகவும் பணிவுடன் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நலிவுற்றிருக்கின்ற அனைத்து ஆலயங்களும் தேர்வு செய்யப்பட்டுத்தான், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2,822 ஆலயங்களில் திருப்பணி செய்திருக்கிறார்கள். இங்கே நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்—வைத்திருக்கின்ற கோரிக்கை—பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் ஆலயத்தில் திருப்பணிகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன; இன்னும் அந்தப் பணிகள் முடிவடையவில்லை என்று சொன்னார்கள். கூடிய விரைவில் அந்தத் திருப்பணிகள் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து, குடமுழுக்கு நடத்தப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

4—

## அருள்மிகு முருகன் திருக்கோயில்

***38860—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சென்னை, போரூரிலுள்ள பல்லவர் கால அருள்மிகு முருகன் திருக்கோயிலை அறநிலையத் துறை ஏற்று நடத்த, மக்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை போரூரில் அமைந்துள்ள முருகன் திருக்கோயில் எனப்படும் பாலமுருகன் திருக்கோயிலின் தற்போதைய நிர்வாகி, தன்னைப் பரம்பரை அறங்காவலர் என அறிவிக்கக் கோரி இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டப் பிரிவுகளின்கீழ் தாக்கல் செய்துள்ள மேல் முறையீடு, ஆணையர் முன்பு நிலுவையில் உள்ளது. ஆணையர் இதுகுறித்துத் தீர்ப்பு வழங்கியபின், மேல் நடவடிக்கை தொடரப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயிலானது, பக்கத்திலே இருக்கின்ற உத்திர இராமேஸ்வரம் ஸ்ரீ இராமநாத ஈஸ்வரன் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்திலே அமைந்திருக்கின்றது. ஆரம்பத்தில் ஓலைக் குடிசைகளாக இருந்த இந்தத் திருக்கோயில், படிப்படியாக 14 பேர் கொண்ட ஒரு குழுவினரால் மிகப் பெரிய அளவிலே கட்டப்பட்டிருக்கின்றது. இந்தத் திருக்கோயிலுக்குத் தனியாக யாரும் பரம்பரை அறங்காவலர்களாக உரிமை கொண்டாட முடியாத நிலை இருக்கின்றது. ஆகவே, பல ஆண்டு காலமாக நிலுவையிலே இருக்கின்ற இந்த மேல் முறையீட்டு மனுவை இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர் அவர்கள் விரைவில் விசாரித்து முடிவிற்குக் கொண்டு வர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை போரூரில் அமைந்துள்ள முருகன் திருக்கோயில் எனப்படும் பாலமுருகன் திருக்கோயில், பல்லவர் காலத்திய தொன்மை வாய்ந்ததல்ல. 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில், 1970-க்குப் பிறகே வளர்ச்சி பெற்றது. மேற்படி திருக்கோயில் புல எண் 365-ல் 8 கிரவுண்ட் இடத்தில் அமைந்துள்ளது. அந்த இடம் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அருள்மிகு இராமநாத ஈஸ்வரர் திருக்கோயிலுக்குச்

சொந்தமானது. மேற்படி முருகன் என்கிற பாலமுருகன் திருக்கோயிலுக்கு சொத்துகள் ஏதும் இல்லை. மேற்படி திருக்கோயிலின் தற்போதைய நிர்வாகி, தன்னைப் பரம்பரை அறங்காவலர் என அறிவிக்கக் கோரி, இந்து சமய அறநிலைய சட்டப் பிரிவு 63–ன்கீழ் சென்னை இணை ஆணையரிடம் ஓ.ஏ.2/88–ல் மனுத்தாக்கல் செய்து, அது தள்ளுபடி செய்யப்பட்டு, விசாரணை நிலுவையில் உள்ளது. ஆணையர் நீதிமன்றத்தில் உள்ள ஏ.பி. எண் 2/98 தீர்ப்பின் அடிப்படையில் மேல் நடவடிக்கை தொடரப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, தனியார் திருக்கோயில்களை இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முற்படும்போது, அறநிலையத் துறையினுடைய கொடைகள் சட்டப் பிரிவிற்கு ஒரு மனுவை அனுப்பி, தடையாணை என்ற பெயரில் அந்த நடவடிக்கைக்கு முட்டுக்கட்டை போட்டு விடுகிறார்கள். இதனால், பல திருக்கோயில்களில் திருப்பணிகள்கூட நடைபெறாமல் இருக்கின்றன. எனவே, இப்படி முட்டுக்கட்டை போடாமல் இருப்பதற்கு சட்டத் திருத்தம் கொண்டு வரவும், இப்படிப்பட்ட பல திருக்கோயில்களைத் தனியார் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிப்பதற்கு இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் தனியாக ஒரு குழுவை அமைத்து வழக்குகளை விரைந்து முடித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் என்பது வேறு, நீதிமன்றம் என்பது வேறு. நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்குகளை நீதிமன்றத்தின் மூலம்தான் முடிக்க வேண்டுமே தவிர, சட்டமன்றத்தின் மூலம் முடிக்க முடியாது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, திரு. கே.என். சேகரன், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்.





**5–**

## அரசு மகளிர் கலைக் கல்லூரி

***19535–திரு. கே.என். சேகரன்:**

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) திருவெறும்பூரில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு கலைக் கல்லூரி என்கிற அந்த concept இப்போது இல்லை. 16–10–2002 முதல் அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அந்தந்தப் பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளாக மாற்றப்பட்டு விட்டன. இனி, தேவையின் அடிப்படையில், நிதிநிலைமைக்கு ஏற்ப, அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவக்கிக் கொள்ளலாம். தற்போதுள்ள நிதி நெருக்கடியில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களால் துவக்க இயலாது. திருவெறும்பூரைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே இருபாலரும் படிக்கும் ஓர் அரசு கலைக் கல்லூரி செயல்பட்டு வருகின்றது. எனவே, அங்கு ஓர் அரசு கலைக் கல்லூரி அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவெறும்பூர் தொகுதியில், திருவெறும்பூரைச் சுற்றி நிறையத் தொழிற்சாலைகள், B.H.E.L., H.A.P.T., S.A.P. போன்ற மிகப் பெரிய தொழிலகங்கள் எல்லாம் இருக்கின்றன. நிறையப் படித்தவர்கள் அதிகமாக இந்தப் பகுதியிலே பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலிருந்து தினந்தோறும் 3,000–க்கும் அதிகமான மாணவிகள் திருச்சிக்கு பஸ்ஸிலே பிரயாணம் செய்து, அங்கே படிப்பதற்காகச் செல்கிறார்கள். அப்படிச் செல்கிறபோது அங்கே போக்குவரத்தில் மிகப் பெரிய நெருக்கடி ஏற்படுகிறது. பஸ்ஸிலே நெருக்கடி ஏற்படுவது

மட்டுமல்லாமல், அந்தக் கல்லூரி நேரத்திலே சுற்றுப்புறத்திலே இருக்கிற மக்களும் பஸ்ஸிலே பிரயாணம் செய்வதற்குக் கஷ்டப்படுகிறார்கள். இதுபோன்ற பிரச்சினைகளை எல்லாம் கருத்திலே கொண்டுதான், அங்கே மகளிருக்கெனத் தனிக் கல்லூரி அமைத்திட வேண்டும் என்ற இந்தக் கோரிக்கையை அரசிடம் வைத்திருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, அங்கே இருபாலர் அரசு கலைக் கல்லூரி இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அந்த மாணவிகள் விரும்புகிற பாடப் பிரிவுகள் அந்தப் பகுதியில் இல்லை. மேலும், பாரத மிகு மின் தொழிற்சாலையைச் சுற்றி நிறைய இடங்கள் இருப்பதால், அதனுடன் தொடர்பு கொண்டு உரிய நிலத்தையும் பெற்று, அந்தப் பகுதியிலே மகளிருடைய கஷ்டங்களையெல்லாம் நீக்குகின்ற வகையில் கல்லூரி அமைத்திட வேண்டும் என்பதை என்னுடைய கோரிக்கையாக வைக்கிறேன். அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இயங்கிக் கொண்டிருக்கிற அந்தக் கல்லூரிகூட B.H.E.L. compound–ல்தான் இயங்கி வருகிறது. அதிலே இப்போது 470 மாணவ, மாணவிகள் படித்து வருகிறார்கள். அதிலே 270 பேர் மாணவிகள். இப்போது அதிகப்படியான மாணவிகளை அங்கு சேர்ப்பதற்கான வாய்ப்பும் இருக்கிறது. மேலும் அந்தக் கல்லூரிகளிலே சுய நிதி அடிப்படையிலே வகுப்புகளைத் துவக்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, அங்கு இட நெருக்கடியோ, இடத் தட்டுப்பாடோ நிச்சயமாக இல்லை. மேலும் அந்தப் பகுதியிலே அரசு உதவி பெறுகிற இரண்டு அரசு கலைக் கல்லூரிகளும், சுய நிதி கலைக் கல்லூரிகள் நான்கும் இருக்கின்றன. ஆக, ஆறு கல்லூரிகள் ஏற்கெனவே அங்கே செயல்பட்டு வருகின்றன. அதுவே போதுமானதாக இருக்கிறது. எனவே, கூடுதலாக அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை. அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கிற மாணவிகள், இட நெருக்கடியின் காரணமாக கல்லூரிகளுக்குப் போவதற்கு வாய்ப்பு இல்லையென்று சொன்னால், இருக்கிற கல்லூரிகளிலேயே சுய நிதி அடிப்படையிலே வகுப்புகளைக் கூடுதலாக அமைப்பதற்கு அரசு ஆலோசனை வழங்கும்.



**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுய நிதித் திட்டத்திலே அங்கே தொடங்குவதற்கு அனுமதி அளிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி அந்த சுய நிதி வகுப்புகளை ஆரம்பித்தால் கல்விக் கட்டணம் அதிகமாக இருக்கும். ஏற்கெனவே இந்த அரசினுடைய பல்வேறு கட்டண உயர்வுகளால், மாணவிகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பஸ் கட்டண உயர்வால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சுய நிதி வகுப்புகளைத் தொடங்குவதற்கு அனுமதி அளித்திருந்தாலும்கூட, இன்னும் அவர்கள் சிரமப்படுவார்கள். ஆகவே, அந்தக் கட்டண உயர்வினால் அவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு, நீண்ட தூரம் பயணம் செய்கின்ற அந்த நேரத்தைக் குறைப்பதற்காகவும், அந்தப் பகுதியினுடைய பொது மக்களுடைய வேண்டுகோளுக்கிணங்கவும் மீண்டும் கனிவோடு பரிசீலித்து, இந்த அரசு மாணவிகளுக்கான கலைக் கல்லூரி அமைக்க முன்வருமா என்பதை அன்போடு அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகள் எப்போதுமே, தேர்தல் நெருங்க, நெருங்க, எதையாவது, அரசின் மீது பழி போட வேண்டுமென்று சொல்லி, அதுவும் கல்லூரி மாணவர்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற அந்த நோக்கத்தோடு, கல்விக் கட்டணம் உயர்ந்துவிட்டதாக வேண்டுமென்றே ஒரு * உண்மைக்கு மாறான பிரச்சாரத்தினைச் செய்து வருகிறார்கள். தயவுசெய்து எதிர்க்கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நான் சொல்வதைப் புரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மணி அவர்கள்கூட, சமீபத்திலே ஒரு பேட்டியிலே சொல்லியிருக்கிறார்கள்; நேற்றைக்குக்கூட ஆளுநர் உரையில் வெளிநடப்புச் செய்கிறபோதுகூட, கல்விக் கட்டணத்தை உயர்த்தியதாகச் சொன்னார்கள். நிச்சயமாகச் சொல்கிறேன். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் கல்விக் கட்டணம் உயர்த்தப்படவே இல்லை; கல்லூரிகளில் கல்விக் கட்டணம் உயர்த்தப்படவே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், வேண்டுமென்றே, தெரிந்தே, உயர்த்தப்பட்டுவிட்டதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றை நான் சொல்லிக்கொள்கிறேன். 1994 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணம்; இந்தக் கல்விக் கட்டணத்தை மாற்ற வேண்டுமென்று அரசு விரும்பி, பல்கலைக்கழகங்கள் மூலமாக ஒரு Draft Notification--அதாவது, உயர்த்தலாமா என்று ஓர் அறிவிக்கை செய்து, மக்களுடைய கருத்தை அறிவதற்கு ஒரு Draft

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

Notification--தான் போட்டிருக்கிறோமே தவிர, கல்விக் கட்டணம் நிச்சயமாக உயர்த்தப்படவில்லை. உயர்த்தப்பட்டதாகச் சொல்வது தவறு. அதுபோல மாண்புமிகு உறுப்பினரவர்கள், தேர்வுக் கட்டணமும் உயர்ந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். அதுவும் தவறு. தேர்வுக் கட்டணத்தைப் பொறுத்த வரையில், மாணவர்களுக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு எவ்வளவோ சலுகைகளை அளித்து இருக்கின்றது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், விண்ணப்பக் கட்டணம் 25 ரூபாய் என்று இருந்ததை 23 ரூபாயாக ஆக்கியிருக்கிறோம். அதேபோல, Statement of mark list வாங்குவதற்கு 200 ரூபாய் முன்பு வசூல் செய்து கொண்டிருந்தோம். இப்போது 120 ரூபாய்தான் வசூலிக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், மாணவர்கள் தேர்வுத்தாளை re-totalling செய்வதற்கு, இதுவரை 200 ரூபாய் கட்டணம் வசூலித்து வந்தோம். இப்போது 120 ரூபாயாகக் குறைத்திருக்கிறோம். அதேபோல, re-valuation–மறுமதிப்பீடு செய்வதற்கு, மாணவர்களுக்கு, ஒரு தேர்வுத்தாளுக்கு 450 ரூபாய் முன்பு கட்டணமாக இருந்தது. இப்போது 400 ரூபாயாகக் குறைத்திருக்கிறோம். தேர்வுக் கட்டணத்தைக்கூட, 45 ரூபாயிலிருந்து 58 ரூபாய் என்றுதான் உயர்த்தினோம். அது, பல்கலைக்கழகங்கள் உயர்த்தியது. ஆக, அரசுக்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை.

பல்கலைக்கழகங்களே முடிவு எடுத்து, U.G.–Under Graduate–க்கு 45 ரூபாய் தேர்வுக் கட்டணம் 58 ரூபாய் என்று உயர்த்தப்பட்டது. எவ்வளவு? தயவுசெய்து எண்ணிப் பாருங்கள். 45 ரூபாய் என்பது 58 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதேபோல P.G. Course--முதுகலைப் பட்டப் படிப்புக்கு 100 ரூபாய் என்று இருந்தது, 150 ரூபாயாக உயர்த்தப்பட்டது. உடனே சில அரசியல் கட்சிகளின் தூண்டுதலால் மாணவர்கள் போராட்டம் செய்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தாய் உள்ளத்தோடு, அந்தக் கட்டணத்தை உயர்த்த வேண்டாம் என்று சொன்னதன் அடிப்படையில், இப்பொழுது பழைய கட்டணமே வசூலிக்கப்பட்டு வருகிறது. எனவே, கட்டண உயர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை. தேர்வுக் கட்டணமும் உயர்த்தப்படவில்லை. கல்விக் கட்டணமும் உயர்த்தப்படவில்லை. தயவுசெய்து, வருகிற நாடாளுமன்றத் தேர்தலுக்கு இதை ஒரு ஆயுதமாக நீங்கள் பயன்படுத்த வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



முற்பகல் 10–30

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள். சுய நிதி வகுப்புகளை ஆரம்பிக்கிறபோது, மாணவர்களுக்குக் கூடுதலாகக் கட்டணங்கள் வசூலிக்கப்படுவதாகச் சொன்னார்கள். உள்ளபடியே அதையும் அரசு பரிவோடு பரிசீலித்து, அந்தக் கட்டணமும் ஏற்றப்படக்கூடாது என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். இப்பொழுது வருடத்திற்கு ரூபாய் 2000 முதல் 3000 தான் அந்த சுய நிதி வகுப்புகளுக்குக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. அதுவும் அதிகமான கட்டணம் அல்ல. இதற்கு மாணவர்களிடமும் நல்ல வரவேற்பு இருக்கிறது. இப்பொழுது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், 28 கல்லூரிகளில் 114 சுய நிதி வகுப்புகளைத் துவக்கி இருக்கிறோம். இதிலே மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் சேர்ந்திருக்கிறார்கள். கட்டண உயர்வு நிச்சயமாக இல்லை. இன்னொன்றையும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். உலகத்திலேகூட எந்த நாட்டிலும் உயர் கல்வியை இலவசமாகக் கொடுக்கிற நிலைமை இப்பொழுது இல்லை. ஆக, உயர் கல்விக்குக்கூட இலவசமாக நாம் கொடுக்க வேண்டும் என்கிற ஒரு நிலைமையை நாமே சொல்லி, மாணவர்கள் மத்தியில், பெற்றோர்கள் மத்தியில் ஒரு தவறான கருத்தைத் தயவுசெய்து பரப்ப வேண்டாம். அதாவது, உயர் கல்வி, U.G., P.G., என்று படிக்கிறபோதுகூட கல்விக் கட்டணம் ரூபாய் 2000 முதல் 3000 வரைதான் இருக்கின்றது. எனவே, இது ஒரு அதிகப்படியான கட்டணம் அல்ல. எனவே, அந்த வகையிலே சுய நிதி வகுப்புகளை ஆரம்பித்து, மாணவ, மாணவிகளினுடைய சேர்க்கை எண்ணிக்கையைக் கூடுதலாக ஆக்குவதற்கும் இந்த அரசு முயற்சிகளை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரவர்கள் குறிப்பிட்டதிலே அந்த * பிரச்சாரம் என்பது, உண்மைக்கு மாறான பிரச்சாரம் என்று மாற்றப்படுகிறது.

வினா எண் 6, திரு. ஜெமினி கே. இராமச்சந்திரன், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

6–

## அரசு தொழில்நுட்பக் கல்லூரி

***38864–திரு. ஜெமினி கே. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அரசுத் தரப்பில் புதிய தொழில்நுட்பக் கல்லூரி ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லை. எனவே, ஆரணி தொகுதியில் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. ஜெமினி கே. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று ஆரணி தொகுதிக்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டிருந்தேன். அந்த வாய்ப்பு இல்லை என்று சொன்னார். ஆனால், இந்த ஆண்டு வாய்ப்பு இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டாவது, அம்மாவின் நல்லாட்சியிலே, தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற தத்துவத்தின் அடிப்படையில், மறுபரிசீலனை செய்து ஆவன செய்யப்படுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி பகுதியைச் சார்ந்த திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்கெனவே 8 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. அந்த 8 பாலிடெக்னிக்குகளிலும் ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவிகளினுடைய எண்ணிக்கை 2,200. ஆனால் அதிலே மாணவ, மாணவிகள் சேர்ந்தது போக, 1027 இடங்கள் இன்னமும் காலியாக இருக்கின்றன. எனவே, மாணவர்கள் சேர்வதற்கு ஆர்வம் இல்லாத நிலையில், மேலும் அங்கே பாலிடெக்னிக்குகளை அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை. அது தேவையானதும் அல்ல என்று அரசு கருதுகிறது. எனவே, இப்பொழுது அந்தக் கேள்வி எழவில்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெமினி கே. இராமச்சந்திரன்.

**திரு. ஜெமினி கே. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தனியார் கல்லூரிகள் நடைபெறுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியார்கள் நடத்துகின்ற இடங்களிலே பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. அங்கே வசதி வாய்ப்புகள் சரியாக இல்லை என்பதால்தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். இப்பொழுது அரசுக்குச் சொந்தமான இடம், ஆர்.இ.டி.சி., எஸ்.வி. நகரம்–சத்திய விஜய நகரம் என்று சொல்வார்கள். அந்த இடத்திலே 50 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான நிலம், ஜாகீர் இடம் என்று இருக்கிறது. அது சும்மாவே இருக்கிறது. ஆகவே, அரசு சார்பில் கட்டினால் பிள்ளைகள் ஆர்வமாக அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் அன்போடு மாண்புமிகு அண்ணன் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, தனியார் பாலிடெக்னிக்குகளில் அடிப்படை வசதிகள் இல்லையென்று சொன்னால், அதை ஆராய்வதற்கு, அதைக் கண்காணிப்பதற்கு, மூன்று நபர்களைக் கொண்ட ஒரு Affiliation Committee இருக்கிறது. எனவே, எந்தெந்த பாலிடெக்னிக்குகளில் அடிப்படை வசதிகள் குறைவாக இருக்கின்றனவோ, அதை ஆய்வு செய்து, தேவைப்பட்டால் அதை de-affiliate செய்வதற்குக்கூட அந்த கமிட்டிக்கு அதிகாரம் இருக்கிறது. அதேபோல, அந்த பாலிடெக்னிக்குகளை நடத்துகிற நிறுவனத்திற்கும் அடிப்படை வசதிகளைப் பெருக்கிக்கொள்வதற்கு நாங்கள் வாய்ப்புகளைக் கொடுக்கிறோம். அந்த வகையிலே, இப்போது அந்த Affiliation Committee தனியார் பாலிடெக்னிக்குகளைக் கண்காணித்து வருகிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, புதியதாக பாலிடெக்னிக்குகளை ஆரம்பிப்பதைவிட, இருக்கிற பாலிடெக்னிக்குகளைத் தரம் உயர்த்தி, வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக்கொள்வதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த வகையிலே, இந்த ஆண்டு மட்டும் 3 அரசு பாலிடெக்னிக்குகளைத் தரம் உயர்த்துவதற்கு 2.5 கோடி ரூபாயை உலக வங்கியிடமிருந்து கடனாகப்

[2004 பிப்ரவரி 5

பெறுவதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்கான ஒப்பந்தம் இந்த மாதம் போடப்பட இருக்கிறது. அப்படிப் போடப்படுகிறபோது, இருக்கிற பாலிடெக்னிக்குகளின் தரம் உயர்த்தப்படும். தொடர்ந்து அரசு பாலிடெக்னிக்குகள், அரசு உதவி பெறும் பாலிடெக்னிக்குகள் இந்த நிதியைப் பெறுவதற்கான வசதி வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, இருக்கிற பாலிடெக்னிக்குகளைத் தரம் உயர்த்துவதற்கு இந்த அரசு முன்னுரிமை கொடுத்து, நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்திலே, அரசுக் கல்லூரிகளைத் தொடங்குவதில்லை என்ற ஒரு concept இருப்பதாகச் சொன்னார்கள். அரசுக் கல்லூரிகள் தொடங்கப்படாமல், தனியார் கல்லூரிகளைத் தொடங்குகின்ற நேரத்திலே, அதிலும் குறிப்பாக, சுய நிதிக் கல்லூரிகள் தொடங்குகிறார்கள் என்று சொன்னால், அவர்கள் கல்வியைக் கடைச் சரக்காக விற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஏழையெளிய, அதிலும் குறிப்பாக, தாழ்த்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட குழந்தைகள் அந்தக் கல்லூரிகளில் கட்டணம் செலுத்திப் படிக்க முடியாத நிலையெல்லாம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் கருத்தில் கொள்ள வேண்டும். இன்னும் தனியார் கல்லூரிகளிலே இட ஒதுக்கீடு முழுமையாகப் பின்பற்றப்படுவதே இல்லை, சுய நிதிக் கல்லூரிகளிலே. அப்போது தாழ்த்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழையெளிய குழந்தைகள் படிப்பதற்கு எங்கே செல்வது? ஆகவே, அந்த வகையிலே அரசுக் கல்லூரிகளைத் தொடங்குவது பொருத்தமாக இருக்கும் என்று, அதையும் இங்கே கேட்க விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், கல்விக் கட்டணம் உயர்த்தியதற்கு எதிர்க்கட்சிகள் எல்லாம், அதிலும் குறிப்பாக, நான் உட்பட நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிரச்சாரம் செய்வதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுவல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்திலே விவாதத்திற்கு இடமில்லை.

வினா எண் 7, திரு. பெ. வாசுதேவன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். (குறுக்கீடு) கேள்வி நேரத்திலே விவாதத்திற்கு இடமில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



2004 பிப்ரவரி 5]

7—

### மருத்துவ ஊர்தி

***42203—திரு. பெ. வாசுதேவன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி, பவுஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே அவசர கால ஊர்தி வழங்கப்பட்டுள்ளது. மதுராந்தகம் தொகுதி, பவுஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையம், முதன்மை அரசு ஆரம்ப சுகாதார நிலையமாதலால், இந்நிலையத்திற்கு அவசர கால ஊர்தி (Ambulance) வழங்க அவசியம் எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வாசுதேவன், இருக்கையில் இல்லை.

வினா எண் 8, திருமதி வளர்மதி ஜெபராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

8—

### விதவைப் பெண்களுக்கு பணி நிரந்தரம்

***43520—திருமதி வளர்மதி ஜெபராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் பதிலிப் பணியாளர்களாக பத்து ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் விதவைப் பெண்களை அரசு நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்குமா?

[2004 பிப்ரவரி 5

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் பதிலிப் பணியாளர்களாக 10 ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் விதவைகளைப் பொறுத்த வரையில், வழக்கு நீதிமன்றத்திலே இருப்பதால், தற்சமயம் எந்த முடிவும் எடுக்க முடியவில்லை.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதரவற்ற பெண்கள், நம்முடைய இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதன்முதலில் ஆட்சிப் பொறுப்பையேற்றிருந்த 1993 ஆம் ஆண்டு, மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையிலே பணியாளர்களாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில், சொந்தக் காலில் நிற்கக்கூடிய பெண்கள்; தினந்தோறும் அவர்கள் பணிக்கு வரவேண்டும் என்கின்ற நிபந்தனை அவர்களுக்கு இருக்கிறது. அவர்களுக்குப் பணி இருந்தாலும், இல்லாவிட்டாலும், நிரந்தரப் பணியாளர்கள் விடுமுறை எடுத்தால் மட்டுமே அவர்களுக்கு வேலையும், ஊதியமும் கிடைக்கிறது. பஸ் கட்டணமும் அவர்கள் கொடுத்து, வேலைக்கு வந்து, வேலையில்லை என்று சொல்லி திரும்பிப் போகவேண்டிய சூழ்நிலை. எனவே, சொந்தக் காலில் நிற்கிற பெண்கள், ஆதரவற்ற பெண்கள் இவர்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, அம்மா அவர்களால் நியமிக்கப்பட்ட இந்தப் பெண்களுக்கு, அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கின்ற வரை, ஒரு குறிப்பிட்ட தொகையையாவது—fixed amount—ஐயாவது மாதச் சம்பளமாகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் அனைவரும் தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயத்தில் வழக்கு எண் 2303/2003–ல் வழக்குத் தொடர்ந்துள்ளனர். வழக்கு தற்சமயம் நிலுவையில் இருப்பதால், இப்போது எந்த முடிவும் எடுக்க முடியாது.

முற்பகல் 10–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடு) இல்லையா? திரு. ஜே. ஹேமச்சந்திரன்.



2004 பிப்ரவரி 5]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜாஜி மருத்துவமனையில் பணியாளர்களை நிரந்தரப்படுத்துவதற்கு வழக்கு இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்திலே பல அரசு மருத்துவமனைகளிலே இதேபோன்று 'Contingency' என்ற முறையிலே பல பணியாளர்கள் பல வருடங்களாகப் பணியாற்றி வருகிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு அரசு ஏதேனும் ஒரு திட்டத்தை உருவாக்கி, அப்படி ஒரு 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றக் கூடியவர்களையாவது உடனடியாக நிரந்தரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் கிட்டத்தட்ட 468 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் அனைவருமே நீதிமன்றத்திற்குச் சென்றதால்–மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கும்போது, தற்சமயம் அவர்கள் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு நிலுவையில் இருப்பதால்–நீதிமன்றத் தீர்ப்பு வந்தவுடனே இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

9–

## ஆதிதிராவிடர் தொடக்கப் பள்ளி

***10720–திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) திருவாரூர் மாவட்டம், எடையூர் ஊராட்சி, சோத்திரியம் கிராமத்தில் ஆதிதிராவிடர் தொடக்கப் பள்ளி துவக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

[2004 பிப்ரவரி 5

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** ம. ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடையூர், சோத்திரியம் கிராமம் முழுமையாகவே ஆதிதிராவிடர்கள் நிறைந்து இருக்கிற பகுதி. அந்த எடையூரிலே மேல்நிலைப் பள்ளி இருந்தும்கூட, மாணவர்கள் ஆற்றைத் தாண்டிக் கடந்து வர வேண்டியிருக்கிறது. சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் முற்றிலும் ஆதிதிராவிடர்களாக இருப்பதால்—இதுவரை ஆதிதிராவிட நலத் துறையிலிருந்து இதுபோன்று பள்ளிகளைத் தொடங்காத துறையாக அந்தத் துறை இருந்துகொண்டிருக்கிறது—அந்தக் கிராமத்திலாவது கருணை கூர்ந்து ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளியைத் தொடங்குவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், எடையூர் ஊராட்சி, சோத்திரியம் கிராமத்தில் சுமார் 82 ஆதிதிராவிடர் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அக்குடும்பங்களிலிருந்து 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை 15 மாணவர்களும், 17 மாணவியர்களும், ஆக மொத்தம் 32 மாணாக்கர்கள் மட்டும் எடையூரில் ஒரு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தொடக்கப் பள்ளியில் பயின்று வருகின்றனர். மேலும் எடையூரில் அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்று செயல்பட்டு வருகிறது. இதைத் தவிர, 1/2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள அம்மனூரில் இரண்டு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. தற்போது ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் தேவைக்கேற்ப ஆங்காங்கே செயல்பட்டு வருவதால் சோத்திரியம் பகுதிக்கு எனத் தனியாக ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாகத் தொடக்கப் பள்ளி ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், சோத்திரியம் கிராமப் பகுதி மாணவர்கள் இரண்டு ஆறுகளைக் கடந்து வந்து படிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அப்படி வந்த மாணவர்களில் ஒருவர் பாலத்திலே இருந்து தவறி விழுந்து இறந்து போனதால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் வலியுறுத்தி இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.



2004 பிப்ரவரி 5]

'அனைவருக்கும் கல்வி' என்கிற Sarva Siksha Abhiyan திட்டத்தில்கூட அதனைச் சேர்க்க வேண்டுமென்று முயற்சி எடுத்தோம். நடக்கவில்லை. ஆகையினால், முற்றிலுமாக ஆதிதிராவிடர்களாக இருப்பதால், அரசு இதை மறுபரிசீலனை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுடைய நலனில் அக்கறை கொண்டுள்ள நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாணவ, மாணவியர்களுடைய கருத்தை, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**10–**

**பேருந்து பணிமனை**

**•9681–திரு. கே.கே. உமாதேவன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில், சிங்கம்புணரி நகரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய அரசுப் போக்குவரத்துப் பணிமனை துவக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் கோரியுள்ளது போன்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**திரு. கே.கே. உமாதேவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகமாக இருந்து, மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகமாக, காரைக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் சிங்கம்புணரியில் பணிமனை உருவாக்குவதற்காக, இடங்கள் எல்லாம் பார்க்கப்பட்டன. திருப்பத்தூரிலிருந்தும், பொன்னமராவதி கிளையிலிருந்தும் கிட்டத்தட்ட 15–க்கும் மேற்பட்ட பேருந்துகள் வந்து போகின்றன. அரசின் செலவினத்தைக் குறைக்கின்ற வகையில், ஒரு பணிமனை உருவாக்குவதற்கு அம்மாவின் அரசு முன்வருமா? அடுத்த ஆண்டிலாவது எடுத்துக்கொள்ள முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பல் 10–45

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு இப்போது வாய்ப்பில்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், அரசாணை எண் (டி) 61, போக்குவரத்துத் துறை, நாள் 9–9–1992–ன்படி, இனி வரும் காலங்களில் போக்குவரத்துக் கழகங்களின் தற்போதைய பணிமனைகளை முழுமையாகப் பயன்படுத்தும் வகையிலும், கட்டுமானத்திற்கான செலவுகளைக் குறைப்பதற்காகவும், ஒரு பணிமனையிலிருந்து மற்றொரு பணிமனைக்கு இடையேயுள்ள தூரம் 40 கிலோ மீட்டருக்குக் குறைவாக இருத்தல் கூடாது என்று வரையறுக்கப்பட்டுள்ளது. திருப்பத்தூர் பணிமனையிலிருந்து சிங்கம்புணரி நகர் 22.5 கிலோ மீட்டர் தூரத்திலேயே அமைந்துள்ளதால் சிங்கம்புணரியில் புதிய பணிமனை அமைக்க அவசியம் எழாத நிலை உள்ளது. மேலும், திருப்பத்தூர் பணிமனையிலிருந்து இயங்கும் சுமார் 10 பேருந்துகள் இப்பகுதியின் மக்களுடைய தேவையை நிறைவு செய்கின்றன. திருப்பத்தூர் பணிமனையிலிருந்து மொத்தம் 32 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதிலே 10 பேருந்துகள் சிங்கம்புணரிக்கு வந்து செல்கின்றன. சிங்கம்புணரி நகருக்கு மொத்தம் 29 பேருந்துகள் வந்து செல்கின்றன. அவற்றில் பொன்னமராவதியிலிருந்து 6 பேருந்துகளும், துவரங்குறிச்சியிலிருந்து 2 பேருந்துகளும், மேலூரிலிருந்து 7 பேருந்துகளும், நத்தத்திலிருந்து 4 பேருந்துகளும் வருகின்றன. போக்குவரத்துத் துறையிலிருந்து பல்வேறு பேருந்துகள் இங்கு இயக்கப்படுவதன் காரணமாக, தனித்தனியாக பல்வேறு டெப்போக்களிலேயிருந்து இயக்கப்படுவதன் காரணமாக, சிங்கம்புணரிக்கு என்று தனியாக, அதனைத் தலைமையிடமாகக் கொண்டு அங்கு புதிய பணிமனை (Bus Depot) அமைக்க அவசியமில்லை என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 11, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**11–**

## போக்குவரத்துத் தொழிலாளர் நலன்

***19354–திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் சார்பில் சேலத்தில் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சேலத்தில் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் தொழிலாளர் நலன் கருதியும், பொது மக்களுடைய நலன் கருதியும் கேட்கப்பட்ட கேள்வி. சேலம், நாமக்கல், திருச்செங்கோடு, சங்ககிரி ஆகிய நகரங்களில் கனரக வாகனங்கள் அதிக அளவில் உள்ளன. இந்த கனரக வாகனங்களை ஓட்டுபவர்கள், ஓட்டுநர் பயிற்சி மட்டுமே எடுத்து, உரிமம் பெற்று வந்து ஓட்டுகின்றார்கள். வாகனங்களின் தொழில்நுட்பத்தை அறியாதவர்களாக உள்ளனர். இதனால், வாகனங்களில் சிறிது பழுது ஏற்பட்டாலும், வாகனங்களை நடு ரோட்டிலேயே நிறுத்திவிடுகிறார்கள். இதனால் சாலை விபத்துகள் ஏற்பட்டு, பெரிதும் இழப்பு ஏற்படுகின்றது. எனவே, தொழில்நுட்பத்தை அறிந்துகொள்ள, சேலம் மாவட்டத்தில் தொழில்நுட்பக் கல்லூரியை வரும் ஆண்டில் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் பணியாளர்களின் குழந்தைகள் பொறியியல் பட்டப் படிப்புப் பயில

[2004 பிப்ரவரி 5

வாய்ப்பளிக்கும் வகையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1984–ல் ஈரோடு நகருக்கு அருகே சித்தோடு என்னும் இடத்திலே சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் சார்பாகப் பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டது. அதிலே இப்போது 360 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அதிலே 50 சதவிகிதம், அதாவது 180 இடங்கள், போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கல்லூரியை நடத்துவதற்கு ஒரு போக்குவரத்துத் துறைப் பணியாளரிடமிருந்து மாதம் 10 ரூபாய் வீதம் 740 ரூபாய், வட்டியில்லாக் கடனாகப் பெற்று, அந்தப் பணத்தை முதலீடு செய்து, அதிலிருந்து வருகின்ற வட்டி வருமானத்திலே இந்தக் கல்லூரி நடந்து வருகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், இன்றைக்குக் கல்லூரி நடத்துவதற்கு அரசிடமிருந்து எந்த நிதியும் இதுவரை பெறப்படவில்லை. தற்போது இந்தக் கல்லூரியே நிதி நெருக்கடியில் நடந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், இப்படிப்பட்ட நிதி நெருக்கடியில் மேலும் ஒரு தொழில்நுட்பக் கல்லூரியைத் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிப் பருவத்திலே மாணவர்கள் சாலை விதிகளைக் கடைப்பிடிக்க, அறிந்து கொள்ள, மாணவர்களுக்கு பள்ளிப் பாடப் புத்தகத்தில் அவற்றைப் பாடமாகக் கொண்டுவர போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 12, திரு. கோ. இரவிராஜ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.



2004 பிப்ரவரி 5]

12—

## கரும்பு விவசாயிகளுக்குப் பணம் வழங்குதல்

***1864–திரு. கோ. இரவிராஜ்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குக் கரும்பு அனுப்பி, அதற்குரிய பணத்திற்காகக் காத்திருக்கும் விவசாயிகளின் நிலை அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு எப்பொழுது பணம் வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2000–2001, 2001–2002 மற்றும் 2002–2003 ஆகிய அரவைப் பருவங்களுக்குக் கரும்பு வழங்கிய அனைத்து விவசாயிகளுக்கும் கரும்புக் கிரயம் நிலுவையின்றி வழங்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குக் கரும்பு கொடுத்த விவசாயிகளுக்கு இதுவரையிலே பணம் பட்டுவாடா செய்யப்படாமல், அந்த விவசாயிகள் எல்லாம் மிக்க வேதனையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அரசுத் தரப்பிலே பட்டுவாடா செய்யப்படும் என்று பலமுறை அறிவித்தும்கூட, இதுவரையிலே வழங்கப்படவில்லை. ஆகவே, விரைவாக அந்த விவசாயிகளுக்குக் கரும்புப் பணம் பட்டுவாடா செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க, தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கரும்பு ஆலைகளிலும் கரும்பு விவசாயிகளுக்குப் பணம் நிலுவையின்றி

வழங்கப்பட்டு விட்டது; நேற்று வரை நிலுவையின்றி வழங்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கரும்பு விவசாயிகளுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டதாகக் கூறினார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விவசாயிகளின் மேல் அக்கறை கொண்ட அரசு. என்னுடைய மதுரை மாவட்டத்திலே ஒரே ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இருந்தது. அங்கு கரும்பு அனுப்பிய விவசாயிகளுக்கு இதுவரை பணம் ஒன்றும் கிடைக்கவில்லை. அந்த மில்லும் ஓடவில்லை. அந்த மில்லை ஓட்டுவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கரும்பு விவசாயிகளுக்கும் நிலுவையின்றிப் பணம் வழங்கப்பட்டு விட்டது என்பதை ஏற்கெனவே தெரிவித்திருந்தேன். அந்தச் சர்க்கரை ஆலை நஷ்டத்திலே இயங்கியதால் அது மூடப்பட்டு விட்டது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, திரு. வீ. சந்திரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**13–**

### கிராபைட் தொழிற்சாலை

***22523–திரு. வீ. சந்திரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

சிவகங்கை, கோமாளிப்பட்டி கிராபைட் தொழிற்சாலைக்குப் போதிய நிதி ஒதுக்கீடு செய்து சீரமைக்க அரசு முன்வருமா?





**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு கனிம நிறுவனம் போதிய நிதி ஒதுக்கீடு செய்து சிவகங்கை, கோமாளிப்பட்டி கிராபைட் தொழிற்சாலையைச் சீரமைத்து செயல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வீ. சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கைச் சீமை, வீரம் விளைந்த பூமி. சிவகங்கைச் சீமையை ஆண்ட வீரமங்கை வேலு நாச்சியாரின் மறு உருவமாகத் திகழ்ந்து கொண்டு வரும் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன். வீரம் விளைந்த பூமியான சிவகங்கை, கோமாளிப்பட்டியில், 'இரும்பு வைரம்' என்று அழைக்கப்படும் கிராபைட் கிடைத்து வருகிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் கனிம வளர்ச்சியில் எந்த ஒரு முயற்சியும் இல்லாமல் கிடப்பில் கிடந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த ஆட்சிக் காலத்தில் 30 கோடி ரூபாய் கிராபைட் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு, அந்தத் திட்டம் வளர்ச்சி அடைந்து வருகிறது. கிராபைட்டிலிருந்து பொதுவாக, பெரும் அளவில் வெப்பம் தாங்கும் மூளைக் கற்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. வேகத் தடைகளுக்கான பிரேக் தயாரிக்கப்பட்டு வருகிறது. கரிக்குச்சி, பென்சில் போன்றவை தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணை கொண்டு, எனது தொகுதியில் கிராபைட்டைத் தயாரிக்கும் தொழிற்சாலையை உருவாக்கித் தர நமது அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குச் சொந்தமான, கோமாளிப்பட்டியிலுள்ள சிவகங்கை கிராபைட் தொழிற்சாலையைத் திறமையாகவும், இலாபகரமாகவும் நடத்த, பெங்களூரிலுள்ள ஐ.பி.எம். மற்றும் ஹைதராபாத்திலுள்ள ஏ.ஆர்.சி. இன்டர்நேஷனல் ஆகிய நிறுவனங்களின் ஆய்வு அறிக்கைகள் பெறப்பட்டு, அந்த ஆய்வு அறிக்கைகளை ஆராய்ந்து, புவனேஸ்வரிலுள்ள ஆர்.ஆர்.எல். நிறுவனம் அளித்த பரிந்துரையின்படி, கூடுதலாக ஒரு மிதவை இயந்திரம் பொருத்தப்பட்டு, கிராபைட் உற்பத்திச் செயல் திறன் அதிகரிக்கப்பட்டதோடு, சந்தையில் எதிர்பார்க்கப்படும் அளவிற்குத்

தரமிக்க கிராபைட் துகள்கள் 2002 முதல் உற்பத்தி செய்யப்படுகின்றன. சென்ற 2002–2003 ஆம் ஆண்டு மட்டும் 4830 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு, 4625 மெட்ரிக் டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2002–2003 ஆம் ஆண்டு விற்பனை செய்யப்பட்ட கிராபைட் துகள்களின் மதிப்பு ரூ.6.18 கோடியாகும். 2002–2003 ஆம் ஆண்டில் இத்தொழிற்சாலை முதல் முறையாக ரூ.116 இலட்சம் ரொக்க இலாபமும், ரூ.5 இலட்சம் நிகர இலாபமும் ஈட்டி, சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, நமது முதலமைச்சர் அவர்களால் இந்தத் தொழிற்சாலை துவங்கப்பட்டு ஏறத்தாழ 10 ஆண்டுகள் ஆகியும், இன்னும் அதனுடைய பிற தொழில்களை அங்கே அமைக்காமல், கிராபைட்டை சுத்தம் பண்ணக்கூடிய விகிதாச்சாரம் என்ன என்பதைக்கூட இன்னும் தெரிந்துகொள்ள முடியவில்லை. பிற தொழில்களையும் அங்கே துவங்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். சிவகங்கை மாவட்டம், மிகப் பின்தங்கிய பகுதி. அந்தப் பகுதியை முன்னேற்ற வேண்டுமென்றால் அந்த கிராபைட்டினுடைய உப தொழில்களை உடனடியாக அந்தப் பகுதியிலே ஏற்படுத்தித் தரவேண்டும். அதை இந்த அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கனிம நிறுவனம், கிராபைட் தொழிற்சாலையில், அந்தச் சுரங்கத்தில் கிடைக்கக்கூடிய 14 விழுக்காடு சுச்சா கிராபைட்டைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு சுமார் 200 மெட்ரிக் டன் அளவுள்ள கிராபைட்டை சுத்திகரிப்புச் செய்து, 28 மெட்ரிக் டன் அளவு, 85 விழுக்காடு முதல் 96 விழுக்காடு வரை பெற்று, இப்பொழுதுதான்—கடந்த கால ஆட்சியில் உள்ளதுபோல் இல்லாமல், இப்போது—இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல மேற்கொண்டு உப தொழிற்சாலைகளை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகளும், சந்தர்ப்பங்களும்



வசமாக இருந்தால் அதற்குண்டான முயற்சிகள் ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, திரு. எ.வ. வேலு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

14–

## கால்நடை மருத்துவமனை

**•20993–திரு. எ.வ. வேலு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், ஆளானந்தல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை ஒன்றியம், தண்டராம்பட்டு தொகுதியிலே, ஆளானந்தல் பகுதியிலே கால்நடை மருத்துவமனை துவக்கப்படுமா என்று கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயற்குறிப்பு இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆளானந்தல் பகுதியைப் பொறுத்தவரைக்கும் அந்தப் பகுதியிலே அண்டம்பள்ளம், மதுராம்பட்டு, தண்டரை, இசக்கிரிகாட்டேரி, கரிப்பூர் போன்ற கிராமப் பகுதிகள் அதிகமாக இருக்கின்றன. எனவே, ஒரு கால்நடை மருத்துவமனையை அங்கே துவக்க வேண்டும். அளவுகோல், அதாவது விதி, ஒரு மருத்துவமனையிலிருந்து இன்னொரு மருத்துவமனைக்கு இடையிலே இருக்கிற இடைவெளியைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு அரசாங்கம் துவக்குகிறதா, அல்லது அந்தப் பகுதியிலே இருக்கிற கால்நடைகளின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு கால்நடை மருத்துவமனைகளை அரசு துவக்குகிறதா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

[2004 பிப்ரவரி 5

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிராமத்தில் புதிதாகக் கால்நடை மருந்தகம் துவக்கப்பட வேண்டுமானால், அக்கிராமத்திலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள மொத்தக் கால்நடைகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்துக்கு மேற்பட்டு இருக்க வேண்டும். மேலும், புதிய கால்நடை மருந்தகம் அமைக்கப்படவுள்ள கிராமத்திற்கும், அங்கு ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிற கால்நடை மருந்தகம் உள்ள கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் 8 கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும்.

கால்நடை மருந்தகங்கள், கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டும், அந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே செயல்பட்டுவரும் கால்நடை நிலையங்களைக் கருத்தில் கொண்டும், கால்நடை மருந்தகங்கள் துவக்கப்பட உள்ள கிராமத்திற்கும், ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற கால்நடை நிலையங்களுக்கும் இடையே உள்ள தூரத்தைக் கருத்தில் கொண்டும் துவக்கப்படுகின்றன.

கால்நடை மருந்தகங்கள் தொடங்கப்பட வேண்டுமானால், அதற்கான தீர்மானங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் நிறைவேற்றித் தரவேண்டும்.

திருவண்ணாமலை மாவட்டம், ஆளானந்தல் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள மொத்தக் கால்நடைகளின் எண்ணிக்கை 15,500 ஆகும். மேலும், 6 கிலோ மீட்டர் தொலைவில் நாடழகானந்தல் கால்நடை மருந்தகத்தின் மூலமும், 2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள அண்டம்பாளையம் கிளை நிலையத்தின் மூலமும், 8 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஆவூர் கால்நடைக் கிளை நிலையம் மூலமும் இப்பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு சிறப்பாக சிகிச்சை அளிக்கப்படுகிறது. எனவே, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட ஆளானந்தல் கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் துவக்கிடத் தற்போது வாய்ப்பு இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளானந்தல் பகுதியையொட்டி கால்நடைகள் மிகவும் அதிகமாக இருக்கின்றன. அரசாங்கக் குறிப்பிலே அதிகாரிகள், 18 ஆயிரம், 10 ஆயிரம் என்று கொடுத்து இருக்கிறார்கள். அந்தப் பகுதிகளுக்கு நான் போகிறபோது, அதிகமான எண்ணிக்கையில் கால்நடைகள், அதாவது,



2004 பிப்ரவரி 5]

அங்கே மாடுகள், ஆடுகள் எல்லாம் அதிகமாக இருக்கின்றன. கோமாரி என்கிற வியாதி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, எவ்வளவு என்று எண்ணியாவது சொல்லுங்கள் (குறுக்கீடு) எவ்வளவு இருக்கும் என்றாவது சொல்லுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாடுகளைப் பொறுத்த வரைக்கும், கோமாரி என்கிற வியாதி காலிலே உள்ள குளம்பிலே வருகிறது. அந்தப் பகுதியிலே, கோமாரி என்கிற வியாதியால் பாதிக்கப்பட்டு அடிக்கடி மாடுகளெல்லாம் அதிகமாக இறந்து கொண்டிருக்கிறன. எனவேதான், அதைச் சுற்றி கிட்டத்தட்ட 10 கிராமங்களை நான் படித்தேன். அந்தப் பகுதியிலே கால்நடை மருந்தகம் இல்லை. எனவே, அந்தக் கோமாரி என்கிற வியாதியைத் தடுத்து நிறுத்துவதற்கு...

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகின்றவரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எ.வ. வேலு:** கோமாரி என்கிற வியாதி வந்தால், பக்கத்திலே, பக்கத்திலே இருக்கிற ஒவ்வொரு கிராமத்திலே இருக்கிற கால்நடைக்கும் அது தொற்றிக்கொள்வதற்கு வாய்ப்புண்டு. எனவே, அதைத் தடுப்பதற்காக இந்த ஆண்டு கால்நடை மருத்துவமனையைத் தொடங்குவதற்கு அரசாங்கம்–தயவுசெய்து நான் கேட்கிறேன்; இல்லையென்றால், அரசு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வது கோமாரியா? கோமாளியா? (சிரிப்பு)

**திரு. எ.வ. வேலு:** கோமாளி என்பது வேறு; கோமாரி என்பது வேறு. இது கோமாரி. கோமாளி நோய் ஏற்பட்டுவிட்டால், நீங்களும், நானும் இங்கே உட்கார்ந்து இருக்க முடியாது. எனவே, கோமாரி என்கிற அந்தத் தொற்று வியாதியைத் தடுப்பதற்கு இந்த ஆண்டு அரசாங்கம் ஆளானந்தலிலே ஒரு கால்நடை மருந்தகம் தொடங்குகிற குறிப்பு உண்டா? இல்லையென்று சொன்னால், முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்

தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், எந்தக் கால்நடைகளுக்கும் இப்போது கோமாரி நோய் வருவதே இல்லை. முற்றிலுமாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி அவர்களுடைய பகுதியிலே அந்த நோய் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்று, இந்த நிதியாண்டில் அங்கே ஒரு மருந்தகம் அமைப்பது பற்றி அரசின் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. அறிவிப்புகள்

### (அ) குற்ற வழக்கு விசாரணை முறைத் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) தொகுப்புச் சட்டமுன்வடிவு, 2002, பேரவையின் மறுபரிசீலனைக்காக ஆளுநரால் திருப்பியனுப்பப் பெறுதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

31–10–2002 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட, 2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறைத் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) தொகுப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2002) குறித்து, ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"MESSAGE FROM THE GOVERNOR

The Code of Criminal Procedure (Tamil Nadu Second Amendment) Bill, 2002 was passed by the State Legislative Assembly and was reserved by me under Article 200 of the



Constitution read with Clause (2) of Artcle 254 of the Constitution for the consideration of the President. The President has, in pursuance of the proviso to Article 201 of the Constitution, directed that the Bill be returned to the State Legislative Assembly to reconsider it and suitably amend section 167(2) of the Code of Criminal Procedure, 1973, including the proviso thereto, in its application to the State of Tamil Nadu, to provide for detention of an accused in custody for a further period of fifteen days, if the investigation of the case is transferred to any investigating agency, other than original investigating agency.

In accordance with the above direction, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby return the Code of Criminal Procedure (Tamil Nadu Second Amendment) Bill, 2002 to the State Legislative Assembly for reconsideration as per the directive of the President."

### (ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாற்றுத் தலைவர்கள் பட்டியல். பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)–ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் ஏழாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. செ.கு. தமிழரசன்

[2004 பிப்ரவரி 5

## 4. தகவல் கோரல்

### (அ) பேரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்த பாட்டாளி மக்கள் கட்சியினரின் சைக்கிள்களை, நிறுத்திய இடத்திலிருந்து காவல் துறையினர் அகற்றியது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். திரு. சி. இராசேந்திரன். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு..(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணி, என்ன? சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எல்லோரும் சைக்கிளில் வந்திருந்தோம். ரொம்ப அமைதியாக, யாருக்கும் இடையூறு இல்லாமல், போக்குவரத்திற்குப் பாதிப்பு இல்லாமல் வந்துதான் சைக்கிள்களையெல்லாம் நிறுத்தியிருந்தோம். நிறுத்தியிருந்த சைக்கிள்கள் எல்லாம் திடீரென்று காணாமல் போய்விட்டன. கேட்டால், எல்லாவற்றையும் போலீஸ் தூக்கிக்கொண்டு போய்விட்டது என்று சொன்னார்கள். இந்தச் சட்டமன்ற வளாகத்திலே, எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது இங்கே எழுப்பக்கூடிய பிரச்சினை இல்லை. சைக்கிள்கள் காணாமல் போய்விட்டன என்றால், திரும்ப எடுத்துக் கொடுக்கச் சொல்வோம்...



2004 பிப்ரவரி 5]

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று சொன்னால், திரும்ப எடுத்துக் கொடுக்கச் சொல்வோம் என்று...(குறுக்கீடுகள்) நாங்கள் அமைதியாக வந்து இருக்கிறோம். பாதுகாப்பான இடத்திலே அதை நிறுத்தி வைத்திருந்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கச் சொல்வோம்..(குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தங்களிடமிருந்து நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புவது, உறுப்பினர்கள் காரிலோ அல்லது அவர்களுக்குத் தகுந்த முறையிலே சைக்கிளிலோ, ஏதோ ஒன்றிலே வருகிறார்கள். ஒரு காலத்திலே, யானை மேலே, குதிரை மேலேகூட வந்திருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியும். ஆனால் நான் கேட்பது, சைக்கிளைக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்கள். அது சட்டமன்ற உறுப்பினர்களுடையது என்றும் தெரியும். அந்த சைக்கிள்களோடு பல வண்டிகள் கூடச் சேர்ந்து நிற்கின்றன. தாங்கள்கூட இப்போது வந்து பார்த்தால் தெரியும். ஆனால், மற்ற வண்டிகளை விட்டுவிட்டு, கொஞ்சம்கூட மரியாதையில்லாமல்—அப்படியே நிறுத்தியிருந்தால்கூட அவர்கள் சொல்லியிருக்கலாம்; சபாநாயகருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கலாம். 'உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே நிறுத்தியிருக்கிறார்கள்; அதை remove செய்யப் போகிறோம்; நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?' என்று உங்களைக் கேட்டிருக்கலாம். நீங்கள் எங்களைக் கூப்பிட்டுக்கூட தங்கள் அறையிலே அறிவுரை செய்திருக்கலாம். ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருடு போய் விட்டது என்று சொல்வதற்கும்...

**திரு. துரைமுருகன்:** கொச்சைப்படுத்துவதைப் போல, அவமானப்படுத்துவதைப் போல, திட்டமிட்டு, பாட்டாளி மக்கள் கட்சிக்கு மட்டும் இழைக்கப்பட்ட கொடுமை அல்ல; எதிர்க்கட்சிகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமை என்பதை நான் நிச்சயமாகத் தெரிவிக்கிறேன். (குறுக்கீடுகள்) எனவே, இதற்குத் தாங்கள் அருள்கூர்ந்து, (குறுக்கீடுகள்) நான் உங்களைக் கேட்கவில்லை; சபாநாயகரிடம் பாதுகாப்புக் கேட்கிறேன். (குறுக்கீடுகள்)

[2004 பிப்ரவரி 5

முற்பகல் 11–65

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி. (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** No, No. எங்களுக்கு ஒரு பாதுகாப்பை சபாநாயகரிடத்தில் கேட்பதற்கு எங்களுக்கு உரிமை இல்லையா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஜி.கே. மணி, நீங்கள் சைக்கிள்களை எங்கே நிறுத்துகிறீர்களோ, சொல்லுங்கள்; உரிய இடத்தில், உரிய பாதுகாப்புக் கொடுக்கப்படும். (குறுக்கீடுகள்) உரிய இடத்தில் உங்கள் சைக்கிள்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்படும்.

**திரு. துரைமுருகன்:** சைக்கிள்களைக் கொண்டுவந்து வைத்து விடுவார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். திரு. சி. இராசேந்திரன். (குறுக்கீடுகள்)

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** சைக்கிள்களில் வரக்கூடாதா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணி, என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். உரிய நடவடிக்கை நான் எடுக்கிறேன். (குறுக்கீடுகள்)

### (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்)



2004 பிப்ரவரி 5]

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். திரு. சி. இராசேந்திரன்.

***திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'2004 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 4 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு@ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்'

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல், திருமதி செல்வி முருகேசன்.

**திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. இராசேந்திரன் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. இராசேந்திரன்.

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளன்மையோடு வாரி வழங்குகின்ற வான்மேக நெஞ்சம் கொண்ட, கள்ளச் சிந்தை கொண்டுவரும் பகையைத் துள்ளியெழுந்து துண்டாடி, தூளாக்கி தமிழகத்தில் மீண்டும் பொற்கால ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும், காலத்தின் கொடையாய், கற்பகச் செல்வமாய், ஞானப் புதுமையாய், நம்மோடு மகிழ, நாற்றிசையும் கூடி நின்று போற்றிப் புகழ்ந்திட ஆற்றல்சார் அறிவு மேதையாய்த் தோன்றி, தமிழகத்திலே அரசு வீற்றிருந்து, முறை செய்து காப்பாற்றும் முத்தமிழ் வித்து, நம் திராவிடத்தின் சொத்து, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்து, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையில் உயர்திரு ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை

---

@ 129 முதல் 171 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

முன்மொழிந்து பேச எனக்கு வாழ்நாளில் மறக்க முடியாத வாய்ப்பு நல்கிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி, விவசாயிகளின் வேதனையைத் தீர்த்த விடிவெள்ளி என்று விவசாயிகளால் போற்றப்பட்டு, நெசவாளர்களின் துயர் துடைத்து, நெசவாளர்களின் நேசன் என்று நெசவாளர்களால் போற்றப்பட்டு, மீனவர்களின் உயிரை மீட்டுத் தந்த மீனவ நண்பன் என்று மீனவர்களால் போற்றப்பட்டு, தாழ்த்தப்பட்ட இனத்தைத் தலைநிமிரச் செய்த தலைவி என்று தாழ்த்தப்பட்ட இனத்தவர்களால் போற்றப்பட்டு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திய மேதை என்று பிற்படுத்தப்பட்ட வகுப்பினரால் போற்றப்பட்டு, சிறுபான்மையினரின் தோழர் என்று தோளிலே கைபோட்டுக் கொண்டு அடுத்த நிமிடமே தோல்விகளையே சந்தித்துப் பழகியவர்களின் முகமூடியைக் கிழித்தெறிந்து, சிறுபான்மையினரின் காவல் அரண் என்று சிறுபான்மை இனத்தவரால் பாராட்டப்பெற்ற எங்கள் குல தெய்வம், என்றும் எங்கள், என்னுடைய குடும்ப தெய்வம், என்றும் போற்றப்படும் எனது இதயதெய்வம் அம்மா அவர்களை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இங்கே ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்துகின்றபோது, பிரதான எதிர்க்கட்சியினரும், அவர்களுடைய தோழமைக் கட்சியினர் எல்லோரும் ஆளுநர் உரையைப் புறக்கணித்து வெளியிலே சென்றார்கள். அப்படிச் செல்கின்றபோது அவர்கள் வைத்த கோரிக்கையானது, காவிரி டெல்டா பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுக்காக காவிரியில் தண்ணீர் வரவில்லை; அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகளின் நலன் காக்கப்படவில்லை என்று குறை சொல்லி, குற்றம் சொல்லி வெளியே சென்றார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோளாக, அவர்கள் அரசாட்சியில் இருந்தபோது அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்காக அவர்கள் ஆற்றிய பணிகளையும், ஆற்றிய தொண்டுகளையும் இந்த மாமன்றத்தில் பதிய வைக்க விரும்புகிறேன்.

நேற்றையதினம், பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க.வினரும், அவர்களின் தோழமைக் கட்சியினரும் காவிரி டெல்டா பகுதியினுடைய விவசாயிகளுக்காக நீலிக் கண்ணீர் வடித்து வெளிநடப்புச் செய்தார்கள். அவர்கள் காவிரிப் பகுதி டெல்டா விவசாயிகளுக்குக் காவிரி நீர் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இன்று அது கிடைக்காததற்குக் காரணம் யார் என்பதை நாட்டு மக்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.



(மேசையைத் தட்டும் ஒலி) 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டு காலாவதியானது. அன்று முதலமைச்சராக இருந்தவர் இன்றையதினம் எதிர்க்கட்சியாக இருக்கின்றார்கள். அவர்கள் ஆட்சியில் இருந்த அந்த நேரத்தில், அந்த ஒப்பந்தத்தைப் புதுப்பிக்காத காரணத்தால் இன்று தமிழக காவிரி டெல்டா விவசாயப் பெருமக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் குற்றச்சாட்டாகப் பதிய வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இன்று எழுபவர்கள் இங்கே போராடுகிறார்கள். இன்றையதினம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்...(குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–10*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடக்கூடாது என்று இருந்தேன். முதலாவதாக எங்களை நீலிக் கண்ணீர் வடித்தார்கள் என்று சொன்னார். அதைக்கூட நான் light – ஆக எடுத்துக்கொள்கிறேன். ஆனால் அவர் சொல்கிறார்; அவருடைய மாண்புமிகு அமைச்சர்களே அதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டோடு காலாவதியாகிவிட்டது, அதை அன்று புதுப்பிக்கவில்லை என்று சொல்கிறார். அதுவே தவறு. அதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வாரா என்றால், இல்லை. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் காலாவதியாகாது என்பதுதான் தி.மு.க.வின் கொள்கை, அ.தி.மு.க.வின் கொள்கை. அதை உறுப்பினர் தெரிந்துகொண்டால் போதும்.

**திரு. சி. இராசேந்திரன்:** அதற்குப் புத்துயிர் கொடுக்காமல் விட்டுவிட்டது அன்றைய அரசு என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டாகும். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை அப்படித் தவற விட்டவர்கள், இன்றையதினம் விவசாயிகளுக்காக வாதாடுகிறார்கள். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காவிரி நீரைப் பெற்றுத் தரவேண்டும் என்று, அன்றையதினம் 1991–லிருந்து 1996 ஆம் ஆண்டு ஆட்சியிலே இருந்தபோது, தன்னுடைய உயிரையும், தன்னுடைய உடலையும் வருத்திக்கொண்டு இந்தத் தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்காக உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்கள். காவிரித் தண்ணீர் வரவேண்டுமென்று போராடி உண்ணாவிரதம் இருந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்; அதற்குப் பின்னாலே நடந்து முடிந்ததை எல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், நீதிமன்றத்திலே முறையிட்டு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக விவசாயிகளுக்கு நீதியைப் பெற்றுத் தந்தார்கள். காவிரி நீரைத் திறந்து விட வேண்டுமென்று, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீதிமன்றத்தின் மூலமாக ஆணையைப் பெற்றுக் கொடுத்து தமிழக விவசாயிகளுக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்தார்கள். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றையதினம் அப்படிச் செய்ததனுடைய விளைவாகத்தான் இன்றையதினம் அதற்கு உயிரோட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றையதினம் இருக்கிற எதிர்க்கட்சியினர் எல்லாம் விவசாயிகளுடைய நண்பனாகக் கருதிக்கொண்டு, அவர்கள் பல்வேறு நிலைகளில் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒன்றுமே செய்யாததைப் போலச் சொல்கிறார்கள். அதை நாம் கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்பதை நாட்டு மக்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

2001 ஆம் ஆண்டு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் எப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் விவசாயப் பெருங்குடி மக்களுக்காக அறிவித்தார்கள் என்பதை நாட்டு மக்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோதுதான் பல்வேறு திட்டங்களை அறிவித்தார்கள். ஆனால் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் வெள்ளை அறிக்கை வைக்கப்படாத ஒரு அரசு இருந்திருக்குமேயானால், எல்லா மாநிலங்களிலும் இருந்தாலும், தமிழகத்தைப் பொறுத்தவரை, கடந்த முறை ஆட்சியாளர்கள் ஆட்சி செய்ததனுடைய விளைவாக, அலங்கோல ஆட்சியினுடைய எடுத்துக்காட்டாக இந்தத் தமிழகத்தில் ஒரு வெள்ளை அறிக்கை வைக்கப்பட்ட ஆட்சி ஒன்று செயல்பட்டது என்று சொன்னால், அது திராவிட முன்னேற்றக் கழக அரசாகத்தான் இருக்கும். அப்படிப்பட்ட நிலையில் அன்றையதினம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் பல்வேறு திட்டங்களை அறிவித்தார்கள். நீண்ட காலமாக தமிழக விவசாயப் பெருமக்கள் எல்லாம் வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்டபோது, வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. இதற்கு இந்த அரசு எங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று சொல்லிப் போராடினார்கள், வாதாடினார்கள். அன்றையதினம்



ஆட்சியிலே இருந்த, முதலமைச்சர் பொறுப்பிலே இருந்தவர்களும் திராவிட முன்னேற்றக் கழக அரசும் ஒன்றைச் சொன்னார்கள்; இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே இருக்கிறபோதுதான் இப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம் செய்யாமல் இருந்திருக்கிறார்கள், இப்படிப்பட்ட நிலையில், 'நான் என்ன செய்வது? ரிசர்வ் பாங்கிற்கு எழுதிக் கொடுத்துவிட்டார்கள்'. நபார்டு பாங்கிற்கு எழுதிக்கொடுத்து விட்டார்கள் என்ற தவறான தகவலை இந்த நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லி இந்த மாமன்றத்தையும் ஏமாற்றி வந்தார்கள். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் பல்வேறு திட்டங்களை அறிவிக்கிறபோது, ஆளுநர் உரையைத் தயார் செய்து அன்றையதினமே விவசாயிகளுடைய வயிற்றிலே பால் வார்த்ததைப் போல 311 கோடி ரூபாயை வாரி வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுடைய தோழனாக இருந்து செயலாற்றி வந்தார்கள் என்பதை நாட்டு மக்கள் உணர்வார்கள்.

அதேபோல, தொடர்ந்து நம்முடைய பால் வார்த்த தன்மை, நம்முடைய மகிழ்ச்சி நீடிக்காத நிலையில், திடீரென்று பெய்த மழையின் காரணத்தால் தஞ்சை மாவட்டம், திருவாரூர் மாவட்டம், நாகை மாவட்டம், கடலூர் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள காவிரி டெல்டா விவசாயிகள் பாதிக்கப்பட்டபோது, தாய் உள்ளத்தோடு, கருணை உள்ளத்தோடு, 49 கோடி ரூபாயை வாரி வழங்கி விவசாயிகளுடைய தோழனாக இந்த நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தொடர்ந்து காவிரியில் தண்ணீர் வரவில்லை. கர்நாடக அரசு கை விரித்துவிட்டது. வறட்சியின் பிடியில் தமிழகம் சிக்கித் தவிக்கிறது, விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை என்று சொல்லி அங்கே கேட்டுக்கொண்டதற்கிணங்க இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தஞ்சைக்கு, தமிழ்ப் பல்கலைக்கழகத்தினுடைய நிகழ்ச்சிக்கு வருகை தந்தபோது, அன்றையதினம் அங்கே அமைச்சரவைக் கூட்டத்தையும், அதிகாரிகளையும் கூட்டி வைத்து, காவிரி டெல்டா விவசாயப் பெருங்குடி மக்களுடைய நலனிலே அக்கறை கொண்டு, தொழிலாளர்களுடைய நலனிலே அக்கறை கொண்ட காரணத்தால் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 175 கோடி ரூபாயை வாரி வழங்கி, விவசாயத் தொழிலாளர்களுடைய தோழனாக இருந்து உணர்ந்திருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–15

அதற்கு அடுத்தாற்போல் தீபாவளி வந்தது. தீபாவளி வருகிறபோது கூலித் தொழிலாளர்களிடம் பணம் இல்லை. தீபாவளியைக் கொண்டாட வேண்டும், வசதி படைத்தவர்கள் கொண்டாடுகிறார்கள். தொழிலாளர்கள் கொண்டாட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு தாயுள்ளத்தோடு–ஒரு தாய்க்குத்தான் ஒரு குழந்தையானது, பசியால் அழுகிறதா, நோயினால் அழுகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். அந்த அடிப்படையிலே–புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றையதினம், ஒரு குடும்பத்திற்கு ரூ.210 வீதம் 10 இலட்சம் குடும்பங்களுக்கு ரூ.21 கோடி வாரி வழங்கினார்கள். தொழிலாளர்களுடைய நலன் காக்கின்ற அரசாக, தாயுள்ளத்தோடு வாரி வழங்கினார்கள் என்பதை நான் மக்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல், வறட்சி வாட்டியபோதெல்லாம், கூலித் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வேண்டும் என்று சொல்லி பல்வேறு நிலைகளில் போராடியபோதெல்லாம், இங்கே தமிழகத்தில் இருக்கின்ற காவிரி டெல்டா பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்று எடுத்துரைத்தபோது, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொழிலாளிகளுடைய நலன் காக்கின்ற அரசாக, அந்தத் தொழிலாளிகளுடைய உற்ற தோழனாக விவசாயிகளுடைய நண்பனாக இருந்துகொண்டு, 30 கிலோ அரிசியை, தரமான அரிசியை வழங்கினார்கள். முன்பு உளுத்த அரிசி, புழுத்த அரிசியை வாங்கி வைத்ததையெல்லாம் இந்த நாட்டு மக்கள் நன்கு உணர்வார்கள். இப்படிப்பட்ட நிலையில், தரமான அரிசியை வழங்கி, தொழிலாளர்களுடைய நலன் காக்கின்ற அரசாக, மாதம் 30 கிலோ அரிசியை வாரி வழங்கி, தொழிலாளர்களுடைய நலன் காக்கின்ற இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்படிப்பட்ட திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்.

அதேபோல், காவிரி டெல்டா பகுதியில் இருக்கிற பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஆண்டுக்கு–நாம் எல்லாம், விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டோம் என்ற நிலையில் இருந்தபோது, விவசாயத்திற்கு ஆழ்குழாய்க் கிணறுகள் போட்டால்கூட மின்சாரம் கிடைக்கவில்லை என்ற நிலை கடந்த கால ஆட்சியில் இருந்தது. ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்னால்,



ஒரு ஆண்டுக்கு–7,000 மின் இணைப்பு வீதம், இரண்டு ஆண்டுகளில் 14,000 மின் இணைப்புகள் வழங்கி, விவசாயிகளுடைய தோழனாக இருந்து விவசாயிகளுடைய நலன் காக்கின்ற அரசாக இந்த அரசு செயல்பட்டு இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்ட, சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல், இன்றையதினம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது பல்வேறு நிலைகளில் உயர்ந்து இருக்கிறது. நேற்றையதினம் இங்கே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், இலவச மின்சாரம் வேண்டும் என்று சொல்லி வெளிநடப்புச் செய்தார்கள். அவர்களைப் பார்த்து நான் ஒன்று கேட்க விரும்புகின்றேன். அன்றையதினம் நீங்கள் ஆட்சியில் இருந்த காலத்தில், சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்று பிரித்து வைத்து, சிறிய விவசாயி மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றபோது 12 பைசாவாக இருந்ததை 14 பைசாவாக உயர்த்தி, 14 பைசாவாக இருந்ததை 16 பைசாவாக உயர்த்திக் காட்டியபோது அன்றையதினம் போராடிய கோவையைச் சேர்ந்த மரியாதைக்குரிய நாராயணசாமி நாயுடுவின், விவசாய சங்கத்தைச் சார்ந்தவர்களை அடித்துக் கொன்றவர்கள்தான்; இன்றையதினம் இலவச மின்சாரம் கேட்கிறீர்கள். நீங்கள்தான் மின்சாரத்திற்கு மீட்டர் வைக்க வேண்டும் என்று கையெழுத்திட்டுவிட்டு வந்தவர்கள். நீங்கள்தான் இன்றையதினம் இலவச மின்சாரம் வேண்டும் என்றும் சொல்கிறீர்கள். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்–அப்படிப்பட்ட ஏழை விவசாயிகளுக்கு, 5 எச்.பி. மோட்டார் பொருத்தி விவசாயம் பண்ணுகிறவர்களுக்கும், 3 எச்.பி. மோட்டார் பொருத்தி விவசாயம் பண்ணுகிற விவசாயிகளுக்கும், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு தாயுள்ளத்தோடு ஒரு எச்.பி.–க்கு ரூ.250 வீதம் மானியமாக வழங்கியது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகம் வறட்சியால் பாதிக்கப்பட்டபோது, பல்வேறு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. கடந்த கால ஆட்சியாளர்களைப் பார்த்தோமானால், கடந்த ஆட்சியிலே இருந்தவர்கள் எல்லாம், வறட்சி வந்தாலோ, வெள்ளம் வந்தாலோ, ஒரு பகுதியாகப் பிரித்து, தாலுகாவாக, கிராம வருவாய் அலுவலராகப் பிரித்துத்தான் அங்கே வறட்சி, வெள்ளம் என்று அறிவிப்பார்கள். ஆனால் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் சென்னை நீங்கலாக மீதம் உள்ள

28 மாவட்டங்களையும் இன்றையதினம் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, அப்படி வறட்சி மாவட்டங்களாக அறிவித்ததன் விளைவாகத்தான் பல்வேறு இடங்களில் தூர் வாரிய குளங்களையும், தூர் வாரப்பட்ட ஏரிகளையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேபோல், நில வரியை ரத்துச் செய்தும், வட்டியைத் தள்ளுபடி செய்தும், இப்படிப் பல்வேறு நிலைகளில் வறட்சியினுடைய நிலையைப் போக்குகின்ற முகத்தான் பல்வேறு திட்டங்களை உருவாக்கினார்கள். இன்றையதினம் நாம் வறட்சியில் இருக்கிறோம். வறட்சியில் இருக்கின்றபோது இந்த அரசு பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்து இருக்கின்றது. இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிக்கின்ற எந்தத் திட்டமானாலும் இந்தியாவிலே இருக்கின்ற அனைத்து மாநிலத்து முதல்வர்களும் அந்தத் திட்டத்தையே பின்பற்றிச் செல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் ஒரு முக்கியமான திட்டமாகத்தான் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மழை நீர் சேகரிப்புத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றையதினம் நமக்குக் குடிநீர் தேவை. குடிநீர்த் தேவை மட்டும் அல்லாமல், விவசாயத்திற்கும் தண்ணீர் தேவை. இப்படிப்பட்ட நிலைகளில் தண்ணீரைச் சேகரிக்க வேண்டுமென்று சொன்னால், அதற்குப் பல்வேறு நிலைகளில் அரசு திட்டங்களை உருவாக்க வேண்டுமென்ற நிலையை எடுத்துக்கொண்டுதான், இன்றையதினம் மழை நீர் சேகரிப்புத் திட்டத்திற்காகப் பண்ணைக் குட்டைகள் வெட்ட வேண்டும் என்று சொல்லியும், கட்டாயமாக எல்லா அலுவலகங்களிலும் மழை நீர் சேகரிப்புத் தொட்டி அமைக்க வேண்டும் என்றும், நிலத்தடி நீரை உயர்த்திட வேண்டும், உயர்த்துகின்றபோதுதான் அங்கே குடிநீர் கிடைக்கும், விவசாயத்திற்குத் தண்ணீர் கிடைக்கும் என்ற நிலையை உருவாக்கிக் கொடுத்து, உலகத்தில் உள்ள அனைவரும் போற்றத்தக்க வகையில், பாராட்டத்தக்க வகையில், மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை உருவாக்கிக் கொடுத்து விவசாயிகளுடைய நலன் காக்கின்ற அரசாக இந்த அரசு இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)





*முற்பகல் 11–20*

இதைப்போல் விவசாயிகளைப் பொறுத்த வரை, கடந்த ஆண்டு பல்வேறு நிலைகளில் விவசாயிகளுக்காக இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த காலங்களில் தென்னை மரங்கள் பட்டுவிட்ட நிலையில், தென்னை மரங்கள் பட்டுவிட்ட அவர்களுக்கு நிவாரணமாக 10 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியிருக்கிறது. பண்ணைக் குட்டை வெட்டுவதற்கு மட்டும் 27 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியிருக்கிறது. பாழ்பட்ட கிணறுகளைத் தோண்ட வேண்டுமென்ற நிலையில், ஏறத்தாழ ஒரு இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரம் பாழ்பட்ட கிணறுகள் தமிழகம் முழுவதும் இருக்கின்றன. அதிலே 5000 கிணறுகளை முதலிலே எடுத்துக்கொண்டு, அதற்கு நிதியினை ஒதுக்கீடு செய்து, அந்தக் கிணறுகளையும் இன்றையதினம் தோண்டி, விவசாயிகளுடைய நலன் காக்கின்ற அரசாக இந்த அரசு செயல்படுகின்றது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஆளுநருடைய உரையில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. நாட்டு மக்கள் பயன்பெறும் திட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே நாம் முக்கியமாக எடுத்துக்கொள்ள வேண்டுமானால், கிராமப்புறத்தில் இருக்கின்ற அனைவருக்கும் சாலை வசதிகள் தேவை. இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2001 ஆம் ஆண்டு தமிழகம் முழுவதும் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்கின்றபோது சாலைகளில் ஏற்பட்டிருந்த மோசமான நிலைகளை உணர்ந்த காரணத்தால், தாயுள்ளத்தோடு—கடந்த கால ஆட்சியாளர்கள் செய்யாததை, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டு ஆட்சியிலே இருந்தபோது செய்து முடித்த வேலைகளை, பின்னாலே வந்தவர்கள் செய்யத் தவறியதன் விளைவாக அந்தச் சாலைகள் எல்லாம் படுமோசமான நிலையில் இருப்பதை உணர்ந்த காரணத்தால், தாயுள்ளத்தோடு—இன்றையதினம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5809 கிலோ மீட்டர் ஊராட்சி சாலைகளைச் சீர்செய்வதற்கு 300 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறார்கள் என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு மக்கள் பாராட்டுகின்றார்கள். அவர்களுடைய பாராட்டுகளைப் பெறுகின்ற இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லதொரு ஆட்சியைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

[திரு. சி. இராசேந்திரன்] [2004 பிப்ரவரி 5

அதேபோல், மாவட்டத்திலே இருக்கின்ற 6492 கிலோ மீட்டர் மாவட்டச் சாலைகளைச் சீர்செய்வதற்கு ரூ.336.05 கோடி பராமரிப்புச் செலவினத்திற்கு நிதியினை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, அதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், குடிநீர் வசதி. தமிழ்நாட்டிலே இருக்கின்ற அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதியைச் செய்து கொடுக்க வேண்டும், ஏழைகள் இருக்கின்ற பகுதிகளில் எல்லாம் நல்ல திட்டங்களை, சாலை வசதிகளை அவர்களுக்குச் செய்து கொடுப்பதோடு, குடிநீர் இன்றியமையாத தேவை என்று கருதி, ரூ.572.16 கோடி செலவில் தமிழகம் முழுவதும் செய்து முடிப்பதற்கு, 6,000 குடியிருப்புகளுக்கு முதலில் வசதி அளிப்பதற்கு திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். அதற்கும் இந்த மாமன்றத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமை அடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக, தமிழகத்தை உருவாக்குவேன் என்று சூளுரைத்துக் கொண்டு, அனைத்துத் துறைகளிலும் அதற்குரிய முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறே பதம்' என்று சொல்வார்கள். அதற்கு உதாரணமாகத்தான் இன்றையதினம் தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துத் துறைகளில் முயற்சி எடுத்தாலும், கல்வித் துறையிலே இந்தியாவிலேயே முதன்மை நிலையை எட்டியிருக்கிறது தமிழகம் என்ற நிலைக்கு உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அவர்களுடைய முயற்சிக்கு வெற்றி கிடைத்திருக்கிறது என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கு உணர்வார்கள். அதனுடைய விளைவாக கிராமப்புறத்திலே இருக்கின்ற கிராமப்புற மக்கள் எல்லாம் படிக்க வேண்டும்; படிப்பதற்கு அவர்களுக்குக் கல்விதான் முக்கியம் என்பதை உணர்ந்த காரணத்தால் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்து இந்த 2 1/2 ஆண்டுக் காலத்தில் பல்வேறு நிலைகளிலே அப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்கினார்கள். அதிலே கல்வியிலே எப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கிராமப்புறங்களில், ஒரு கிராமத்திலிருந்து பக்கத்திலே இருக்கின்ற வேறொரு கிராமத்திற்குப் படிக்கச் செல்ல வேண்டுமென்று சொன்னால், 1 கிலோ மீட்டருக்கு மேல்



2004 பிப்ரவரி 5] [திரு. சி. இராசேந்திரன்]

சென்று படிக்க வேண்டுமென்ற நிலையை உணர்ந்த காரணத்தால், அப்படிப்பட்ட இடங்களில் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு கிலோ மீட்டர் விட்டு ஒரு கிலோ மீட்டர் இடைவெளிக்குள் ஒரு தொடக்கப் பள்ளி கட்டாயமாக இருக்க வேண்டுமென்ற நிலையில் தமிழகம் முழுவதும் 1,112 தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கியிருக்கிறார்கள். அதைப்போல், 1,075 நடுநிலைப் பள்ளிகளைத் தொடங்கியிருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியில் பணத்தைக் கட்டிவிட்டு உயர்நிலைப் பள்ளிகளையும், மேல்நிலைப் பள்ளிகளையும் வாங்க முடியாத நிலையில் இருந்த கிராமங்களுக்கு எல்லாம் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கிராமப்புறப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் நன்கு படிக்க வேண்டும், கல்வியிலே உயர வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் இன்றுவரை 260 உயர்நிலைப் பள்ளிகளை அனுமதித்திருக்கிறார்கள். அதைபோல் 300 மேல்நிலைப் பள்ளிகளை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். இப்படி இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று சொன்னால், அதற்கென்று ஒரு குழு வைத்து, அவர்களுடைய நிலையில் பரிந்துரை செய்தால், ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும். ஆசிரியர்களை மாற்றம் செய்ய வேண்டுமென்று சொன்னால், அதற்கும் அப்படிப்பட்ட நிலைதான். ஒரு மாவட்டச் செயலாளரை அணுக வேண்டும்; சட்டமன்ற உறுப்பினரை அணுக வேண்டும்; அமைச்சர்களை அணுக வேண்டுமென்ற நிலையை மாற்றி, ஆசிரியர்களுடைய நிலைக்கேற்ப அவர்களே உட்கார்ந்து பேசி, counselling முறையில் மாற்றங்களைச் செய்யலாம் என்ற நிலையை உருவாக்கிக் கொடுத்து, counselling முறையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 10,022 ஆசிரியர்களைப் பணி நியமனம் செய்திருக்கிறார்கள். பண்பாளர்களுக்கு, படித்த இளைஞர்களுக்கு இங்கே பணியில் சேருவதற்கு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 11–25

அதேபோல்தான், 2001 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வருகின்றபோது, இருந்த நிலைமைகளை, நாம் எண்ணிப் பார்ப்போமானால், கடந்த 2001-ல் ஆட்சியில் இருந்தபோது, அவர்கள் விட்டுச் சென்றபோது, கல்வியிலே இங்கே படிக்காதவர்களின் எண்ணிக்கை; 2001–2002 ஆம் ஆண்டு 16 சதவிகிதம் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லவில்லை. ஆனால்

[திரு. சி. இராசேந்திரன்] [2004 பிப்ரவரி 5

2002–2003–ல் அதில் 4 சதவிகிதம் குறைக்கப்பட்டது; அதாவது 12 சதவிகிதமாக அது குறைக்கப்பட்டுள்ளது. இது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த முயற்சியினுடைய வெற்றிக்குக் கிடைத்த திட்டமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் இன்றையதினம் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வேண்டும். படித்தவர்கள் வீட்டில் வேலையில்லாமல் திண்டாடுகிற நிலையைப் போக்குவதற்காகப் பல்வேறு நிலைகளில் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அப்படி அறிவித்து நடைமுறைப்படுத்தியதன் விளைவாக, பெண்களுக்கென்று உருவாக்கப்பட்டு, அதாவது இன்றையதினம் பெண் காவலர்கள், இரண்டாம் நிலைக் காவலர்கள் 2,306 பேரையும், ஆண் இரண்டாம் நிலைக் காவலர்கள் 8,431 பேரையும் பணியில் அமர்த்துவதற்குத் தேர்வு செய்து, படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

அதேபோல் கடந்த கால நிலைகளை எண்ணிப் பார்ப்போமானால், மதுக் கடைகள் இருந்தால் ஒரு தனி நபர்தான் இலாபம் அடைவார். தனிநபர் இலாபம் அடைவதால், இந்த அரசுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அதைத் தடுத்து அரசுக்கு நல்ல வருமானம் வரவேண்டும், படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, தாயுள்ளத்தோடு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்படிப்பட்ட கடைகளை அரசே நடத்துவதன் மூலமாக, படித்த இளைஞர்கள் 36,200 பேருக்கு பணியில் அமர்த்துகிற உத்தரவைக் கொடுத்து, வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பாகச் செயல்படுத்தி இருப்பதை நாட்டு மக்கள் மறக்கவில்லை. நன்றியோடு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையைப் பொறுத்த வரை, நம்முடைய தமிழகத்தில் உள்ளவர்கள் விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே, உலகத்திலேயே முன்னேற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் பல்வேறு நிலைகளில் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இங்கே திட்டங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி உருவாக்கிக்



2004 பிப்ரவரி 5] [திரு. சி. இராசேந்திரன்]

கொடுத்ததன் விளைவாக, விளையாட்டுத் துறைக்கென்று ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்குவோம் என்று சொன்னதை, இந்த நாட்டு மக்களும், விளையாட்டுத் துறையினரும் வரவேற்கிறார்கள், பாராட்டுகிறார்கள்; இந்த மாமன்றமும் பாராட்டுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு உதாரணமாகத்தான், விளையாட்டுத் துறையை ஊக்குவிப்பதன் மூலமாக நம் சென்னையில் டென்னிஸ் போட்டியை நடத்துவதற்கு வழியில்லை என்று சொல்லி, பழைய விளையாட்டு வீரர், திரு. விஜய் அமிர்தராஜ், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டபோது, ஒரு கோடி ரூபாயை வழங்கி, தொடர்ந்து இந்த சென்னை மாநகரத்தில் டென்னிஸ் விளையாட்டு நடைபெற வேண்டுமென்ற உத்தரவாதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் இந்த நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள்; இந்த மாமன்றமும் பாராட்டுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தகவல் தொழில்நுட்பத்தில் தமிழகம் முன்னேற்றத்தில் இருக்கிறது. அதனுடைய விளைவாகத்தான் இன்றையதினம் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்றுமதி 1.4 பில்லியன் டாலர், அதாவது ரூபாய் 7000 கோடி அளவை தாண்டியிருக்கிறது. இன்றையதினம் தொழில்நுட்பத்தில் முன்னேற வேண்டுமென்ற நிலையில், இந்தியாவில் முன்னேறுகிற மாநிலத்தில் முதல் மாநிலமாக நம் மாநிலம் இருக்கிறது. இன்றையதினம் அப்படிப்பட்ட நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். வளமான வாய்ப்பு உள்ள துறையாக உருவெடுத்திருக்கிறது. அந்தத் துறையை வளர்ப்பதற்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நிலைகளில் அதற்கு உறுதுணையாக இருந்து செயலாற்றுகிறார்கள் என்பதை நாட்டு மக்கள் உணர்ந்தாக வேண்டும்.

கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரை, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3 மாநகராட்சிகளுக்கும், 4 நகராட்சிகளுக்கும் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். அது ரூ.575.30 கோடி ஆகும். அதில், தஞ்சாவூர், கும்பகோணத்திற்கு நிதியை ஒதுக்கீடு செய்து அப்பகுதிகள் முன்னேறச் செய்வதற்கு ஆணையிட்ட டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு தஞ்சாவூர் மாவட்ட மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அப்படி

அறிவித்ததன் விளைவாக மகளிர் நலனை மேம்பாடு செய்யவேண்டுமென்ற நல்ல நோக்கத்தில், அவர்களுக்குரிய திட்டங்களை அறிவித்தார்கள். அவர்களுக்கு நல்ல நிலையை உருவாக்க வேண்டுமென்பதற்காக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த திட்டங்களை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றையதினம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'குடிமகன்' என்ற நிலையை மாற்றி, 'குடிமகளும்' இருக்கலாம் என்ற நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போல, ஒரு குழந்தை தந்தையின் பெயரை முன்னால் போடுவதற்குப் பதிலாக, தாயின் பெயரையும் போடலாம் என்ற நிலையை உருவாக்கிக் கொடுத்து, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண்களுடைய நிலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11–30*

தமிழகத்தைப் பொறுத்தவரை சுய உதவிக் குழுக்கள் 1.52 இலட்சம் இருக்கின்றன. அதிலே 25 இலட்சம் மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுக்களினுடைய சேமிப்பு ரூபாய் 393.64 கோடியாகும். கடன் உதவி 564 கோடி ரூபாயை மிஞ்சியுள்ளது. 2.5 இலட்சம் மகளிருக்கு ரூபாய் 10 கோடி செலவில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மகளிரைப் பொறுத்தவரை, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நமது நாட்டில் முன்னணியில் அவர்களைக் கொண்டு வந்து நிறுத்த வேண்டுமென்ற நிலையில் பல்வேறு திட்டங்களில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதன் விளைவுதான், மகளிருக்கென்று காவல் நிலையம்; மகளிர் காவல் நிலையத்தில் இருக்கின்ற காவலர்களை இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கமாண்டோக்களாக்கி இந்த நாட்டிலே முதன்மை இடத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் உணர்வார்கள்; நன்றியுடையவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொட்டில் குழந்தைத் திட்டத்தை இன்றையதினம் இந்த நாட்டு மக்கள் எல்லோரும் போற்றுகிறார்கள்; பாராட்டுகிறார்கள். அன்னை தெரசாவினுடைய பாராட்டையும் பெற்று, இந்தத் திட்டத்தை இந்த நாட்டு மக்களுக்காகக் கொணர்ந்தவர் இதயதெய்வம் டாக்டர்



புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆதிதிராவிடர்களுடைய நலன் காக்கின்ற, நன்மைகளைச் செய்கின்ற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், கருணை உள்ளத்தோடு இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த காலத்திலே இருந்தவர்கள் எல்லாம், எண்ணிப் பார்ப்பீர்களானால், அப்படிப்பட்டவர்களை எல்லாம் சம்பந்தி என்று சொன்னார்கள். அவர்களுக்கு உறவு என்று சொன்னார்கள். ஆனால் அவர்களைப் பற்றிக் கவலைப்பட்டதே கிடையாது. இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவிகள் படிக்க வேண்டும், நல்ல அறிவோடு வளர வேண்டும் என்ற நிலையினைக் கருத்தில் கொண்டு, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவி மேல்நிலைப் பள்ளிக்குச் செல்லவேண்டும் என்று சொன்னால் ஐந்து கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டும், இல்லையென்று சொன்னால் பேருந்திலே செல்ல வேண்டும் என்று இதில் இருக்கின்ற இடர்ப்பாடுகளை உணர்ந்த காரணத்தால், தாயுள்ளத்தோடு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலவச சைக்கிளை வழங்கி, அவர்களை உயர்த்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, இன்றையதினம் தமிழகத்தில் இருக்கின்ற ஆதிதிராவிடர்கள் வசிக்கின்ற, அவர்கள் இருக்கின்ற பகுதியில் இருக்கின்ற கிராமக் கோயில்களை எல்லாம் உயர்த்த வேண்டும், அதற்குக் கும்பாபிஷேகம் செய்ய வேண்டும், அந்தக் கோயில்களைச் சிறப்புடையதாகச் செய்ய வேண்டும் என்ற நிலையில், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களுடைய கோயில்களுக்கு, 6,000 பெரிய கோயில்களுக்கு 15 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஏழை ஆதிதிராவிட மக்கள் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்றவர்களுக்கு எல்லாம், 6,000 பெண்களுக்கு நிலம் வாங்குவதற்குரிய திட்டங்களை உருவாக்கிக் கொடுத்து, அதற்கு நிதி உதவி செய்கின்ற திட்டத்தையும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த கால அரசானது பள்ளி மாணவி தங்கிப் படிக்கின்றபோது ரூ.225தான் கொடுத்தது. ஆனால், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை 300 ரூபாயாக உயர்த்திக் கொடுத்து,

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைத் தலை நிமிர வைத்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.. (மேசையைத் தட்டும் ஒலி)

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற நெசவாளர்களுடைய நண்பனாக இருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியாளர்களின் செயலின் விளைவாக இலவச வேட்டி–சேலை வழங்க முடியாத நிலையை உருவாக்கிவிட்டு, நிதி நெருக்கடி செய்துவிட்ட காரணத்தால், அதைக் கொடுக்க முடியவில்லை; நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தார்கள். இப்போது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்படிப்பட்ட ஒரு நிலையைக் கருத்திலே கொண்டு, ஏழையெளியவர்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்றவர்களுக்கு இலவச வேட்டி–சேலையும் கொடுக்க வேண்டும். நெசவாளர்களும் வாழ்விலே வளம் பெறவேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 13 மாவட்டங்களிலே 25 ஆயிரம் நெசவாளர்களுக்கு இத்திட்டத்தை வரப்பிரசாதமாகக் கொடுத்து, 2.22 கோடி மக்கள் பயனடைகின்ற வகையில் 173 கோடி ரூபாய்க்கு இலவச வேட்டி–சேலைத் திட்டத்தை வாரி வழங்கியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஆறறிவு படைத்த நாம் நம் உடல்நிலை சரியில்லை என்று சொன்னால், ஓய்வெடுக்க வேண்டும் என்று நாம் எல்லோரும் நினைக்கின்றோம்; சுற்றுலா செல்கின்றோம். அப்படிப்பட்ட நிலையில் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வன விலங்குகளுக்கு ஓய்வு கொடுக்கவேண்டும், கோயில்களிலுள்ள யானைகளுக்கும் ஓய்வு கொடுக்கவேண்டும் என்ற நல்லதொரு திட்டத்தின் விளைவாக, 100 யானைகளுக்கு முதுமலை வன விலங்கு சரணாலயத்திலும் 'டாப் ஸ்லிப்'பிலும் மேற்குறிப்பிட்ட ஒரு மாதத் திட்டத்தினைத் தந்து, வெற்றிபெற்றுவிட்ட அந்த யானைகளினுடைய நலன் காக்கின்ற திட்டத்தின் மூலமாக வன விலங்குகளின்மேல் வைத்திருக்கும் அன்புக்குச் சான்றாகத் திகழ்கின்றார்கள் என்பதை நாட்டு மக்கள் உணர்கிறார்கள், நன்றியுடையவர்களாக இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இன்றையதினம் அறிவியல் தமிழ் முக்கியம் என்று சொல்கிறார்கள். தமிழ் மொழியைப் பொறுத்தவரை, அனைத்திந்திய அண்ணா திராவிட



முன்னேற்றக் கழகம் என்றைக்கு எல்லாம் ஆட்சியிலே இருக்கிறதோ, அப்போதெல்லாம் பல்வேறு நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும், அவர்களுடைய அரசியல் வாரிசாக, கழகத்தின் காவல் தெய்வம், தமிழகத்தின் ஒளிவிளக்கு, விவசாயிகளின் விடிவெள்ளியாக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக் கொண்டிருக்கிற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களும்தான் இந்த மொழிக்காகப் பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மதுரையிலே ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி முடித்துவிட்டு, அங்கேதான் அறிவித்தார்கள். உலகத்திலே எந்த நாட்டிலும் இல்லாத வகையில் மொழிக்கான ஒரு பல்கலைக்கழகமாக தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் தஞ்சையிலே உருவாக்கிக் கொடுத்தார்கள்.

அதற்குப் பின்னாலே எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டை தஞ்சையிலே இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடத்தியபொழுது அன்றையதினமே ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள். அந்த அறிவிப்புதான்; இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் இருக்கிறது, அந்த முத்தமிழோடு அறிவியல் தமிழையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நாம் அறிவிக்க வேண்டும் என்று அறிவித்தார்கள்.

முற்பகல் 11–35

ஒரு ஞானியானவர் ஒரு திட்டத்தை அறிவிக்கின்றபோது, கடந்த காலம் எப்படி இருந்தது, நேற்று எப்படி இருந்தது, இன்று எப்படி இருக்கிறது, நாளை எப்படி இருக்க வேண்டும் என்ற நிலையைக் கருத்திலே கொண்டு அறிவிப்பார். ஒரு அரசியல்வாதி நாளைய தேர்தலைச் சிந்தித்து, மக்களை ஏமாற்றும் திட்டங்களை அறிவிப்பார். ஆனால் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவியல் தமிழை ஏறத்தாழ 8 ஆண்டுகளுக்கு முன்னாலேயே அறிவித்தார்கள். அந்த அறிவிப்புக்குப் பின்னால், பின்னாலே வந்தவர்கள் அறிவியல் தமிழ் தேவையில்லை என்று விட்டுவிட்டார்கள். அப்படிப்பட்ட நிலையில், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றையதினம் அறிவியல் தமிழை எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரை கட்டாயமாக ஆக்கி, அதற்கு அறிவியல் தமிழ்ப் புத்தகத்தையும் இலவசமாகக் கொடுத்து, தமிழ்

மொழிக்கும், தமிழ் இனத்திற்கும் பெருமை சேர்க்கின்ற முகத்தான் இத்திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதற்காக தமிழ் இனத்தைச் சேர்ந்த அனைவரும் பாராட்டுகிறார்கள். நன்றி தெரிவிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தூங்காமை கல்வி துணிவுடமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு"

என்ற வள்ளுவருடைய வாய்மொழிக்கேற்ப, கனிவு, தெளிவு, துணிவு, இம்மூன்றும் வேண்டும் என்ற, நம்மையெல்லாம் உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சொல்லுக்கேற்ப, இந்த குண நலன்களைப் பெற்றுள்ள மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமை ஏற்று நடத்திக் கொண்டிருக்கிறாகள். இந்த அரசை மிகச் சிறந்த அரசாக என்றும் மக்கள் பாராட்டுகிறார்கள். மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையை வரவேற்று, பாராட்டிப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

***திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகின்ற வாய்ப்பினை எனக்கு வழங்கிய எனது உயிருக்கு நிகரான உத்தமத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, என்னுடைய கருத்துகள் சிலவற்றை எடுத்துவைக்க விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையில் முதலிலிருந்து இறுதி வரை படித்துப் பார்க்கின்றபோது, 52–வது பாராவில், 'தமிழ் மொழி, கலை மற்றும் பண்பாட்டினை மேம்படுத்துதல், மாநிலத்தின் வளம் செறிந்த பண்பாடு மரபுகளைப் பாதுகாத்தல்' என்ற அந்த வாக்கியங்களைப் படிக்கின்றபோது, தமிழில் ஆளுநர் உரையைப் படிக்காமல், இரண்டாவது ஆண்டை இந்த அரசு கடத்திக் கொண்டு, மரபுகளைப் பாதுகாத்தல் என்று சொல்வது ஒரு வேதனையான முரண்பாடு என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, இதற்கு விளக்கம் நான்தான் சொல்ல வேண்டும். நான் ஏற்கெனவே சொல்லியாகிவிட்டது. இதற்கான விளக்கம் ஏற்கெனவே சொல்லப்பட்டு விட்டது.

**திரு. இ. புகழேந்தி:** தமிழில் உரை நிகழ்த்துவது என்பதற்குக் காலமில்லை என்று முன்பு சொல்லப்பட்டாலும், எதிர்க்கட்சிகள் உள்ளே இருந்தால் தமிழில் உரையாற்றுவோம் என்று சொன்னதை, எதிர்க்கட்சிகள் இருந்தால்தான் இந்த அரசாங்கத்திற்குத் தமிழ் உணர்வே வரும் என்பதற்கு ஓர் ஆதாரமாகக்கூட நாங்கள் எடுத்துக்கொண்டு சொல்ல முடியும். ஆனால், தமிழில் உரை நிகழ்த்த வேண்டும் என்பது எங்களுடைய அழுத்தமான கருத்து; வேண்டுகோள். உரை நிகழ்த்தாததற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கண்டனத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–40*

அதைப்போல 54–வது பாராவில், 'அனைத்துத் துறையிலும் சாதனைகளை நிகழ்த்தி இருக்கிறோம்' என்ற பெருமைமிகு சொல்லாட்சியைப் பயன்படுத்தி இருக்கிறீர்கள். அனைத்துத் துறை என்கின்றபோது நாங்கள் இதிலே பார்க்கிறோம்; தொழிலாளர் நலத்தைப் பற்றி இல்லை, வியாபாரிகளுடைய நிலை குறித்து இல்லை, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பிரச்சினைகளைக் குறித்து அல்லது அவர்கள் நல்வாழ்வைக் குறித்து எந்தவிதமான குறிப்பும் இல்லை. ஆக, இப்படிப் பல துறைகளைப் பற்றித் தொடாமலேயே, அனைத்துத் துறைகளிலும் சாதனைகளை நாங்கள் செய்திருக்கிறோம் என்று சொல்வது, மாண்புமிகு முதல்வர் அவர்களை மகிழ்விப்பதற்காக, இந்த உரையைத் தயாரித்துள்ளார்கள். அது உயர் அதிகாரிகளாக இருக்கலாம், இன்னமும் கூட ஐ.ஏ.எஸ்., அதற்கு மேலாக இருக்கக்கூடியவர்களாகக்கூட, சீனியர் ஐ.ஏ.எஸ். அதிகாரிக்ளாகக்கூட இருக்கலாம். அவர்கள் எதைக் கவனித்திருக்கிறார்கள்? துறைகளைக் கவனிக்கவில்லை. முதல்வர் அவர்கள் மகிழ வேண்டும் என்பதற்காக, அவருக்குப் பிடிக்கும் என்பதற்காக, பாரா மொத்தம் 54, தமிழில்; ஆங்கிலத்திலே பாராகிராப் மொத்தம் 63; ஆங்கிலத்திலே 36 பக்கம்; தமிழிலே 45 பக்கம், இவைகளையெல்லாம் கூட்டுகின்றபோது 9 வருகிறதா என்றுதான் அதிகாரிகள் தங்களுடைய கவனத்தைச் செலுத்தியிருக்கிறார்களே தவிர, துறைகளைப் பற்றிக் கவனித்ததாக இதிலே நான் கொள்ள முடியவில்லை. ஏனென்றால், 2003–2004, மத்தியத் திட்டக் குழுவிலே கேட்கின்ற தொகைகூட 8,001 கோடியாம். சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத்

திட்டத்திற்காக பக்கம் 35—லே குறிப்பிட்டிருப்பதுகூட 18 ஆயிரம் கோடியாம். எப்படியாவது 9 வரவேண்டும் என்று கருதுகின்ற போக்கினை அதிகாரிகள் அல்லது ஆளுநர் உரையைத் தயாரித்தவர்கள் யாராக இருந்தாலும் கவனித்திருக்கிறார்கள். ஏன், விசாரணை அதிகாரிகள்கூட இந்த அரசாங்கத்தில் 999 அரசு ஊழியர்கள்—ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்த விசாரணை அதிகாரிகள் உத்தரவிலேகூட 9. இப்படி இவற்றைக் கவனிப்பதிலேயே காலம் செலுத்துகிறார்கள்.

ஒரு அரசாங்கம் தெளிவாக இருக்கவேண்டும். நாங்கள் இதைச் செய்திருக்கிறோம், இப்படி நிலைநிறுத்தியிருக்கிறோம் என்று சொல்ல வேண்டும். ஆனால் பாரா 31—லே சொல்கிறார்கள்; பேருந்து குறித்துச் சொல்கின்றபோது, 'கிட்டத்தட்ட 2500 பழைய பஸ்கள் மாற்றப்படும்', அதேபோல, பாரா 32—லே சொல்கின்றபோது, குடியிருப்புகளுக்குக் குடிநீர் சம்பந்தமாகச் சொல்கின்றபோது, 'கிட்டத்தட்ட 10 ஆயிரம் கைப்பம்புகள் விசைப் பம்புகளாக மாற்றப்படும்', பாரா 25—ல் சொல்கின்றபோது 'கிட்டத்தட்ட 72 திட்டங்கள்'. இந்தக் கிட்டத்தட்ட, கிட்டத்தட்ட என்று தொடர்ந்து போட்டுக் கொண்டு வருபவர்கள், பாரா 51—லே 100 யானைகள் என்று இருப்பதைக்கூட கிட்டத்தட்ட 100 யானைகள் என்று போட்டிருப்பார்களேயானால், அது சரியாக இருந்திருக்கும். ஏன் என்றால்,100 யானைகள் என்று சொல்வதேகூட, அரசாங்கம் அன்று சொன்ன கணக்கு வேறு—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். 100 யானைகள் என்பது, அது முடிக்கப்பட்ட பணி. அதனால் 100 என்று, தோராயமாக அல்லாமல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பேருந்து வாங்குவது பற்றி, 2500 பேருந்துகள் வாங்க இருக்கிறோம் என்று சொல்கிறபோது, வருங்காலத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, அது கிட்டத்தட்ட என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைத் தயவுசெய்து புரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் அமைதியாக இருங்கள். நாங்கள் பேரவைத் தலைவரிடம்தானே பேசுகிறோம்? (குறுக்கீடுகள்) பின்னால் இருந்து பேசினாலும் (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத்



தலைவர் அவர்களே, 100 யானைகள் என்று போட்டிருப்பது, முடிக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் 100 யானைகளே அங்கே இல்லை என்பதால்தான், கிட்டத்தட்ட என்று சொல்ல வந்தேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நேரில் சென்று பார்த்தோம். இரண்டு இடங்களிலேயும் இந்த யானைகள் முகாம்களிலே 100 யானைகள் இருந்தன என்பதை நாங்கள் சொல்கிறோம். நீங்கள் பார்த்திருந்தால் அதைச் சரியாகச் சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** ஆகவே நம்முடைய இந்த ஆளுநர் உரை மீது—

**திரு. துரைமுருகன்:** கிட்டத்தட்ட பதில் சரியாக இருக்கிறது. மேற்கொண்டு போகலாம்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, வியாபாரிகளைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள், வணிக வரித் துறை அமைச்சராக இருக்கின்றபோது, அந்த வணிகர் நல வாரியத்தில், ஓராண்டு அந்த வாரியத்தினுடைய உறுப்பினர்களுக்கு எந்த நலப் பணிகளுமே செய்யாத அரசுதான் கடந்த ஆண்டில் இருந்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** நிதிநிலை அறிக்கை போடுகிறபோதுகூட வணிகர்கள், வணிகத் துறையைச் சேர்ந்தவர்களையெல்லாம் அழைத்து வைத்து, அவர்களோடு ஆலோசனை செய்து, பிறகு பட்ஜெட்டைத் தயாரித்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) நான் பேசுகிறேன், இருங்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுவது, வணிகர் நல வாரியத்தினுடைய தலைவராக மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் இருந்தார்கள். வணிகர் நல வாரியத்தினுடைய நலத் திட்டங்களை அந்த ஆண்டுகளில் கொடுக்காத நிலை கடந்த ஆட்சியில் இருந்தது என்பதைத்தான் நான் சுட்டிக் காண்பிக்கின்றேன்.

[2004 பிப்ரவரி 5

*முற்பகல் 11–45*

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருத்துகளை ஆளும் கட்சியிலே இருக்கக்கூடிய உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது காவிரிப் பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு சரியான அணுகுமுறையைக் கொண்டிருந்த காரணத்தினால் ஐந்து ஆண்டு காலமும் ஜூன் மாதம் 12 ஆம் தேதி காவிரி நீர் திறந்து விடப்பட்டு, தஞ்சைக்கு வந்து சேர்ந்தது, டெல்டா பகுதிகளுக்கு. அதோடு இன்னொன்று, நான் அதிகமாக உள்ளே போக விரும்பவில்லை. ஏற்கெனவே பல முறை விவாதிக்கப்பட்டது. காவிரிப் பிரச்சினையிலேகூட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அணுகுமுறைதான் என்னுடைய கொள்கை, என்னுடைய அணுகுமுறை என்று, மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களே சொல்லியிருப்பதையும் நான் இங்கே நினைவுபடுத்த, சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகள் வேதனையில் இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நன்மை செய்ததாக அல்லது செய்திருப்பதாகச் சொல்லப்பட்டு, எழுதப்பட்டு இருப்பதிலே உண்மையில்லை. கொள்முதல் நிலையங்கள் சரியாகத் திறக்கப்படாத காரணத்தினால், கொள்முதல் நிலையங்கள் ஏற்கெனவே இருந்தவை மூடப்பட்டன நாகை மாவட்டத்திலே, உங்களுக்கும் தெரிந்திருக்கும்; எல்லோரும் பார்த்திருப்பீர்கள்; பத்திரிகைகளிலே வந்தது. விளைந்த நெல்லை வாங்காத காரணத்தினால், மக்கள் போராடி, வேதனையோடு கடலில் கொட்டி இருக்கின்ற அந்தக் காட்சியைக்கூட நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏன் கொள்முதல் நிலையங்கள் போதுமான அளவில் திறக்கப்படவில்லை?

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்கவும். 291 இடங்களில் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, நாளொன்றுக்கு சுமார் ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் கடலில் கொட்டியதிலே எந்தப் பிரச்சினையும் இல்லையென்று சொல்கிறபோது, நான் அதற்கு மேலே சொல்வதற்கு ஒன்றும் இல்லை.



2004 பிப்ரவரி 5]

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்பட்டு இருந்தால், கடலில் கொட்டுகிற நிலை ஏன் உருவானது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லைக் கடலில் கொட்டக்கூடிய அளவுக்கு உழவர்கள் ஒன்றும் பெரிய பணக்காரர்கள் அல்ல. ஒருவேளை அரசியல் கட்சிகளுடைய தூண்டுதலால் நடந்த நிகழ்வாக இது இருக்கலாம்.

**திரு. ஜி. பழனிசாமி:** ஒரு நிமிஷம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்வது போன்று நேரடிக் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இருக்கின்றன. கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. காவிரியில் தண்ணீர் இல்லை. குளம், குட்டைகளில் தண்ணீர் இல்லை. விவசாயிகள் உற்பத்தி செய்திருக்கிற நெல்லுக்கு 72 நிபந்தனைகள். அதனால் ஒரு மூட்டை நெல்கூட விற்பனை செய்ய முடியாத அளவுக்கு அவ்வளவு நிபந்தனைகள் போட்டு தெருவிலே நின்று கொண்டிருக்கிறான் விவசாயி. ஆகையால், அதனை purchase பண்ண முடியாத காரணத்தினால்தான் கொண்டு போய்க் கடலில் கொட்டுகிறான். அதை இல்லையென்று மறுக்க முடியுமா? எத்தனை...*(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)* நான் சொல்கிறேன் பதிலை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் எத்தகைய தகுதியுள்ள நெல்லாக இருக்க வேண்டுமென்று மாநில அரசு எந்தவித ஆணையும் இடவில்லை. மாண்புமிகு திரு. பழனிசாமி அவர்களுடைய கவனத்திற்குச் சொல்கிறேன். மாநில அரசு எந்தவித நிபந்தனையையும், இப்படித்தான் நெல் இருக்க வேண்டும் என்று விதிக்கவில்லை. Food Corporation of India–விற்கு ஒரு ஏஜென்டாக மாநில அரசு தற்போது நெல்லைக் கொள்முதல் செய்கிறது. Food Corporation of India இந்தியாவிலே உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் சில விதிகளை நிர்ணயித்திருக்கிறது. அந்த விதிகள்படி, அவர்களுடைய சோதனையாளர்களும் உள்ளிட்டு சோதனையிட்டுத்தான் அதை வாங்குகிறார்கள். மாநில அரசுக்கும், இப்படிப்பட்ட தரம் இருக்க வேண்டுமென்ற நிபந்தனைக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[2004 பிப்ரவரி 5

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத் தொடர்ந்து விவசாயிகளுடைய நிலை மகிழத்தக்க அளவிலே இல்லை. விவசாயிகளுடைய வாழ்க்கை நிலையும் இப்போது மிகப் பெரிய துயரத்தில் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு, புரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு இங்கே விவரங்கள் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. சாலைப் பணியாளர்கள், மக்கள் நலப் பணியாளர்கள், கூட்டுறவுப் பணியாளர்கள், அதல்லாமல், 999 அரசு ஊழியர்–ஆசிரியர்கள்; ஏற்கெனவே 40,000; அதற்கு மேல் இது ஒரு ஆயிரம். ஆக 41,000.

கௌரவ அட்டை என்ற பெயரிலே 'எச்' முத்திரை குத்தி 1 கோடியே 15 இலட்சம் நடுத்தரக் குடும்பங்கள் ரேஷன் பொருட்களை வாங்க முடியாத அளவுக்கான ஒரு நிலையையும் உருவாக்கி வேதனைகள் எல்லாம் இருக்கின்ற நிலையிலேதான் இங்கே.....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதுவும் தவறான தகவல். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'எச்' முத்திரையின் அடிப்படையில் 1 கோடியே 20 இலட்சம் பேர் ரேஷன் கார்டு வாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இது உண்மைக்கு மாறான தகவல். 'எச்' முத்திரையின் அடிப்படைக்கு உட்பட்டு இருக்கின்றவர்களே சுமார் 5 இலட்சம் பேர்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு அவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டுகள் வழங்குவதிலே ஏற்பட்டிருக்கின்ற குளறுபடிகளிலேயிருந்து, குடும்பத் தலைவர்தான் வாங்க வேண்டுமென்று சொல்லியதிலேயிருந்து பிறகு ஒவ்வொரு படியாக மாறிக் கொண்டே வந்து, பிறகு 'எச்' முத்திரை என்ற அளவுக்கு வருகின்றபோது, பாதிக்கப்பட்டிருக்கின்றவர்கள் குறித்து என்னுடைய கணக்கீட்டைச் சொன்னேனே தவிர, வேறு அல்ல.

*முற்பகல் 11–50*

காவிரி டெல்டா பகுதியிலேயே, தஞ்சை மாவட்டம் மல்லூரைச் சேர்ந்த தமிழ்வளவன் 5 ஏக்கரில் சம்பா பயிரிடுகிறார். போதிய நேரத்திலே, கதிர் முற்றுகிற நேரத்திலே நீர் வரவில்லை. உளுந்து பயிரிடுகிறார். மீண்டும் நீர் வராத நேரத்தில் பட்டினியாலும், வேதனையாலும் வாடிய அவருடைய குடும்பத்தைப் பார்க்க முடியாமல் பூச்சி மருந்து குடித்து இறந்து போகின்ற



2004 பிப்ரவரி 5] [திரு. இ. புகழேந்தி]

அந்தச் செய்தியை நான் (குறுக்கீடு) இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், நாட்டிலே இருக்கின்ற பல்வேறு அமைப்புகளிலே பல பேர் வேலை இல்லாமல் பாதிக்கப்பட்டு, குடும்பங்கள் வேதனைக் கடலிலே மூழ்கியிருக்கின்ற நேரத்தில், ஏதோ விவசாயிகள் எல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதைப் போல இவர்கள் சொல்கிறார்கள்.

ஆளுநர் உரையிலே பக்கம் 9–லே சொல்கிறார்கள். இந்த ஆண்டு தீபாவளி, பொங்கல் எல்லாம் மகிழ்ச்சியாகக் கொண்டாடினார்களாம். இப்படி ஆளுநர் உரையிலே, 'மகிழ்ச்சியாகக் கொண்டாடினார்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது, முதலமைச்சரை வேண்டுமென்றால் மகிழ்ச்சிக்கு உள்ளாக்குவதற்குப் பயன்படுத்தலாம். அதைப்போல எண்ணிலே அவருக்குப் பிடித்தது; அவர் என்ன நினைக்கிறாரோ அவற்றையெல்லாம் கொண்டு வரவேண்டும் என்று கருதலாமே தவிர, உண்மை அதுவல்ல. உண்மை என்பது வேறாக இருக்கிறது.

இலவச வேட்டி–சேலைத் திட்டம். எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும்; தொகுதிகளிலே கொடுக்கப்பட்டபோது, நகர்ப்புறங்களுக்கு வரவேயில்லை என்பது வேறு; கிராமப்புறங்களிலேகூட, கொடுக்கப்பட்ட நிலையிலே எத்தனை கிராமங்களிலே போராட்டங்கள்; மறியல்கள்? மக்கள் சாலை மறியலிலே ஈடுபட்டார்கள். அதிலே...

***மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரை இல்லாத அளவிற்கு, நல்லதொரு தரமான வேட்டி–சேலைகளை இலவசமாக வழங்க வேண்டும், அதுமட்டுமல்லாமல், அந்தத் துணிகள்கூட, பருத்தி இழையுடன், பாலியஸ்டர் இழை கலந்த வேட்டி–சேலைகளாக உற்பத்தி செய்து இலவசமாக வழங்கப் பட்டன. அந்த ஏழை மக்கள் உடுத்தக்கூடிய உடைகள் நல்லதொரு தரமான உடையாக இருக்க வேண்டும் என்று எங்களுக்கு உத்தரவு பிறப்பித்து, அதன் மூலமாக அந்தத் துணிகளை இப்போது மக்களுக்குக் கொடுத்து வருகின்ற வேளையிலே, இந்தத் துணிகள் மிகத் தரமானதாக இருப்பதனாலே, எல்லோரும் ஆர்வமுடன் கேட்பதனாலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு 81 இலட்சம் சேலைகள், 74 இலட்சம் வேட்டிகள் என்பதைக்கூட உயர்த்தி, இப்போது 1 கோடியே 11 இலட்சம் சேலைகளையும், 1 கோடியே 11 இலட்சம் வேட்டிகளையும் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்ற உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள் என்ற செய்தியை இங்கே மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கல் பண்டிகையின்போது, பொங்கல் விழாவின்போது கொடுக்கப்படாதது, இப்போது வர இருக்கக்கூடிய தேர்தல் சூழ்நிலைகளை யுக்தியாகக் கொண்டு இந்தத் திட்டத்தை இப்போது உடனடியாகச் செயல்படுத்த முனைந்ததால், அவசரப்படுத்திய காரணத்தினால், பல்வேறு இடங்களிலே மக்கள், இல்லாமல், கிடைக்காமல் இருக்கின்ற குற்றச்சாட்டு உண்டு என்பதை மீண்டும் இங்கே நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோதுகூடச் சொன்னார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் என்பதில் மூன்றாவது இடத்திலே தமிழ்நாடு அரசு இருக்கிறது, இந்தியாவிலேயே என்று சொன்னார். இப்போது போடப்பட்டிருக்கிற இந்த ஆளுநர் உரையில் கொள்கை முடிவுகள் என்பது அதிலே ஒன்றும் காணோம். அல்லது வேறுவிதமான எதிர்காலத் திட்டங்கள் என்பதையும் பார்க்க முடியவில்லை. ஆனால், அதன் மூலமாகப் பார்க்கின்றபோது, மூன்றாவது இடத்திலே வேலையில்லாத் திண்டாட்டத்திலே இந்தியாவிலேயே தமிழ்நாடு இருக்கிறது என்று கடந்த ஆண்டு சொன்னாரே, அதில் எப்படியாவது முயற்சி செய்து முதல் இடத்திற்கே தமிழ்நாட்டைக் கொண்டு வந்துவிட வேண்டும் என்று இந்த அரசாங்கம் முயற்சி செய்வதைப்போல நான் உணர்கிறேன். ஆக, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய அளவிற்கு எந்தவிதமான புதிய வேலைவாய்ப்புகளும் இல்லாமல், ஆளுநர் உரையிலே ஒரு தகவலும் இல்லாமல் இருக்கிறது.

அதைப்போல சட்டம்–ஒழுங்கு. 'அமைதிப் பூங்காவாக இருக்கிறது, இடர் இல்லாமல் இருக்கிறது, தடை இல்லாமல் இருக்கிறது' என்றெல்லாம் தமிழ் மணக்கும் வார்த்தைகள் இருக்கின்றனவே தவிர, என்ன நடந்துகொண்டிருக்கிறது? தொடர்ந்து கள்ளச் சாராய, விஷச் சாராய சாவுகள், மறுக்க முடியாத அளவிற்கு; திருச்சி, மணப்பாறையிலே நேற்றைக்கு விஷச் சாராயம் குடித்து இரண்டு பேர் இறந்தார்கள்; வேளாங்கண்ணி, ஆரோக்கியம் என்பவர்கள். இப்படி விஷச் சாராயம் என்பது எங்களுடைய மாவட்டத்திலே (குறுக்கீடு) நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. வேல் முருகன் அவர்களுடைய தொகுதியான பண்ருட்டி தொகுதியிலே 54 பேருக்கு மேல் இறந்து போனார்கள். அது இரண்டாவது முறையாகவும் தொடர்ந்து நடந்தது. இப்படிக் கள்ளச் சாராயச் சாவுகள், விஷச் சாராயச் சாவுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



சாலை விபத்துகள்கூட, அங்கொன்று, இங்கொன்று அல்ல. தொடர்ந்து நிறைய விபத்துகள். நீங்கள் புள்ளிவிவரத்தைப் பிறகு எடுத்துப் பாருங்கள். இப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறபோது, 5 ஆயிரம் பார்களைத் திறக்க அரசு உத்தரவிட்டது என்பதைத் தவிர வேறு என்ன? வேறு எந்தவிதமான நடவடிக்கையை, வேறு எந்தவிதமான சூழ்நிலையை நாம் சட்டம்–ஒழுங்கைப் பாதுகாக்க எடுத்திருக்கிறோம்? 5 ஆயிரம் பார்களைத் திறப்பதால் இன்னும் சட்டம்–ஒழுங்கு கெடப் போகிறது.

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காக, எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு, கடுமையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது, வழக்குகள் போடப்படுகின்றன, தடுப்புக் காவல் சட்டத்திலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அரசினுடைய வருவாய், மது விற்பனை மூலமாக, கடுமையான நடவடிக்கைகளை, கள்ளச் சாராயத்திற்கு எதிராக அரசு எடுத்து வருகின்ற காரணத்தாலே, வெகுவாக உயர்ந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, தெளிவாக ஒன்றை நான் இந்த அவையிலே குறிப்பிட விரும்புகிறேன். பொடா சட்டத்தைப் பயன்படுத்துதல், பொடா சட்டத்தைப் பயன்படுத்துதல் என்பது, எல்லை தாண்டிய தீவிரவாதிகளை, தீவிரவாதத்தை அடக்குவதற்காக என்கிற நிலையிலே ஆதரிப்பது என்பது வேறு. ஆனால் அது வேறு நோக்கிலே, அரசியல் தலைவர்களைப் பழிவாங்குகிற நோக்கிலே இருக்கிறது என்ற குற்றச்சாட்டுக்கு ஏற்பதான், உச்ச நீதிமன்றத்திலே பழ. நெடுமாறன் அவர்களுடைய ஜாமீன் மனு மீது அப்பீலுக்கு அரசாங்கம் போனபோது சொன்னது, 'பொடா துஷ்பிரயோகம் குறித்து விரிவாக ஆராய்வோம். தமிழகத்திலே பொடா, பொடா என ஏன் பீதியைக் கிளப்புகிறீர்கள்? தமிழகத்தில் நடப்பதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நெடுமாறன் அரசியல் கட்சித் தலைவர். கருத்துரிமை தெரிவிக்க உரிமை இல்லையா' என, தமிழக அரசையே உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நேரடியாகக் கேட்டு, கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள். பிறகு அவரும் வெளியே வந்தார். இன்றைக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோவிற்கும் உத்தரவு வந்து சேர்ந்தது. நக்கீரன் கோபாலுக்கு வந்தது. நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொடா மறு ஆய்வுக் குழு

இருக்கிறது. அந்த ஆய்வுக் குழுவிற்கு ஆவணங்களை ஒப்படைப்பதிலேகூட ஏன் இந்த அரசாங்கம் தாமதப்படுத்துகிறது? பொடா மறு ஆய்வுக் குழு மீண்டும், மீண்டும் சொல்லி, இறுதியாக 16 ஆம் தேதிக்குள் நீங்கள் ஆய்வுக் குழுவுக்கு ஆவணங்களை அளித்தாக வேண்டும். வைகோ ஆவணம்...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் இறையாண்மைக்கும், ஒற்றுமைக்கும் எதிராக சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால் எந்த ஒரு சக்தியும் உருவானால், அதை ab initio--ஆரம்பக் கட்டத்திலே—முளையிலேயே கிள்ளி எறிகின்ற ஆற்றல் படைத்தவர் நம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இங்கே, தமிழ்நாட்டிலே அப்படிப்பட்டவர்களுக்கு இடம் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், நாட்டினுடைய ஒற்றுமையைக் கருதி இந்தச் சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டபோது, அதை மாநில அரசு அமல்படுத்தியது. இதிலே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், உச்ச நீதிமன்றம் கருத்துத்தான் தெரிவித்ததேயொழிய, கண்டனத்தைத் தெரிவிக்கவில்லை. தவறான தகவலைத் தரவேண்டாம்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் வரும்போது உங்களுடைய நிலை என்ன? அதை நீங்கள் தயவுசெய்து உணர்ந்துகொள்ள வேண்டும்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். இதிலே அன்றைக்கு எடுத்த அந்த நிலையிலிருந்து நாங்கள் ஒன்றும் மாறுவதில்லை.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு நீங்கள் எடுத்த நிலை, இந்தச் சட்டத்தை உணர்ந்துதான் எடுத்திருக்கிறீர்கள். இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில், பொடா சட்டத்தைப் பொறுத்தவரையில், 12 இயக்கங்கள் தடை செய்யப்பட்டிருக்கின்றன. அந்தச் சட்டத்தை நன்றாகப் படித்துத்தான் நீங்கள் அன்றையதினம் ஆதரவு தெரிவித்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேச்சை ஆரம்பத்திலே இருந்து கவனித்தோம் என்றால், இரண்டு கருத்துகள்;



ஒன்று, அவர்களைப் பொறுத்த வரையில் இரட்டை வேடதாரிகள் என்பது நிச்சயமாக நாடறிந்த ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்று, ஒரு பழமொழி சொல்வார்கள் கிராமத்திலே, 'காமாலைக்காரர்களுக்குக் காண்பதெல்லாம் மஞ்சள்' என்று. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொடா சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கவில்லையா என்று கேட்டார்கள். நாங்களாவது அந்த அணியிலிருந்து ஆதரித்தோம். ஆனால் மேல் விழுந்து ஆதரித்தவர்கள் நீங்கள். என்ன காரணம்? (குறுக்கீடு) Let me finish. என்ன காரணம்? அப்போதே நாங்கள் தெளிவாகச் சொன்னோம். இந்தச் சட்டம் நாட்டுக்குத் தீமை பயப்பவர்கள்மீது ஏவப்படுமானால் திராவிட முன்னேற்றக் கழகம் அதை வரவேற்கும். ஆனால், மாறாக, அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, அரசியல் கட்சிகள் மீது அந்தச் சட்டம் பாயுமானால் அதை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கும் என்று சொன்னோம், எதிர்த்தோம். அதற்காகவே அந்த அணியிலிருந்து இன்றைக்கு நாங்கள் வெளியே வந்திருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** நீங்கள் எப்போது விலகினீர்கள்? (குறுக்கீடு) நீங்கள் எப்போது விலகினீர்கள்?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** அதனாலே, நாங்களாவது இரட்டை வேடம். நீங்கள் பல வேடம்.

நண்பகல் 12–00

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரட்டை வேடம் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது நீங்கள் சாட்டிய குற்றச்சாட்டே தவிர, அது உண்மை அல்ல. இரட்டை வேடங்கள் என்பதை நாங்கள் பல வகையிலேயும் ஆளும் கட்சியின் மீது சொல்வதற்கு எங்களுக்கும் தெரியும்.

அடுத்ததாக, குடிநீர்ப் பிரச்சினை. தமிழ்நாட்டிலே குடிநீர்ப் பிரச்சினை என்பது தலை விரித்து ஆடுகிறது. உங்களுக்குத் தெரியும், எல்லாப் பகுதிகளிலேயும் பல இடங்களிலே மக்கள் காலிக் குடங்களோடு குடிநீருக்காக மறியல் செய்து கொண்டிருக்கிறார்கள், போராடுகிறார்கள்.

இந்த சென்னை மாநகரத்திற்கு வருகின்றபோது குடிநீர்ப் பிரச்சினை குறித்து இந்த ஆளுநர் உரையிலே சொல்வது, நிரந்தரத் தீர்வு ஒன்று. இன்னொரு தீர்வு ஒன்று. ஒன்று வீராணம். வீராணத்தினுடைய திட்டத்தையே மே மாதத்திலே முடித்து விடுகிறோமாம்! வீராணத்திலேயே குடிநீர் இல்லை. கேட்டால், போர் போட்டு எடுக்கிறோம் என்கிறார்கள். ஏற்கெனவே வீராணத்திலே நீர் இருந்தாலே அங்கே இருக்கின்ற விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள்; விவசாயம் பாதிக்கப்படுகிறது என்று எதிர்ப்புக் குரல் இருக்கின்ற சூழ்நிலையில், போர் போட்டு வேறு எடுக்கிறோம் என்றால், நிலத்தடி நீரும் சுத்தமாகக் குறைந்துபோய் அந்தப் பகுதி மிகப் பெரிய வேதனைக் காடாக, வறட்சி நிலமாக மாறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதையும் இந்த அரசாங்கம் கருத்தில் கொள்ளவில்லை. அதற்கு மேலாகச் சொல்லப்படுவது, நிரந்தரத் தீர்வு; கடல் நீரைக் குடிநீராக்குவோம் என்று. கடல் நீரைக் குடிநீர் ஆக்குவோம் என்ற திட்டம் இந்த ஆளுநர் உரையிலே மட்டுமல்ல, கடந்த ஆண்டுகூட கடல் நீரைக் குடிநீராக்குவோம் என்று சொன்னார்கள். கடல் நீரைக் குடிநீர் ஆக்குவதற்காக இந்த அரசாங்கம் எடுத்த முதல் முயற்சியாக டெண்டர் விடப்பட்டு **

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைப் பற்றிச் சொல்லலாமேயொழிய, நீதிமன்றத்திலே உள்ள ஒரு கருத்துருவைப் பற்றி, அதை இங்கே வந்து விவாதிப்பது நல்லதல்ல. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே இருக்கிற கடல் நீரை நன்னீர் ஆக்கக்கூடிய திட்டம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டும். It is sub-judice. *(குறுக்கீடு)* It is sub-judice. *(குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, It is purely sub-judice. அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. ** என்றும், *(குறுக்கீடுகள்)* ** என்று சொல்லியதும்,** என்றும் சொன்னது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. *(குறுக்கீடுகள்)* வேறு பிரச்சினைக்குப் போங்கள். இரண்டு நிமிடத்திலே முடியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஒன்றும் *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறபோது அதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்றபோது வழக்கை எடுத்துக்கொள்வது முறையல்ல. *(குறுக்கீடுகள்)*

**திரு. இ. புகழேந்தி:** இல்லை, இல்லை. திட்டத்தைப் பற்றிச் சொல்லவில்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. புகழேந்தி, இரண்டு மணித்துளிகளிலே முடியுங்கள். இது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**டாக்டர் க. பொன்முடி:** Fact–தானே சொல்கிறார்கள்? நீதிமன்றத்தில் இருக்கிறது என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொல்லலாம். அதற்கு உள்ளே போய்த்தான் சொன்னார். *(குறுக்கீடுகள்)* புகழேந்தி, நீங்கள் இதை *(குறுக்கீடுகள்)* கடல் நீரைக் குடிநீராக்குகின்ற திட்டம் என்பது நீதிமன்றத்தில் இருக்கிறது. *(குறுக்கீடுகள்)* சொல்லுங்கள். அதுபற்றி ஒன்றும் இல்லை. உள்ளே போய் நீதிமன்றம் சொன்ன கருத்து என்று சொல்வது முறையல்ல. *(குறுக்கீடுகள்)*

***பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே இருக்கிறது என்று சொல்வது பிரச்சினை அல்ல. நீதிமன்றத்திலே தடை விதித்து இருக்கிறார்கள். அதுவும் விதிக்கப்பட்டு, இந்த அரசாங்கம் அதற்குக் கட்டுப்பட்டிருக்கிறது. அது தடை விதித்த காரணத்தால், கட்டுப்பட்டிருக்கிறபோது, நீங்கள் பெரிய திட்டத்தை நிறைவேற்றுவதாகச் சொல்கிறீர்களே, அப்படிச் சொல்வதை நீங்கள் உடனே நிறைவேற்ற முடியுமா என்ற காரணத்தால், அந்த அடிப்படையிலே அந்தப் பிரச்சினையை எடுத்து வைக்கின்றபோது, நீதிமன்றத்திலே இருக்கிறது என்று மட்டும் சொல்வதிலே அர்த்தமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பேராசிரியர் அவர்கள் சொன்னதிலே–நீதிமன்றத்திலே இருக்கிறது. நீதிமன்றத்தில் தடை விதிக்கப்பட்டது என்று சொல்வதே...

[2004 பிப்ரவரி 5

**பேராசிரியர் க. அன்பழகன்:** அதை நீங்கள் எப்படிச் செயல்படுத்தப் போகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைகளை இப்போது எடுக்கவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் பேசுகிறபோது, நீதிமன்றத்திலே, நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள்.**

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது தொடர்பானவை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. ** (குறுக்கீடுகள்)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தாங்கள் மொத்தமாக ஒரு முடிவு சொல்வது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மொத்தமாக நான் சொல்லவில்லை.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் அவர்கள் சொல்லியதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா, அல்லவா? (குறுக்கீடு) அமைச்சர் பொன்னையன் அவர்கள் பேசியதை அவைக் குறிப்பில் ஏற்றப் போகிறீர்களா, இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் அவர்கள் பேசியதை அவைக் குறிப்பிலே ஏற்றப் போகிறேன். அதிலே ஒன்றும் தவறு இல்லையே?

**பேராசிரியர் க. அன்பழகன்:** அது போதும். **

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வேண்டுகோள். மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் கூறியதையும், நான் கூறிய விளக்கத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசியதையும், இது தொடர்பாக திரு. புகழேந்தி அவர்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2004 பிப்ரவரி 5] [பேரவைத் தலைவர்]

பேசியதையும் அவைக் குறிப்பிலிருந்து ஒட்டுமொத்தமாக நான் நீக்குகிறேன். திரு. புகழேந்தி, வேறு பிரச்சினைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடியுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையில், நான் மீண்டும் மாண்புமிகு அமைச்சர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக்கூட சொல்லிக்கொள்ள விரும்புவது, கேட்டுக்கொள்ள விரும்புவது, திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள், அதைப்போல எதிர்க்கட்சியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களுடைய தொகுதிகளிலே நடைபெறுகின்ற அல்லது நடந்துகொண்டிருந்த அல்லது அறிவிக்கப்பட்டிருந்த திட்டங்கள், மற்றவைகளை நடைமுறைப் படுத்துவதில் காலதாமதம்; வேண்டுமென்றே, திட்டமிட்டு, மாற்றாந்தாய் மனப்பான்மையோடு இந்த அரசாங்கம் நடந்துகொண்டிருக்கிறது என்பதற்கு ஆதாரமாக, கடலூர் துறைமுகத்தை விரிவாக்கம் செய்வதற்கான 250 கோடி ரூபாய் திட்டம்; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அதற்கான முதல் நிலையிலே திட்டங்கள் தீட்டப்பட்டு உருவாக்கப்பட்டது. 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த 3 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு ஆளுநர் உரைப் புத்தகத்திலே வருகிறது. இதைப்போல பாலங்கள், மற்றவை. (குறுக்கீடு) அதுமட்டுமல்ல, நிர்வாகத்தின்...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கடலூர் துறைமுகத்தை விரிவுபடுத்துவதைப் பற்றித் திட்டமிடப்பட்டது என்று சொல்லியிருக்கிறார். அவர், அப்படித் திட்டமிடப்பட்டதில் பாதி உண்மையைச் சொல்லி, மீதிப் பாதி உண்மையை அவர் வசதியாக மறைத்து விட்டார். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே திட்டமிடப்பட்டு, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே அது கைவிடப்பட்டு விட்டது என்பதையும் அவருக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. இ. புகழேந்தி:** தலைவர் அவர்களே, திட்டம் கைவிடப் படவில்லை, மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** தலைவர் அவர்களே, முழுமையான செய்தியை நான் சொல்லி விடுகிறேன். அந்தத் திட்டம் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே முழுமையாகக் கைவிடப்பட்டு

விட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்புதான், இப்போது அந்தத் திட்டத்தை எடுத்து ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அன்போடும், பணிவோடும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆய்வு செய்வது என்பது அடுத்ததாக நிதி ஒதுக்குவதற்காக. (குறுக்கீடு) இன்னும்கூட நான் சொல்ல விரும்புவது, (குறுக்கீடு) அதற்கே பதில் சொல்லி கொண்டிருந்தால் எப்படி? நான் பேச வேண்டாமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் சில முழுமையான விவரங்களைத் தெரிந்துகொள்ளாமல் உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள். அதற்கு அரசு நிதி ஒதுக்கீடே கிடையாது. முழுக்க, முழுக்கத் தனியாருடைய முதலீட்டைப் பயன்படுத்தி செய்யக்கூடிய திட்டம். BOOST என்று சொல்கிறார்களே, Build, Own, Operate, Share and Transfer — அந்த BOOST system மூலமாக, தனியாருடைய முதலீட்டிலே செய்யக்கூடிய திட்டம். அதற்கு அரசினுடைய நிதி ஒதுக்கீட்டைப் பற்றிய பிரச்சினையே இல்லை. ஆகவே, திட்டத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி, இன்னும் ஒரு மணித்துளியிலே உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிஷம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உரையை முடித்துவிடட்டும்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அழைத்துப் பேசி, பிறகுதான் திட்டத்திற்கு ஒப்புதல் தர வேண்டும்.

நான் அடுத்து சொல்கிறேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்–3 ஆண்டுகளாக இந்த அரசு நடைபெறுகிறது– 3 ஆண்டுகளாக நிர்வாகத்தைப் பார்க்கிறார். ஒவ்வொரு இடத்திலேயும் இருப்பதைப் பற்றியெல்லாம் அவர் குறிப்பிடுகிறார்; சொல்கிறார். திருவாரூரிலே, தஞ்சை மாவட்டத்திலே ஒரு பேருந்திலே ஒரு பெரிய ஓட்டை. அதிலே குழந்தை விழுந்து இறந்ததே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, இத்தோடு உரையை





**திரு. இ. புகழேந்தி:** இந்த அரசாங்கம் நிர்வாகத்திலே திறமையாக இருந்திருந்தால் அந்தப் பேருந்தை ஓடவிட்டிருக்கலாமா? அவர்கள் 3 வருடங்களாக என்ன செய்து கொண்டிருந்தார்கள்? அலட்சியத்தின் காரணமாக அந்த விபத்து நடந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–10*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது, எங்கேயாவது, தவிர்க்க முடியாமல் விபத்துகள் ஏற்படுவது இயற்கை. ஆனால், அந்த வகையிலே ஏதோ ஒரு இடத்திலே தவறுதலாக ஏற்பட்டுவிட்ட அந்த நிகழ்ச்சியைக் குறித்துக்கூட மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்கென்று சிறப்பு ஆய்வுக் கூட்டம் நடத்தி, மிகக் கடுமையான நடவடிக்கை எல்லாம் எடுத்து, தவறு செய்த அதிகாரிமீது இன்றைக்குக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, ஒரு சம்பவத்தை வைத்து நீங்கள் ஒட்டுமொத்தமாக எடைபோடக் கூடாது. அப்படிப்பட்ட தவறுகள் வருங்காலத்திலே, 100 சதவிகிதம் நடந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் இப்போதுகூட இந்த கவர்னர் உரையிலே 6,000 பேருந்துகளை முழுமையாகப் பழுதுபார்ப்பதற்காகக் கிட்டத்தட்ட 30 கோடி ரூபாயை மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பேச்சை முடித்து விடுங்கள். திரு. வி.கே. லட்சுமணன் (குறுக்கீடு) இல்லை, முடித்து விடுங்கள். (குறுக்கீடு) ஒரு வாக்கியத்தில் சொல்லி முடியுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல், சுகாதார நிலையங்களைப் பற்றிச் சொல்லும்போது, மருந்துகள் மருத்துவமனைகளிலே இருக்க வேண்டும். தலைமை மருத்துவமனையிலே (குறுக்கீடு) எல்லோருக்காகவும்தான் சொல்கிறேன். தலைமை மருத்துவமனையிலே, அரசு மருத்துவமனையிலே விஷக் கடி, வெறி நாய்க் கடி ஆகியவற்றுக்கான மருந்து இல்லாமல் மக்கள் கிட்டத்தட்ட 10 நாட்கள், 15 நாட்கள் காத்திருக்கிறார்கள். அது உங்களுடைய குறைபாடு; நிர்வாகத்தினுடைய குறைபாடு.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குற்றச்சாட்டுகளை நான் வன்மையாக மறுக்கிறேன். எங்கே அந்த மாதிரி இல்லை என்பதைத் தாங்கள் கூற வேண்டும். நானே கடலூருக்கு நேரடியாக வந்திருக்கிறேன். நான் அங்கே ஆய்வுக் கூட்டம் நடத்தினேன். நீங்கள் அந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், மாவட்ட ஆட்சியர் மூலமாக நானே உங்களை நேரடியாக அழைத்தேன். நீங்கள் கலந்து கொள்ளவில்லை. ஆகவே, தவறான ஒரு குற்றச்சாட்டை இங்கே கூறக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. வி.கே. லட்சுமணன். (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** 25-க்கும் மேற்பட்ட மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவரையே சந்தித்து, சாலை மறியல் செய்து, மனுக் கொடுத்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடியுங்கள். (குறுக்கீடு) முடியுங்கள். திரு. வி.கே. லட்சுமணன். (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** இந்த ஆளுநர் உரையை ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது, இந்த உரை எந்தவிதத்திலேயும் மக்களுடைய நலனுக்கு, மக்களுடைய எதிர்காலத்திற்கு, மக்களுடைய வருங்கால வாழ்விற்கான வளத்தைச் சேர்ப்பதற்கான நிலையில் இல்லை என்பதையும், இந்த ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருப்பது போல, அந்த மகாமக விழாவெல்லாம் வருகின்றபோது, ஏற்கெனவே 100 பேர் செத்துப் போனதுபோல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன். (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** சாகாத அளவிற்கு விழாக்களை நடத்த வேண்டும், அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், ஆளுநர் உரை முத்து இல்லாத ஒரு சிப்பியைப் போல, மணம் இல்லாத மலரைப் போல, நீர் இல்லாத ஆறு போல, உண்மையே இல்லாத ஓர் உரையாக இந்த உரை இருக்கிறது; இது வெறும் புகழாரம் சூட்டி மகிழ்ந்துகொள்கின்ற, தனக்குத் தானே மாலை போட்டுக் கொண்டு கை தட்டுகின்ற உரை என்று சொல்லிக்கொண்டு, விடைபெறுகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புகழேந்தி அவர்களுடைய பேச்சிலும் உண்மை இல்லாமல் இருந்தது என்பதற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பட்டினியாலும், வேதனையாலும் கஷ்டப்பட்டார்; சம்பா பயிரிடுகிறார், தண்ணீர் வரவில்லை; உழுந்து பயிரிடுகிறார், தண்ணீர் வரவில்லை; அதனால், பட்டினியாலும் வேதனை என்று பேசினார். அந்த விவசாயினுடைய பெயர் தமிழ்வளவன். தஞ்சை மாவட்டம் மல்லூர் கிராமத்தைச் சேர்ந்தவர். அவருடைய இறப்புக்குக் காரணம் கண்டறியப்பட்டுள்ளது. (குறுக்கீடு) இல்லை, இல்லை, மன்னிக்க வேண்டும். சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். அவர் குடும்பத் தகராறு காரணமாக, கள்ளக் காதல் தொடர்பான குடும்பத் தகராறு காரணமாக, அவர் பூச்சி மருந்தை அருந்தி மாண்டிருக்கிறார் என்று தெரிய வருகிறது. 5 ஏக்கர் நிலத்தில் நெல்லைப் பயிர் செய்து, அவருடைய விளைநிலம் செழிப்பாக இருக்கிறது என்ற தகவலும் தற்போது வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, இவற்றையெல்லாம் போக்குவதற்காக மாவட்டந்தோறும் பெரிய தொழிற்சாலைகளைத் துவக்கி அங்கே ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்குரிய நல்ல திட்டங்கள் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெறும் என்று நான் எதிர்பார்த்திருந்தேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அது மிகப் பெரிய ஏமாற்றத்தை எனக்கு அளித்திருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும்கூட சில நல்ல செய்திகளையும் உங்கள் மத்தியிலே நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, மலேசியா நாட்டிலேயும், மாலத்தீவிலேயும் சிறையிலே வாடுகிற தமிழர்களுக்காக இந்தியத் தூதரகத்தின் மூலமாக அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழக முதல்வர் முயற்சி செய்ததற்காக, அவர்களுக்கு நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. வி.கே. லட்சுமணன்] [2004 பிப்ரவரி 5

பிற்பகல் 12–15

அதே சமயத்திலே, சென்ற ஆண்டைப் போல அல்லாமல், இந்த ஆண்டு, மதம் மாறிய ஆதிதிராவிட, பழங்குடிப் பெண்களுக்கும் சைக்கிள் வழங்குவதற்கு இந்த அரசு முன்வந்திருப்பதையும் நான் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மதம் மாறிய நிகழ்ச்சி சென்ற ஆண்டிலே இல்லை. இந்த ஆண்டு புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அது உங்களுக்குத்தான் வெளிச்சம்.

சென்னையில் குடிநீர்ப் பற்றாக்குறையை கடல் நீரைக் குடிநீராக்குவதன் மூலமாகத் தீர்க்க முடியும் என்பது விஞ்ஞானபூர்வமான உண்மையாக இருந்தாலும்கூட, அதற்கு சர்வதேசப் புகழ் தேடாமல், விரைவாகச் செய்து கொடுத்தால் நல்லது என்று நான் கருதுகிறேன்.

அதேபோல, உடற்பயிற்சிக் கல்விக்காகவும், விளையாட்டுக்காகவும் தனியாகப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்க அரசு கருதுவதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நன்றி பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, விளையாட்டு வீரர்களுக்கு, வீராங்கனைகளுக்கு இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் பரிசு வழங்கியிருப்பதையும், ஊக்கத் தொகை வழங்கியிருப்பதையும் நான் பாராட்டுவதோடு, அந்தப் பயிற்சி அளிக்கிற பயிற்சியாளர்களுக்கும் ஊக்கத் தொகை வழங்க வேண்டும். அதுதான் அவர்களுக்கு உண்மையாக நிரந்தரப் பலனை அளிக்கும் என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

***மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்படி விளையாட்டு வீரர்களுக்குப் பரிசுத் தொகை வழங்கப்படுகிறதோ, அதைப்போல, அந்தத் தொகையின் அளவில் 15 சதவீதத் தொகையைப் பயிற்சியாளருக்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு கொடுத்து, ஊக்கப்படுத்தி வருகிறது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** தமிழ்நாட்டிலே கடந்த சில ஆண்டுகளாக, குறிப்பாக, நீலகிரியிலே தேயிலை, பச்சைத் தேயிலை விலை...

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகையில் 15 சதவீதம் பயிற்சியாளர்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். பயிற்சியாளர்களுக்கு நிதி கொடுப்பதைப் பொறுத்த வரையில் மகிழ்ச்சி.



2004 பிப்ரவரி 5] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

ஆனால் 15 சதவீதம் என்பது மிக, மிகக் குறைவு. உதாரணமாக நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பி.டி. உஷா என்பவர், she is the creation of Nambiar. நம்பியார் இல்லையென்றால், பி.டி. உஷா இல்லை. அதனால் 15 சதவீதம் என்றால், அவர் வாழ்க்கையையே தத்தம் செய்து இருக்கிறார், அதற்காக. 15 சதவீதம் என்பது மிகக் குறைவு. யாருக்காவது தங்க மெடல் கிடைத்தால், 15 சதவீதம் அல்ல, பயிற்சியாளர்களுக்குக் குறைந்தபட்சம் 50 சதவீதம் கொடுப்போம் என்று அறிவியுங்கள். இன்னும் நிறையப் பேர் வெற்றி பெறுவார்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரை வெற்றி பெற்ற வீரர்கள், வீராங்கனைகளுக்கு மட்டுந்தான் இந்தப் பரிசுகள் வழங்குகின்ற ஒரு செயல் இருந்து வந்தது. ஆனால், பயிற்சியாளர்களுக்கு என்று இதுவரை தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலே, அகில இந்திய ரீதியிலே எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. முதன்முதலாக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் பயிற்சியாளர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உதவித் தொகை கிடைக்கப்பட வேண்டுமென்ற வகையில் உத்தரவிட்டிருக்கின்றார்கள். இது, just a beginning, இது ஆரம்பமாகியிருக்கிறது. எனவே, வருங்காலத்திலே, நல்ல வீராங்கனைகளை உருவாக்கும்போது, பயிற்சியாளர்களுடைய அந்த ஒரு சூழ்நிலையையும் மாண்புமிகு அம்மா அவர்கள் கவனிப்பார்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே பசுமைத் தேயிலையினுடைய விலை மிகக் கணிசமாகக் குறைந்துவிட்டது. 15 ரூபாய் கிலோவுக்கு விற்க வேண்டிய அந்தத் தேயிலை 4 1/2 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருக்கிறது. மத்திய அரசு Price Stabilization Fund என்ற ஒரு Fund–ஐ...

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே மட்டுமல்ல. அகில உலகத்திலேயே முதன்முதலாக பச்சைத் தேயிலை பயிரிடும் விவசாயிகளுக்குப் பயன் தரத்தக்க அளவிலே மின்னனு ஏல மையத்தை உருவாக்கி, அந்தத் தேயிலைத் தூளில் இடைத் தரகர்கள் கொள்ளையடிப்பதைத் தடுக்க, இன்றைக்கு அந்தப் பச்சைத் தேயிலை பயிரிடுபவர்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலையை உருவாக்கித் கொடுத்திருப்பவர் தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. வி.கே. லட்சுமணன்] [2004 பிப்ரவரி 5

அதோடுமட்டுமின்றி, நேற்றைக்குப் படிக்கப்பட்ட ஆளுநர் உரையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் ஒரு முறை படிக்க வேண்டுமென்று கனிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். விலைச் சரிவு ஏற்படுகின்ற அந்த ஒரு காலகட்டத்திலே சிறு விவசாயிகள் பயன்பெறத்தக்க அளவிலே பச்சைத் தேயிலை பயிரிடுகின்ற ஏறக்குறைய 23,000 சிறு விவசாயப் பெருமக்களுக்கு— கடுமையான நிதி நெருக்கடிகள் இருந்தபோதிலும்கூட—ஒரு கோடியே பதினைந்து இலட்சம் ரூபாய்—ஒவ்வொரு விவசாயிக்கும் 500 ரூபாய் என்று சொல்லக்கூடிய அளவிற்கு—தமிழகத்தினுடைய ஒப்பற்ற ஒன்பதாவது வள்ளலாக வாழ்ந்து வருகின்ற நம்முடைய தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–20

அதோடுமட்டுமின்றி, இன்றைக்குத் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வலியுறுத்தியதனுடைய அடிப்படையிலே, நேற்றைக்குக்கூட மத்திய அரசு ஒரு நல்ல செய்தியை வழங்கி இருக்கின்றது. பச்சிலைத் தேயிலை பயிரிடுகின்ற அந்த விவசாயப் பெருமக்களுக்கு 4 மாத கால அளவிற்கு 8 ரூபாய் வழங்கப்படும் என்று நேற்றைக்குக்கூட தொலைக்காட்சியிலும், இன்றைக்கு செய்தித்தாளிலும் அந்தச் செய்தி வந்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் முடித்து விடட்டும். (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் பேசுங்கள்.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பச்சிலைத் தேயிலைக்குக் கிடையாது. ஒரு கிலோ தேயிலைத் தூளுக்குத்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், ராஜு.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து எடுத்த நல்ல நடவடிக்கையின் காரணமாக, இன்றையதினம் பச்சைத் தேயிலைக்கு கட்டுப்படியான விலை கிடைக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றுவரையில், நீலகிரி பச்சைத் தேயிலைக்கு, விவசாயிகளுக்குக்



2004 பிப்ரவரி 5] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

அரசாங்கத்தினுடைய அரவணைப்பில் நடைபெறுகிற INDCOSERVE மூலமாகக்கூட $4\frac{1}{2}$ ரூபாய் தான் கிடைக்கிறது. அது கட்டுப்படியான விலை அல்ல. அதுமட்டுமல்ல, இன்று பச்சைத் தேயிலைக்கு 8 ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், அது தவறான தகவல். ஒரு கிலோ தேயிலைக்கு 8 ரூபாய் என்றால், பச்சைத் தேயிலைக்கு ஒரு கிலோவிற்கு 2 ரூபாய் கிடைக்கும். அது நீங்கள் தேர்தலுக்காக அறிவித்திருக்கிற ஒரு அறிவிப்பே தவிர, உண்மையாக விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்ற நோக்கத்தோடு அறிவிக்கப்பட்ட அறிவிப்பு அல்ல.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இன்னொன்றையும் கோடிட்டுக் காட்டவேண்டுமென்றால், கடந்த கால ஆட்சியாளர்களிடத்திலே, பச்சிலைத் தேயிலை பயிரிட்ட விவசாயப் பெருமக்கள், தாங்கள் உற்பத்தி செய்கின்ற பச்சிலைத் தேயிலைக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டுமென்று கோரியபோது, அவர்களை அடக்கினார்கள், ஒடுக்கினார்கள், சிறையிலே வாட்டினார்கள், சிறைப்படுத்தினார்கள் என்பதுதான் கடந்த கால வரலாறு. இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையாலே அந்தப் பச்சிலைத் தேயிலை விவசாயப் பெருமக்களுக்கு மறுவாழ்வு கொடுக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தினுடைய அடிப்படையிலே, தமிழகம் முழுவதும் இருக்கின்ற கூட்டுறவு அங்காடிகளிலேயும், அமுதம் அங்காடிகளிலேயும் பச்சைத் தேயிலை மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற தேயிலைத் தூளை இன்றைக்கு அரசே கொள்முதல் செய்து, அந்தத் தேயிலை தூளைத் தமிழகம் முழுவதும் விற்பனை செய்து வருகிறார்கள். அப்படி விற்பனை செய்வதன் மூலமாக நீலகிரியிலே வாழ்கின்ற அந்தச் சிறு விவசாயிகளுக்கு, தேயிலை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுடைய வாழ்விலே ஒளி ஏற்றப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளி ஏற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அண்மையிலே முதலமைச்சர் அவர்கள் அங்கே சென்ற நேரத்தில், மாற்றுப் பயிர் பயிரிடுங்கள் என்று தேயிலை விவசாயிகளைக் கோர வேண்டிய அவசியம் என்ன?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன், பேசுங்கள்.

[2004 பிப்ரவரி 5

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலே இந்தப் பெயரிலே ஒரு சின்ன திருத்தம். இது பச்சை இலைத் தேயிலை அல்ல; பச்சைத் தேயிலை; Green Tea. திருத்தத்திற்கு மன்னிக்கவும். மைய அரசு செய்தது, Price Stabilization Fund. அவ்வளவுதான். மாநில அரசு செய்தது, Electronic Auction Centre. இந்த இரண்டைத் தவிர வேறு ஒன்றும் நடைபெறவில்லை. இத்தனையெல்லாம் செய்த பின்னாலும்கூட, பச்சைத் தேயிலைக்கு ஒரு கிலோவிற்குக் கிடைக்கிற விலை வெறும் 4½ ரூபாய்தான். அதைத்தான் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பச்சிலைத் தேயிலைக்குக் கூடுமானவரை கூடுதல் விலை கிடைக்க வேண்டும் என்றுதான் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் முன்னரே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். அதிலும் குறிப்பாக, சிறப்பாக, இந்தியத் துணைக் கண்டத்திலே மட்டுமல்ல, அகில உலகத்திலேயே முதன்முதலாக மின்னணு ஏல மையத்தை உருவாக்கியதன் மூலமாக ஒரு கிலோ தேயிலைத் தூளுக்கு அங்கே கடந்த காலத்திலே, அந்தக் கொள்முதல் விலைக்கும், இப்பொழுது இந்த மின்னணு ஏல மையத்திலே விற்கப்படுகின்ற விலைக்கும், ஏறக்குறைய ஒரு கிலோ தேயிலைத் தூள் சுமார் 35 காசு கூடுதலாக விற்கப்படுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கனிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆக, தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகின்ற பெருமுயற்சிகளின் காரணமாகத்தான், இன்றைக்கு விவசாயப் பெருமக்களுக்குக் கூடுதலாகப் பெருமளவு விலை கிடைத்து வருகிறது என்பதை நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவாகளே, ஒரு கிலோ பச்சை இலைக்கு ரூ.4.50–ம் கிடைக்கிறது, 8 ரூபாயும் கிடைக்கிறது. தரமான கொழுந்து இலையைப் பறித்துக் கொடுத்தால், ஒரு கிலோ பச்சை இலை 8 ரூபாய்க்கு வாங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



2004 பிப்ரவரி 5]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தேயிலைக்கு என்ன விலை என்பதை நிர்ணயிப்பது Bought leaf Tea Factories. தேயிலையை வாங்கி, அரைக்கின்ற தேயிலைத் தொழிற்சாலை எவ்வளவு கொடுக்கிறது என்பதுதான் கணக்கே தவிர, மற்றது கணக்கு ஆகாது. சாதாரண சிறு விவசாயிகள் ஒன்று, Bought leaf Tea Factories-க்கு விற்பார்கள். இல்லாவிட்டால் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைக்கு, INDCOSERVE-க்கு விற்பார்கள். அங்கே கொடுக்கப்படுகிற தொகை 4 ½ ரூபாய்தான். அதற்குமேலே ஒரு காசுகூடக் கிடையாது.

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்கிறார்கள். 'INDCOSERVE'–லேயே ஒரு தொழிற்சாலையில் 4 ரூபாய் 50 காசு கொடுக்கப்படுகிறது. இன்னொரு தொழிற்சாலையில் 6 ரூபாய் 50 காசு கொடுக்கப்படுகிறது. இலையினுடைய தரத்தைப் பொறுத்துத்தான் விலை நிர்ணயிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு5கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லட்சுமணன், முடித்துவிடுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரியினுடைய பொருளாதாரத்தை நிர்ணயிப்பது, தேயிலையோடு, இந்துஸ்தான் போட்டோ தொழிற்சாலை. அந்த போட்டோ தொழிற்சாலை நீண்ட காலமாக மூடப்பட்டிருக்கிறது. அதைத் தனியாருக்காவது விற்று அங்கே பணியாற்றுகின்ற 1,500 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்க வேண்டியது அரசினுடைய கடமை. அதேபோல கீழே சவுத் இந்தியா விஸ்கோஸ் தொழிற்சாலையும்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். *(குறுக்கீடு)*

[2004 பிப்ரவரி 5

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்-ஐத் தனியாருக்கு விற்று, பிரச்சினைகளைச் சரிசெய்ய மாநில அரசால் முடியாது. காரணம், இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் மைய அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலை.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இன்றைக்கு நீங்கள் மைய அரசோடு நெருக்கமான உறவிலே இருக்கிறீர்கள். (சிரிப்பு) மைய அரசோடு பேசி, அதை விற்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் பிரச்சினையைச் சரிசெய்வதற்கு, அந்தத் தொழிலாளிகளுக்கு வாழ்வளிப்பதற்கு மைய அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மைய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.(குறுக்கீடு) திரு. தி. வேல் முருகன். (குறுக்கீடு)

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எக்காரணத்தைக் கொண்டும் இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தொழிற்சாலையைத் தனியாருக்கு விற்கக் கூடாது என்று நான் என் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லட்சுமணன், ஒரு நிமிடத்திலே முடித்து விடுங்கள்; சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இடையிலே மற்றவர்கள் பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுடைய உறுப்பினர்தான் பேசியிருக்கிறார். (குறுக்கீடு)



2004 பிப்ரவரி 5]

**திரு. சி. சிவசாமி:** உறுப்பினர், கோயம்புத்தூரைப் பற்றிப் பேசுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** சவுத் இந்தியா விஸ்கோஸ் கோயம்புத்தூரிலேதான் இருக்கிறது. (குறுக்கீடு) சவுத் இந்தியா விஸ்கோஸ் கோயம்புத்தூரிலேதான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. லட்சுமணன், நீங்கள் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையிலே, Knowledge Industry Township என்றும், Information Technology Bay என்றும் பல முக்கியமான செய்திகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் சென்னையிலே மட்டும் நிறுவாமல், கோவை போன்ற நகரங்களிலும் நிறுவுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற முறை Open University தொடங்கப்பட்டபோது, அதைத் தமிழாக்கம் செய்த அன்றைய கல்வி அமைச்சர் அவர்கள், திறந்தவெளிப் பல்கலைக்கழகம் என்று சொன்னார்கள். நான் சொன்னேன்; திறந்தவெளி என்று சொன்னால், அது open air என்று ஆகிவிடும். Open air என்று சொன்னால், அது புளிய மரத்தடியில் படிப்பது போலாகிவிடும். ஆகையால், அதற்கு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் என்று—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல திறந்தவெளிப் பல்கலைக்கழகமாக அது அழைக்கப்படுவதில்லை. திறந்தநிலைப் பல்கலைக்கழகமாகத்தான் அழைக்கப்பட்டு வருகிறது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திறந்தநிலை என்று அழைக்க வேண்டும் என்று நான் சொல்லி, தமிழக முதல்வர் அவர்கள் அதை உடனே திருத்தி, திரு. தம்பிதுரை அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். ஆனால், இன்னும்கூட, (குறுக்கீடு) எப்படி நன்றி சொல்வது? (சிரிப்பு) இன்னும்கூட Centenary Hall-க்குப் பக்கத்திலே அந்த Open University-க்கு, திறந்தவெளி என்றுதான் பெயர்ப் பலகை இருக்கிறது. இப்போதாவது நீங்கள் அந்தப் பெயர்ப் பலகையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[2004 பிப்ரவரி 5

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு நன்றி. ஏற்கெனவே அந்தப் பல்கலைக்கழகம் திறந்தநிலைப் பல்கலைக்கழகம் என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. அப்படி ஏதாவது பெயர்ப் பலகையில் இன்னும் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்று சொன்னால், உடனடியாக அது மாற்றம் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** 2 நிமிடங்கள். கோவையிலே இருந்த பழைய நீதிமன்ற வளாகம் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டதற்குப் பின்னாலே, அந்தப் பழைய நீதிமன்ற வளாகத்திலே நிறையப் பாம்புகள் குடியேறி, தேள்கள் எல்லாம் குடியேறி, கட்டுவிரியன் பாம்புகள் குடியேறி நிறைய ஆபத்துகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. நிறையப் பேர் செத்துப் போய்விட்டார்கள். ஆகையால், நான் நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்களை நேரில் பார்த்துச் சொன்னேன். இனிமேலாவது யாரும் சாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். இதுவரையில் அந்த வளாகம் தூய்மைப் படுத்தப்படவேயில்லை. ஒன்று, நம்முடைய நீதியரசர் செய்ய வேண்டும். இல்லையென்று சொன்னால், மாவட்ட ஆட்சித் தலைவர் செய்ய வேண்டும். யாருமே செய்யவில்லை என்று சொன்னால், இன்னும் நிறையப் பேர் செத்துப் போவார்கள். ஆகையினால் தயவுசெய்து மனித உயிர்கள்மீது கருணை கொண்டு, அந்த வளாகத்தைத் தூய்மைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாம்புகளைப் பொறுத்தவரையில், பிடிக்கப்பட வேண்டுமென்றால், சட்டத் துறை பிடிக்க முடியாது. வனத் துறைதான் அதைப் பிடிக்க வேண்டும். எனவே, வனத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்றார்கள். எனவே, அவர்களிடத்திலே நான் சொல்லி அந்தப் பாம்புகளைப் பிடிப்பதற்கு ஏற்பாடு செய்கின்றேன். அந்த வளாகத்தைப் பொது மக்கள் மற்றும் வழக்கறிஞர்கள் மற்றும் நீதித் துறைக்கு உபயோகப்படுத்த வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். அது நம்முடைய உயர் நீதிமன்றத்திற்கு, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு



உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தவுடனேயே, அனுப்பப்பட்டு இருக்கிறது. திரும்பவும் நினைவூட்டுக் கடிதம் எழுதப்படும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்தபோது 20 ஆண்டுகளுக்கு முன்னாலே கோவையிலே 187 பேருக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்று ஓர் ஆணை பிறப்பித்தார்கள். இந்த 20 ஆண்டுகளாக—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஒரே செய்தி சொல்லி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்து விடுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** 20 ஆண்டுகளாக நான் பல முறை எல்லா மட்டத்திலும் அதிகாரிகளிடமும், அமைச்சர்களிடமும் இதை எடுத்துச் சொல்லி, இன்று வரை அதிகாரிகளாலே ** இடம், திருச்சி சாலையிலே நெடுஞ்சாலைத் துறை அலுவலகத்திற்குப் பின்னாலே, புளியகுளம் கிராமத்திலே 187 பேருக்கு நத்தம் புறம்போக்கிலே பட்டா கொடுப்பதாக எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள், 20 ஆண்டுகளுக்கு முன்னாலே. இன்று வரை—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** துறை அமைச்சர் அவர்களிடம் எழுதிக் கொடுத்து விடுங்கள். அடுத்து திரு. தி. வேல் முருகன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஒரு நிமிடம். ஏற்கெனவே பல முறை எழுதிக் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேல் முருகன், பேசுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது ** என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது...

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2004 பிப்ரவரி 5

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** ** பொதுவாகச் சொல்லக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படிச் சொல்லாதீர்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இதை நான் வாபஸ் வாங்கத் தயாராக இல்லை.** ஆகையினாலே, தயவுசெய்து இதை விசாரித்து....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சொன்னது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. ** பற்றிச் சொன்னது. திரு. வேல் முருகன் அவர்கள் பேசுங்கள். திரு. வேல் முருகன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஒரு நிமிடம், செய்தியையே சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன். (குறுக்கீடு) திரு. லட்சுமணன், உட்காருங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம், 'வணக்கம்' என்று சொல்லி உட்காருங்கள். திரு. தி. வேல் முருகன். (குறுக்கீடு) திரு. லட்சுமணன், ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** அதாவது, அந்த நிலத்திற்கு அதிகாரிகளாலே விலை நிர்ணயம் செய்ய முடியவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவராலே முடியவில்லை. Revenue Secretary-யாலே முடியவில்லை. C.L.A.-வாலே முடியவில்லை. யாராலும் முடியவில்லை. இனி யார் செய்ய முடியும்? எனவே, அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீதான இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த எம் தமிழினப் போராளி, மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்களுக்கும், வருங்காலத் தமிழகத்தின் வரலாற்று நாயகன் டாக்டர் சின்னய்யா அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர், அதிக நேரம் தருவார் என்ற முறையில் அவருக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2004 பிப்ரவரி 5]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் நன்றி எனக்கு வேண்டாம்.

**திரு. தி. வேல் முருகன்:** இந்த ஆளுநர் உரையை நான் மிக ஆவலோடு படித்துப் பார்த்தேன். அதிலே தமிழகத்திலே இருக்கின்ற ஏழை, எளிய விவசாய மக்கள் முதல் பாட்டாளிகள் வரையிலும், அரசு ஊழியர்கள் முதல் அடித்தளத்திலே பணிபுரிகின்ற அடிமட்ட ஊழியர்கள் வரையிலும் அனைத்து மக்களுக்கும் எந்தவிதப் பயனும் அளிக்காத, பயன் அளிப்பதற்கான வழியே காண முடியாத, வெறும் அச்சு எழுத்துகளால் பொறிக்கப்பட்ட ஒரு உரையாகக் கண்கூடாகக் காணுகின்றேன். காரணம், இந்த உரையின் 3-வது பக்கத்தில், 'பொது மக்களுக்குப் பெருமளவில் சேவைப் பணிகளை நல்கும் தமிழ்நாடு மின்சார வாரியம், அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் போன்றவை சீரான நிதி நிலைமைக்கு மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளன. ரூபாய் 4,000 கோடி அளவிற்குத் தொகை கொடுக்காமல் முந்தைய அரசு விட்டுச்சென்ற பெரும் சிக்கலான நிலைமை திறமையாகச் சமாளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் வியக்கத்தக்க இந்தத் திருப்பம் ஒரு பெரும் அற்புதம் என்றே கூறலாம்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாடு மின்சார வாரியத்திலே பணிபுரிகின்ற ஊழியர்களுக்குக் கடந்த மூன்று ஆண்டுகளாக—அவர்களுடைய அந்த ஊதிய உயர்வு முடிந்தும்கூட, நம்முடைய அரசு பொறுப்பேற்று இதுவரையிலும்—அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறார்கள். ஆனால் அழைத்து—அவர்களுக்கு அந்தப் பேச்சுவார்த்தையில் முடிவை ஏற்படுத்தி, அவர்களுக்கு ஒரு நல்ல தீர்வு எட்டப்படவில்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–35*

அதோடு மட்டுமல்ல, இன்னும் சொல்லப் போனால், இன்றைக்குப் போக்குவரத்துத் துறையிலே இருக்கின்ற ஊழியர்கள் அரசினுடைய எஸ்மா, டெஸ்மா சட்டங்களுக்கெல்லாம் ஆளாகி இருக்கின்றார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கும் பணி ஓய்வு பெற்று 9 மாத காலமாகியும், பணி ஓய்வு பெற்றதற்கான பென்ஷனைக்கூட இந்த அரசு இதுவரையில் வழங்கவில்லை. ஆக, மின்சார வாரியத்தில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுடைய நிலைமை அவ்வாறு. அரசு ஊழியர்கள் இன்றைக்கு எஸ்மா...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்தைப் பொறுத்த வரையிலே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய இறுதியில் 5,000 கோடி ரூபாய் அளவிற்கு மின் வாரியத்திற்கு இழப்பு இருந்த நிலையில் deficit budget –ஆக இருந்த நிலையில், அது சீரமைக்கப்பட வேண்டும் என்கின்ற ஒரு நிலையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, இப்போது 1,200 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு இருக்கின்ற ஒரு நிலை. ஒரு யூனிட்டுக்கு production cost என்று சொன்னால், கிட்டத்தட்ட 3 ரூபாய் 07 காசு. I.P.P. மூலமாக மற்றும் பல்வேறு வகைகளிலே, நமக்கு மத்திய மின் தொகுப்பு, நம்முடைய அனல் மின் நிலையம், அதேபோன்று Gas turbine, இதன் மூலமாக ஒட்டுமொத்த production cost என்று சொன்னால், 3 ரூபாய் 07 காசு உற்பத்திச் செலவு. இன்றைக்கும் நாம் subsidised cost –லேதான் பொது மக்களுக்கு விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம். எனவே, 1,200 கோடி ரூபாய் ஆனால் பற்றாக்குறை இருக்கின்ற சூழ்நிலையில், எப்படி நம்முடைய தொழிலாளர்களுக்கு உதவி செய்ய முடியும் என்பதை நீங்களே நிச்சயமாக உணருவீர்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேதனை என்னவென்று சொன்னால், இந்த நாட்டிலே யானைகளுக்குப் பிரச்சினை வரும் என்று கருதி, தமிழகத்தினுடைய அரசு 100 யானைகளை முதுமலைக் காட்டிற்கும் டாப் ஸ்லிப்பிற்கும் கொண்டு சென்று, அந்த யானையினுடைய அந்த நோகாத உள்ளத்தைக் காப்பாற்றுவதற்குத் தமிழக அரசு திட்டம் தீட்டுகிறது; அதற்காகச் செலவிடுகிறது. மதம் பிடித்து, ஏற முடியாத யானைகளைக்கூடத் துன்புறுத்தி, வற்புறுத்தி ஏற்றிக் கொண்டு போய், அதற்கு ஒரு நல்ல ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்க முயற்சி செய்கின்ற இந்த அரசு, மனிதனாகப் பிறந்து இந்த அரசினுடைய வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் தமிழகத்தினுடைய உயர்வுக்கும் பாடுபடுகின்ற அரசு ஊழியர்களாக இருந்தாலும், போக்குவரத்துத் தொழிலாளர்களாக இருந்தாலும், தமிழ்நாடு மின்சார வாரியத் தொழிலாளர்களாக இருந்தாலும், அவர்களுடைய பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்குக்கூட முன்வராத ஒரு நிலை இருக்கிறதே என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேனே தவிர, 'இந்த அரசு இவ்வளவு படு சிக்கலான நிதி நிலைமையிலிருந்து மீண்டு வந்திருக்கிறது; இது ஒரு மகத்தான சாதனை' என்று தாங்கள் குறிப்பிட்டிருப்பதற்காக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. ஒரு





யானை மீது நம்முடைய அரசு காட்டுகின்ற இரக்கம், இந்த அரசு ஊழியர்கள் மீது காட்டப்படவில்லையே? 999 அரசு ஊழியர்களைப் பணி நீக்கம் செய்திருக்கிறார்களே!

அதோடு மட்டுமல்ல. இன்றைக்குப் போக்குவரத்துத் தொழிலாளர்கள், பணி மூப்பு அடைந்து ஓய்வு பெற்றுவிட்டார்கள். 9 மாத காலமாக அவர்களுக்கு ஓய்வூதியம் தரவில்லை. அவர்களுடைய குழந்தைச் செல்வங்கள் எப்படிப் படிக்கும்? அவர்கள் வீட்டு வாடகையை இன்றைக்கு எப்படித் தர முடியும்? அவர்கள் எப்படித் தங்கள் குடும்பத்தை இன்றைக்கு நடத்திச் செல்வார்கள் என்ற நிலை இருக்கிறது. ஆதலால், இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதிலேகூட, இங்கு 4,000 கோடி என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். ஆனால், பக்கம் 32–லே 5,000 கோடி என்று இருக்கிறது. அந்த 5,000 கோடி போக்குவரத்துத் துறைக்கா அல்லது மின்சாரத் துறைக்கா? அமைச்சர் அவர்கள் இப்போது பேசும்போதுகூட 5,000 கோடி என்று சொன்னார்கள். ஆனால், இதிலே 4,000 கோடி என்று இருக்கிறது. ஆக, 4,000 கோடியையும், 5,000 கோடியையும் சமாளித்து, இன்றைக்கு நிதி நிலைமையிலே முன்னோக்கி வருகின்ற நம்முடைய அரசு, சாதாரண அடித்தளத்திலே இருக்கின்ற அரசு ஊழியர்கள் பிரச்சினை, போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய பிரச்சினை, தமிழ்நாடு மின்சார வாரியத் தொழிலாளர்களுடைய பிரச்சினை, இதுபோன்று தொழிலாளர்களுடைய பிரச்சினைகளையும் கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைத்தான் எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய வேண்டுகோளாக நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், இந்த அரசு காவல் துறைக்கும், சிறைத் துறைக்கும் இன்றைக்கு முக்கியத்துவம் தந்து கொண்டிருக்கிறது; வரவேற்கத்தக்க நிகழ்ச்சி. காவல் துறை என்பது, இன்றைக்கு மிகச் சிறப்பான முறையில் பணியாற்ற வேண்டும். அவர்களுக்கான எல்லாச் சலுகைகளையும், எல்லா உரிமைகளையும் தர வேண்டும், வீடுகளைக் கட்டித் தர வேண்டும், நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், அதே நேரத்திலே, இந்த அரசு இன்றைக்குக் காவல் துறைக்கும், சிறைச்சாலைக்கும் முக்கியத்துவம் தருகின்றபோது, அடித்தளத்திலே இருக்கின்ற ஏழையெளிய பாட்டாளி வர்க்கத்தையும் நீங்கள் கைவைக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் எங்களுடைய வேதனையான செய்தி.

[திரு. தி. வேல் முருகன்] [2004 பிப்ரவரி 5

இன்றைக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி இருப்பதைக்கூடச் சொன்னார்கள். அதற்கு அரசாங்கம் பணம் தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால், என்னுடைய கடலூர் மாவட்டத்திலே எந்தவொரு விவசாயியும் 5 எச்.பி.-யும், 3 எச்.பி.-யும் வைத்து விவசாயம் நடத்தவில்லை. இன்றைக்கு வீராணம் திட்டத்தைக்கூட நம்முடைய அரசு கையிலே எடுத்திருக்கிறது. இதிலேகூட, அவர் நாசூக்காகச் சொல்லியிருக்கிறார். திட்டம் மே மாதம் முடிந்து விடும் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, சென்னைக்கு மே மாதம் நாங்கள் தண்ணீர் கொண்டு வருவோம் என்று அறுதியிட்டு கவர்னர் உரையிலேகூடச் சொல்ல முடியவில்லை. ஏனென்று சொன்னால், இவர்களால் சொல்ல முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். இன்றைக்கு வீராணம் திட்டம் என்பது...

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திட்டம் மே மாதம் முடிந்தவுடன் தண்ணீர் வருவதற்காகத்தான் அந்தத் திட்டம் தீட்டப்பட்டது. தண்ணீர் வரும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எனக்குக் கிடைத்த தகவல் பிரகாரம்–அமைச்சருக்குக் கிடைத்திருக்கும் அதிகமான தகவல்கள். நான் மறுக்கவில்லை. ஆனால்–இன்றைக்கு அந்த வீராணமே காய்ந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு கிரிக்கெட் ஆடிக் கொண்டிருக்கின்றார்கள், என்னுடைய மாவட்டத்து மாணவர்கள், இளைஞர்களெல்லாம். ஒரு சொட்டுத் தண்ணீர்கூட தற்போது அங்கு இல்லை. அப்படி இருக்கையில், எப்படி வீராணம் தண்ணீரைக் கொண்டு வந்து சென்னை மக்களைக் காப்பாற்றப் போகிறீர்கள் என்பதை நாங்களும் பார்க்கப் போகிறோம். நீங்களும் பார்க்கப் போகிறீர்கள். ஆனால் இன்னும் ஒரு செய்தி. இன்றைக்கு, 45 ஆழ்குழாய்க் கிணறுகள்–ஒரு ஆழ்குழாய்க் கிணறு 1,200 அடியிலே 1½ அடி அகலத்திற்கு, இன்றைக்கு—அந்த மாவட்டத்தினுடைய எல்லை ஓரங்களிலே, குறிப்பாக என்னுடைய தொகுதியிலே போர்வெல் போட்டு, தண்ணீரைக் கொண்டு வருவதற்கு ஆயத்தப் பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டிருக்கிறது. என்னுடைய கேள்வி எல்லாம், இன்றைக்கு N.L.C. நிர்வாகம் அங்கே இருக்கிறது. 1200 அடிக்கும் கீழே அங்கே நீர்மட்டம் சென்று கொண்டிருக்கிறது. அங்கே நிலக்கரி வெட்டி எடுக்கப்படுவதால், அந்த மாவட்டத்து மக்கள் குடிநீர் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை...



2004 பிப்ரவரி 5]

பிற்பகல் 12–40

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே நீர் ஆதாரத்தின் அளவைக் கண்டு, அங்கேயிருக்கின்ற விவசாய மக்கள் பாதிக்கப்படாத அளவிற்கு நீர் ஆதாரம் இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டுதான் அங்கு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, அதன் மூலம் தண்ணீரைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய வீராணம் திட்டம், வீணான திட்டம் என்பது எல்லோரும் சொன்னது; தொழில்நுட்ப வல்லுநர்கள் முதலாகச் சொன்னது. அதற்கும் மேலாக, அந்தப் பகுதி மக்களை, விவசாயிகளை வாட்டி, வதைக்கக்கூடிய சூழ்நிலையிலே ராட்சஸ போர் போடக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஏற்கெனவேகூட, N.L.C. பகுதி ஆழமாக இருக்கின்ற காரணத்தினாலே, தண்ணீர் கெட்டு கடல் நீர் அந்தப் பகுதி நோக்கி வருவதாக வல்லுநர்கள் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலே, அங்கு ராட்சஸ போர் போட்டுத் தண்ணீர் எடுக்கக்கூடிய நிலை தேவையில்லாதது. அந்த விவசாய மக்களை, அந்தப் பகுதி மக்களைப் பாதிக்கக்கூடிய திட்டம் இது. இதைக் கட்டாயம் அரசு கைவிட வேண்டுமென்பதுதான் எங்களுடைய கருத்து.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீராதாரத்தின் அளவைக் கணக்கு எடுத்து, அதன் அடிப்படையிலேதான் தண்ணீர் கொண்டு வருவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. எந்தச் சூழ்நிலையிலுமே விவசாய மக்களை அந்த இடத்தில் அது பாதிக்காது என்பதை ஆணித்தரமாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அந்த மாவட்டத்துக்காரன். கடந்த ஆண்டுகூட அரசு தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டு வந்தார்கள். அது முழுக்க, முழுக்க என்னுடைய தொகுதியிலிருந்து போர்வெல் மூலமாக உறியப்பட்ட தண்ணீர். கிட்டத்தட்ட 800 அடியிலிருந்து நீர்வரத்து கீழே சென்றிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு நீர்வளம் பாதுகாக்கப்படும் என்று சொல்கிறார்கள். அது எந்த அளவுக்கு? எங்களுடைய மாவட்டத்து மக்களுடைய நிலைமையையும் நீங்கள் கொஞ்சம் உணர்ந்து பாருங்கள்.

நீங்கள் இன்றைக்கு இலவச மின்சாரத்தை ரத்துச் செய்து விட்டீர்கள். நாங்கள் இன்றைக்கு போர்வெல் மூலமாக விவசாயம் செய்துகொண்டிருக்கிறோம். 5 H.P., 3 H.P.–க்குத்தான் நீங்கள் மானியம் தருகிறீர்கள். நாங்கள் அங்கே வைத்துத் தண்ணீர் எடுப்பது 10 H.P., 15 H.P., ஆகவே, அதிலும் நாங்கள் புறக்கணிக்கப்படுகிறோம். குடிநீரும் N.L.C. நிறுவனத்தின் காரணமாகக் கீழே சென்று விட்டது. வீராணத்தில், தப்பித் தவறி காவிரியிலிருந்து தண்ணீர் வந்தால், அதையும் நீங்கள் சென்னைக்குக் கொண்டு வந்துவிடுவீர்கள். ராட்சஸ போர் போட்டு தண்ணீரைக் கொண்டு வருவீர்கள். அப்போது எங்களுடைய நிலைமை என்ன? சென்னை மக்களுக்குத் தண்ணீர் தர வேண்டும். அது அரசாங்கத்தினுடைய கடமை. அதிலே எங்களுக்கும் கடமையிருக்கிறது. நாங்கள் அதை வரவேற்கிறோம். ஆனால் அந்த மாவட்டத்தினுடைய...

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** அந்த விவசாயப் பெருங்குடி மக்களைப் பாதுகாக்கின்ற பணியும் தமிழகத்து முதலமைச்சரைச் சாரும். ஆகவே, அவர்களையும் பாதுகாக்கின்ற கடமை முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு உண்டு என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பாதுகாப்பார்கள், சரி. என்னுடைய கேள்வி எல்லாம், இப்போது இந்த வீராணம் திட்டத்தின் மூலமாக, சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருகிறோம் என்று சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால் 1993 ஆம் ஆண்டு 464 கோடி ரூபாய்க்கு இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. தற்போது 730 கோடி ரூபாய் என்று சொல்கின்றீர்கள். 10 ஆண்டு காலத்தில் எந்த அடிப்படையில் இன்றைக்கு 730 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அதனுடைய cost expenditure –ஐ எந்த ரீதியிலே நம்முடைய அரசு கணக்கு எடுத்து, அதற்கு இவ்வளவு தொகை உயர்த்தப்பட்டிருக்கிறது? இன்றைக்கு—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஸ்டீல் பைப், மிகவும் தரமான பைப் அமைக்கப்பட்டு நல்ல நிலையிலே ஏற்பாடு செய்வதற்காக இந்தத் தொகையானது செலவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்டீல் பைப் என்பது எனக்குத் தெரியும். ஸ்டீல் பைப்பிற்கும்,



கடந்த காலத்தில் தயாரிக்கப்பட்ட சிமெண்ட் பைப்பிற்கும் விலை வித்தியாசம் மட்டும் இவ்வளவு கோடி ரூபாய் உயர்ந்துவிடாது. அதில் வேறு என்ன காரணங்கள் இருக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள -(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நிமிடத்தில் பேசி முடித்துகொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நினைப்பது போல வேறு எந்தக் காரணமும் கிடையாது. தரமான பைப் என்கின்ற அதன் அடிப்படையில்தான் இந்தத் திட்டம் தீட்டப்பட்டு செயல்படுத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னொரு வேதனையான செய்தி. நம்முடைய தமிழக அரசு– இங்கேகூட திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் புகழேந்திகூடப் பேசினார்கள். என்னுடைய தொகுதியில் கள்ளச் சாராயச் சாவுகள் என்பது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கள்ளச் சாராயம் கடலூர் மாவட்டத்தில் இன்றைக்குப் பெருமளவிற்கு விற்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்டத்தினுடைய காவல் துறைக் கண்காணிப்பாளர் அவர்களும் நேர்மையாக இருக்கின்றார்கள். மறுக்கவில்லை. ஆனால், அங்கே இருக்கக்கூடிய subordinate அதிகாரிகள் என்று சொல்லக்கூடிய துணை நிலை அதிகாரிகள் எல்லாம்—கள்ளச் சாராயத்தை அங்கே இருக்கக்கூடிய காவல் துறை அதிகாரிகளே, அவர்களே—அதை விற்பதற்கு அனுமதி தந்து, இன்றைக்கு விற்று வருகின்றார்கள். தொடர்ந்து எங்களுடைய பகுதியிலே இந்தக் கள்ளச் சாராயச் சாவுகள் நடந்த வருகின்றன. ஆக, இப்படிப்பட்ட ஒரு அவலமான நிலையிலேகூட, நம்முடைய அரசு இன்றைக்கு டாஸ்மாக் மூலமாக விற்பனையைத் தொடங்கியிருக்கிறது.

ஒரு வேதனையான செய்தி என்று சொன்னால்; இன்றைக்கு 36 ஆயிரம் இளைஞர்களுக்கு நாங்கள் வேலைவாய்ப்புத் தந்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். பட்டப் படிப்புப் படித்துவிட்டு, பி.இ., படித்துவிட்டு, பிஎஸ்சி., படித்துவிட்டு, எம்ஏ., படித்துவிட்டு தமிழ்நாட்டில் மொத்தம் 50 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்புக் கேட்டு அரசிடம் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அரசு வேலைவாய்ப்புத் தருவதற்கு மறுத்துவிட்டது. நான் உங்களுக்கு வேலை தருகிறேன், வாருங்கள்

என்று, அரசாங்கத்தினுடைய குவார்ட்டர் பாட்டில்களையும், ஹாஃப் பாட்டில்களையும் உடைத்து, விற்று அரசுக்குப் பணத்தை ஈட்டித் தாருங்கள் என்று, படித்த இளைஞர்களை இவ்வளவு மோசமான ஒரு நிலைமைக்கு கொண்டு செல்கின்ற நிலையை இந்த அரசு மாற்றிக்கொள்ள வேண்டும். படித்த இளைஞர்களுக்கு, அதிலும்கூட அந்தத் தொழிலைச் செய்வதற்குக்கூட 50 ஆயிரம் ரூபாய் டெபாசிட் வேண்டுமென்று நம்முடைய அரசு அறிவிக்கிறது. ஆதலால் மாண்புமிகு தமிழக அரசை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், படித்து இருக்கின்ற 50 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும்.

*பிற்பகல் 12–45*

இன்னும் ஒன்றைச் சொல்லி இருக்கிறார்கள். இந்த அரசு தமிழ், மொழி, கலை, பண்பாடு, இவற்றிலே மிகப் பெரிய கவனம் செலுத்தும் என்று சொல்லி இருக்கின்றார்கள். நான் கேட்கின்றேன். இன்றைக்குத் தமிழகத்திலே வெளியிடப்படுகின்ற திரைப்படங்களிலே தமிழையே காணோம். அதைப் பற்றிக்கூட, இன்றைக்கு நாம் சினிமாவிலே தமிழே இல்லை என்று கவலைப்படவில்லை. ஆனால் இன்றைக்குத் தமிழ் எந்த அளவிற்குச் சீரழிக்கப்படுகிறது; நம்முடைய பண்பாடும், கலாச்சாரமும், நாகரிகமும் எந்த அளவிற்குச் சீரழிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் பெருமக்கள், வருகின்ற புதிய திரைப்படங்களின் பாடல் வரிகளை நீங்கள் உணர்ந்து, அதனுடைய உள் கருத்துகளை உணருவீர்கள் என்று சொன்னால், நாம் நிச்சயமாக யாரும் இன்றைக்குக் குடும்பத்துடன் எந்த ஒரு படத்தையும் பார்க்க முடியாது. எந்த ஒரு டிவி. தொடரையும் பார்க்க முடியாது. அவ்வளவு அநாகரிகமான இரட்டை வசனங்கள்; மிகக் கொடுமையான ஒரு பண்பாட்டுக் கலாச்சாரச் சீரழிவினை நோக்கி தமிழ் சினிமா பாடல் வரிகள் நம்மை இழுத்துச் செல்லுகின்றன.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Order. (குறுக்கீடு) ஒரே ஒரு point. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தொகுதியிலே கள்ளச் சாராயம் விற்பதாகக் குறிப்பிடுகின்றார்கள். அதை அங்கே இருக்கக்கூடிய காவல் துறையிடத்திலே தெரிவிக்கலாம்; அதைத் தவிர்த்து சட்டமன்றத்திலே வந்து கூறுகின்றார்கள் என்றால், ** விற்கின்ற காரணத்தினால் மட்டும் நீங்கள் காவல் துறை– (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேல் முருகன், உங்களுடைய பேச்சை இத்தோடு முடித்துக்கொள்ளுங்கள் (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுங்கட்சி வரிசையிலே உள்ள உறுப்பினர் பேசிய பேச்சை அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டும் ** என்ற காரணத்தினாலே என்று சொல்லுவது தவறானது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேல் முருகன், பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அரசாங்கத்தினுடைய குறைகளைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறேன். ஆனால் தோழர், என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர் சிவசாமி அவர்கள் சொன்னது அவதூறானது. என்னுடைய பாரம்பரியத்திலேயே அது கிடையாது. ஆனால் அவர்கள் யார் என்பதை நான் இங்கே பட்டியல் வாசிப்பேன். யார், யார் விற்கிறார்கள் என்று. அதற்கு நீங்கள் தயாரா? தேவையில்லாத குற்றச்சாட்டைச் சொல்லக் கூடாது. (குறுக்கீடு) **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. மாண்புமிகு உறுப்பினர்,** என்று சொன்னதை, ** என்று சொன்னதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டும், ** என்று சொன்னது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திரைப்படங்களிலே ஆபாசமான பாடல்கள் எல்லாம் வருகின்றன என்று சுட்டிக்காட்டினார்கள். இது ஒரு சமூகப் பிரச்சினை. சட்டத்தின் மூலமாக நிச்சயமாக அதைத் தடுக்கலாம். மக்களிடத்திலும் அதிலே ஒரு மன மாற்றம் தேவை. அந்த மன மாற்றத்தை எல்லோருமே செய்தால் அது நன்றாக இருக்கும். பொதுவாகவே அதையும் மக்கள் விரும்புகின்ற ஒரு போக்கு, மிகவும் மன வருத்தும் தரக்கூடிய ஒரு போக்காக இருக்கின்றது. சில படங்களிலே கூட, "நான் ரெடி, நீ ரெடியா?", "செல்போனா மாறிவிட நான் ரெடி, சிம் கார்டாக மாறிவிட நீ ரெடியா"? (சிரிப்பு) அப்புறம், "கல்யாணந்தான் பண்ணிக்கிட்டு ஓடிடலாமா? இல்லை, பிள்ளையைத்தான் பெத்துக்கிட்டு ஓடிடலாமா", இந்த மாதிரிப் பாட்டெல்லாம் மிகவும் (குறுக்கீடு) மன்மத ராசாவா அது? நீங்கள் பார்த்திருப்பீர்கள்போல் இருக்கிறது. (குறுக்கீடு) அந்தப் படத்தை நான் பார்க்கவில்லை. நான் பார்க்கவில்லை அந்தப் படத்தை (சிரிப்பு) அந்த மாதிரி மிகவும் ஆபாசம் தொனிக்கின்ற அளவுக்குப் பாடல்கள் இருப்பது மிகவும் வருத்தப்படக்கூடிய ஒன்றாக இருக்கிறது. எனவே, நாட்டு நலன் கருதி, மக்கள் நலன் கருதி, சட்டங்களை இயற்றுவதில்

**மாண்புமிகு. பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[திரு. டி. ஜெயக்குமார்] [2004 பிப்ரவரி 5

மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலேயே முன்னோடியாக இருக்கின்றார்கள். எனவே, இந்தக் கருத்தும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேல் முருகன், உங்களுடைய பேச்சை இத்துடன் முடித்துக் கொள்ளுங்கள். அடுத்து, திருமதி செல்வி முருகேசன், (குறுக்கீடு)

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இரண்டு முறை சாராயச் சாவுகள் நடந்து மிகப் பெரிய இழப்பு ஏற்பட்டிருப்பதால் நான் இதைச் சுட்டிக்காட்டினேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேல் முருகன், சாராயத்தைப் பற்றிய பேச்சை முடித்துக் கொள்ளுங்கள். அது நீக்கப்பட்டு விட்டது. அதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கியாகி விட்டது.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து வற்புறுத்திப் பேசி வருகிறேன், என்னுடைய தொகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரி வேண்டும், அல்லது தொழில் நுட்பக் கல்லூரி வேண்டும், பாலிடெக்னிக் வேண்டுமென்று. ஆனால், இந்த அரசின் இந்த கவர்னர் உரையிலே இல்லை. எப்போதும் எந்த அமைச்சரும், முதலமைச்சர்கூட எழுந்து, சரி, உன்னுடைய கோரிக்கையை— எதிர்க்கட்சி உறுப்பினர் இத்தனை ஆண்டு காலமாக கோரிக்கை வைத்துக்கொண்டு இருக்கிறாயே,–செய்து தருகிறேன் என்று மனமுவந்து யாரும் சொன்னதாக வரலாறுகள் இல்லை. அதனால் இந்த முறையும் அந்தக் கோரிக்கைகளை நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியிலே தமிழக அரசு ஒரு கலைக் கல்லூரியும், ஒரு தொழில்நுட்பக் கல்லூரியும் தொடங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடத்திலே என்னுடைய பேச்சை முடித்து விடுகிறேன், controversial-ஆக எதுவுமே கிடையாது. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே, கும்பகோணம்–சென்னை சாலையில் ரயில்வே மேம்பாலம் கேட்டு, மூன்று ஆண்டுகளாக நான் வலியுறுத்திப் பேசி வருகிறேன். அதையும் அமைப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு, கள்ளச் சாராயம் ஒழிக்கப்படுவதற்கு என்னுடைய மாவட்டத்திலே தனிக் கவனம் செலுத்தி, மீண்டும் சாராயச் சாவுகள் நடக்காதவண்ணம் காக்க வேண்டுமென்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி.



2004 பிப்ரவரி 5]

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி செல்வி முருகேசன்.

***திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத ஞானச் செருக்கும் கொண்டு, புறப்பட்ட புயலாய், மனதில் உறுதியோடு, மற்றவர் வாழ்த்துப் பாட, மாற்றான் மனம் பதற, அரசியல் வானில் அர்த்தமுள்ள குளிர் நிலவாய், புதியதோர் வரலாறு படைத்து, சமூக நீதியை நிலைநாட்டி, அநீதியை, அக்கிரமத்தை அகற்றிய புரட்சி பூபாளமே, காலம் தந்த கலங்கரை விளக்கமே, கருணையின் உண்மை உருவமாய் விளங்கிக் கொண்டிருக்கின்ற, நான் வணங்கும் தெய்வம் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, இந்த மாமன்றத்தில் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது வழிமொழிகின்ற வாய்ப்பை அளித்த என்னை வாழ வைத்த தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றியினைக் காணிக்கையாக்கி, எனது உரையைத் தொடங்குகிறேன்.

மேதகு ஆளுநர் உரை என்பது, வெறும் வார்த்தைக் குவியல்களாக, சபைக்காக எழுதப்பட்ட சாதாரண வார்த்தைகள் அல்ல. புல்லுக்கு மூலாம் பூசி முருங்கை என விற்பவர்களுக்கு மத்தியில், மேதகு ஆளுநர் உரை கொள்கைத் திரட்டாக, கருத்துக் குவியல்களாக, வரலாற்றுப் பெட்டகமாக, தமிழகத்தின் வளமான எதிர்காலத்தைத் திறந்துவிடும் வசந்தக் காற்றாக, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணங்களை எடுத்துரைக்கின்ற உரையாக, தமிழக மக்களின் உணர்வுகளை, அவர்களுடைய அடிப்படைத் தேவைகளை அணுகுவதிலும், ஆராய்ந்து அதைத் தீர்ப்பதிலும், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுத்து, நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டி, நம் அம்மாவின் அரசு, மக்களின் நலனில் தெளிவான பார்வையை, அக்கறையைக் காட்டும் வரலாற்றுப் பெட்டகமாக அமைந்துள்ளது என்பதை நான் உளமாரப் பாராட்டி வரவேற்கின்றேன்.

*சுருக்கமாகச் சொல்லப் போனால், அம்மா !, இந்த ஆளுநர் உரையின் மூலமாக, நீங்கள் அனைவருக்கும் உண்ண [illegible], வண்ண, வண்ணக் கனவுகளோடு பள்ளிக்குச் [illegible] ாவிடப்*

185087

[திருமதி செல்வி முருகேசன்] [2004 பிப்ரவரி 5

பெண் குழந்தைகளுக்கு இலவச சைக்கிள் கொடுத்து, தன்னலம் கருதாத தர்மத் தாயாக விளங்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

பிள்ளைக்கு என்ன வேண்டும் என்பது, பேணிக் காக்கும் தாய்க்குத்தான் தெரியும். தமிழக மக்களால், 'அம்மா, அம்மா' என்று அன்போடு அழைக்கப்படும் எங்கள் அன்பு தெய்வமே! தங்களுக்கு மட்டும்தான் தெரியும், தமிழக மக்களுக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று. ஆனால்,

"தன்பெண்டு, தன்பிள்ளை, சோறு, வீடு,
சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்,
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்"

என்ற பாரதிதாசனின் வரிகளுக்கேற்ப, இந்நாளில் வாழ்ந்து கொண்டிருப்போர்க்கு, இது தெரிந்திருக்க நியாயமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய தேசத்தினுடைய ஒற்றுமைக்கு ஊறு விளைவிப்பவர்கள் யாராக இருந்தாலும், இந்த தேசத்தின் பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிப்பவர்கள் யாராக இருந்தாலும், நாட்டின் இறையாண்மைக்குச் சவால் விடுபவர்கள் எவ்வளவு சக்தி படைத்தவர்களாக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதிலே, அடக்குவதிலே, இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவதிலே, வீரத்தின் விளைநிலமாய் விளங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, எந்த நிலையிலும் பாரபட்சம் காட்டியதில்லை என்பதை இந்த அவை உணரும் என்பதை அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

கடந்த கால தமிழகத்தின் வளர்ச்சியின்மையையும், முடங்கிவிட்ட நிதிநிலைமையையும் புறந்தே ஒதுக்கித் தள்ளி, வியத்தகு திருப்புமுனையாக, சீர்திருத்த நடவடிக்கைகளையும், வளர்ச்சிக் கோட்பாடுகளையும் ஒருங்கிணைத்து, தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கிய பெருமை, மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும் என்று மேதகு ஆளுநர் அவர்கள் மகிழ்ச்சியோடு, பெருமையோடு தெரிவித்துள்ளார்கள்.

நாட்டிலே சட்டம்–ஒழுங்கு மிகத் திறமையான முறையிலே பராமரிக்கப்பட்டு, கடந்த கால ஆட்சியில் பெருகிப் போன சாதிக் கலவரங்கள், மதக்கலவரங்கள், கொலை, கொள்ளை, குண்டு வெடிப்புகள் போன்ற தீய சக்திகள் எல்லாம் அடியோடு அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, தமிழகம் இன்றைக்கு ஒரு அமைதிப் பூங்காவாக எங்கள்



2004 பிப்ரவரி 5] [திருமதி செல்வி முருகேசன்]

அம்மா அவர்களின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது என்பதை நாட்டு மக்கள் மனதார, நிம்மதியோடு வாழ்த்திக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். தலைவர் அவர்களே! இதற்காகக் காவல் துறையை நவீனப்படுத்தி, நிர்வாகக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திக் கொடுத்து, தமிழ்நாடு காவல் துறை, இந்தியாவின் சிறந்த மாநிலக் காவல் துறையாக மாறியுள்ளது. காவலர்களுக்குத் தேவையான வசதிகளையும் அளிப்பதோடு, கருணையுள்ளத்தோடு, மனித நேயத்தோடு நேரிலே அழைத்து, குறைகளைக் களைந்தவரல்லவா எங்கள் இதயதெய்வம் அம்மா அவர்கள்!

காவல் துறையில், மகளிர் காவல் நிலையங்களை வலுப்படுத்தி, புதிய வாகனங்கள், புதிய தளவாடங்கள், குடியிருக்க ஆறாயிரம் வீடுகள், குழந்தைகள் காப்பகங்கள் என்பதோடு மட்டுமல்லாமல், 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?' என்ற காலம் மாறிப் போய், 'கரண்டி பிடித்த பெண்களின் கைகளிலே இன்று ஏ.கே. 47 gun பிடிக்கும் பெண் கமாண்டோக்கள்' என்ற வியத்தகு அதிசயங்கள் எல்லாம், உலக வரலாற்றிலே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் நடந்து கொண்டிருக்கின்றன.

அவைக்கு வராமலேயே, அவை நடவடிக்கைகளுக்குப் பயந்து, அறைக்குள்ளேயே உட்கார்ந்து கொண்டு அறிக்கை விட்டுக்கொண்டு, ஏ.சி. அறையில் உட்கார்ந்து கொண்டு கதை, கவிதை, கட்டுரை எழுதுபவர்களுக்கு, இவையெல்லாம் எங்கே தெரியப் போகிறது?

*பிற்பகல் 12–55*

'பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'

என்ற பாரதியின் வைர வரிகளுக்கு ஏற்ப, அனைத்து முதன்மையான துறைகளில், முக்கிய பதவிகளில் பெண்களை நியமித்து பெண்ணினத்திற்குப் பெருமை சேர்த்த மாதர் குல மாணிக்கம் அல்லவா எங்கள் தாய்!

'வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம்
என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்'

என்பதை நிரூபிக்க, 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட மகளிரை உறுப்பினராகக் கொண்ட 1.52 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் சிறப்பான முறையில் அம்மா அவர்களின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகின்றன என்பது பெண்ணுரிமையைப் பெருமளவு உயர்த்தி உள்ளது

என்பதற்காக மேதகு ஆளுநர் தனது உரையிலே பாராட்டியுள்ளார்கள். புரட்சிகரமான தொட்டில் குழந்தைத் திட்டம் 1221 பெண் குழந்தைகளைக் காப்பாற்றி உள்ளது.

நாம் என்ன செய்தோம், எவ்வளவு செய்தோம் என்பதைவிட, எவ்வளவு அன்போடு செய்தோம் என்பதுதான் மிக முக்கியம். இதை நான் சொல்லவில்லை. அன்னை தெரசா அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள். அன்னை தெரசா அவர்களின் பாராட்டைப் பெற்ற, புகழுரையைப் பெற்ற அம்மா அவர்கள் மகளிர் மேல் கொண்ட அன்பின் வெளிப்பாடுதான் இத்தனை அரிய பல திட்டங்களும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

'நீரின்றி அமையாது உலகு' என்று சொன்னவர் தெய்வப் புலவர் திருவள்ளுவர். தென்மேற்கு, வடகிழக்குப் பருவ மழை பொய்த்து, வரலாறு காணாத வறட்சியின் கோரப்பிடியில் தமிழகம் சிக்கித் தவித்துக் கொண்டு இருக்கும் நிலை; வறண்ட கருவூலம்; இருண்ட எதிர்காலத்தில் தள்ளப்பட்ட, ஒட்டிய வயிறும், ஒடிந்த தேகமுமாய் ஏங்கிய விவசாயப் பெருங்குடி மக்களின் துயர் துடைக்க, தாயுள்ளம் கொண்ட எங்கள் அம்மா அவர்கள் எடுத்த போர்க்கால நடவடிக்கைகள்தான் எத்தனை, எத்தனை என்பதை நாம் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும். விவசாயிகள் வாங்கிய கடனுக்கான வட்டி மற்றும் அபராத வட்டித் தள்ளுபடி; சென்னை தவிர ஏனைய 28 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, ஏழை, எளிய விவசாயிகளுக்கு ரூபாய் 115.94 கோடி செலவில் மாதம் 30 கிலோ தரமான அரிசி இலவசமாக வழங்கி, 'காலத்தினாற் செய்த உதவி, ஞாலத்தின் மாணப் பெரிது' என்று காலங்கருதி உதவி செய்து, விவசாயிகளின் வயிற்றில் பாலை வார்த்தவரல்லவா நம் அருள் நெஞ்சம் படைத்த வாரி வழங்கும் அம்மா அவர்கள்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்துவதற்கு முன்பே, காதுகளைச் செவிடாக்கிக் கொண்டு, மக்களுக்கு ஆற்றும் கடமைகளை மறந்து, இருக்கைகளைக் காலி செய்துவிட்டு ஓட்டம் பிடிக்கின்றனர் எதிர்க்கட்சி உறுப்பினர்கள். அதுவும் மகா கூட்டணியோடு, நியாயமற்ற, கொள்கையற்ற கூட்டணியோடு, தனது கணவரின் மரணத்திற்கு யார், யார் காரணம், எந்த, எந்தக் கட்சிகள் காரணம் என்று ஜெயின் கமிஷன் அறிக்கையைப்





படித்துப் பார்த்த பிறகும், இப்படி ஒரு கூட்டணி அமைக்க மனது வருகிறது என்றால், இந்திய மண்ணில் பிறந்த எவருக்கும் இப்படி ஒரு நினைப்பே வராது. பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய மண்ணில் பிறந்த எவருக்கும் இப்படி ஒரு நினைப்பே வராது. வெளிநாட்டுக்காரர்களுக்கு, இந்திய மண்ணின் அருமை, பெருமை எல்லாம் பற்றித் தெரிந்திருக்க நியாயமில்லை; அதைப் பற்றி அவர்களுக்குக் கவலையும் இல்லை. ஆனால், எப்படி வேண்டுமானாலும் கூட்டணி அமைத்து, யார் முதுகில் வேண்டுமானாலும் சவாரி செய்யலாம் என்று எண்ணுகின்றனர். இந்தியரா, வெளிநாட்டுக்காரரா என்பதை நாட்டு மக்கள் நிரூபிப்பார்கள்.

பின்னங்கால் பிடரியில் அடிக்க, புறமுதுகிட்டு ஓடும் எதிர்க்கட்சி உறுப்பினர்களே, உங்கள் கோரிக்கைகள்தான் என்ன? (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே,. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நீங்களாக எதற்குப் பிரச்சினையை வளர்க்கிறீர்கள்? உட்காருங்கள். அவர்கள் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஒரு பொதுவான கருத்தைத்தான் சொல்கிறார்கள்.

**திரு. துரைமுருகன்:** உறுப்பினர் பேசும்போது, எதிர்க்கட்சிகளை, பின்னங்கால் பிடரியில்பட ஓடுகிறவர்கள் என்று சொல்வதைத் தாங்கள் அனுமதித்தால், அது இருக்கட்டும். இல்லாவிட்டால், இப்படித் திருப்பி எங்களுக்கு அடிப்பதற்கு அனுமதி தர வேண்டும். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுவாகத்தான் சொல்கிறார்கள், பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி முருகேசன் அவர்கள் பேசுகிறபோது, இந்தியரா, வெளிநாட்டுக்காரரா என்றெல்லாம் சொல்கிறபோதே, நிச்சயமாக எங்களுடைய தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களைத்தான் அவர்கள் கூறுகிறார்கள் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. ஏற்கெனவே அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர் ஓர் இந்தியர் என்பது, ஏற்கெனவே அதெல்லாம் அனுமதிக்கப்பட்டு, அவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சுப்ரீம்

கோர்ட்டில் அதற்கான ஒரு தீர்ப்பும் கிடைக்கப்பெற்று, இந்தியர் என்று வரையறுத்துச் சொல்லப்பட்ட ஒரு தலைவரை இந்த அளவிற்கு இந்த அவையிலே, அவையில் இல்லாத ஒருவரைப் பற்றிப் பேசுகிற ஒரு ** இந்த இடத்திலே இருக்கக் கூடாது; அவைக் குறிப்பில் இருந்து எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் விளக்கம் சொன்னீர்கள்; அந்த விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** பின்னங்கால் பிடரியில்பட ஓடுகிறார்கள் என்பது இருக்கலாமா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது தமிழில் ஒரு மரபுத் தொடர்தான். (குறுக்கீடு) அது மரபுத் தொடர்தான். அதில் ஒன்றும் தப்பு இல்லை. (குறுக்கீடுகள்) 'பின்னங்கால் பிடரியிலே அடிபட ஓடுவது' என்பது ஒரு மரபுத் தொடர்; அது ஒரு இலக்கியச் சொல் அவ்வளவுதான்; அதிலே ஒன்றும் தப்பு இல்லை.

*பிற்பகல் 1–00*

**திரு. துரைமுருகன்:** இலக்கியச் சொல் அல்ல, தலைவர் அவர்களே, இழிவான சொல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இழிவான சொல் ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) ** என்பது அவைக் குறிப்பில் ஏறக்கூடாது.

**திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களே, உங்கள் கோரிக்கைகள்தான் என்ன? அவையிலே அமர்ந்து, நிதானமாக, பொறுமையாகக் கூறுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பொதுவான கருத்தைச் சொல்கிறார். அதிலே ஒன்றும் இல்லை.

**திருமதி செல்வி முருகேசன்:** இதோ உங்கள் கோரிக்கைகளுக்கு முத்து, முத்தாக, வைர வரிகளாக மேதகு ஆளுநர் அவர்களது உரையிலேயே அனைத்தும் அடங்கி உள்ளது. ஆனால், அதுவல்ல காரணம். மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் சாராம்சங்களைக் கேட்கத் தைரியம் இல்லாமல், மனம் இல்லாமல், எவருக்கும் அஞ்சேன்,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



எதைக் கண்டும் பயப்படேன் என்ற வீரத்தின் விளைநிலம், வீரத் திருமகள், வெற்றித் திருமகள் அம்மா அவர்களின் முன்னால் நின்று கருத்துகளை எடுத்து வைக்கத் தைரியம் இல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) முகம் பார்த்துப் பேச அஞ்சி, ஆளுநர் உரையை அவமதித்துவிட்டு, மலிவான விளம்பரத்தைத் தேட ஓடிக் கொண்டிருக்கிறீர்கள். நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். நல்ல பாடம் புகட்டத்தான் போகிறார்கள் என்பதை இந்த அவையிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழ் வித்தகர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.(குறுக்கீடுகள்) அன்னைத் தமிழ் மொழியை உயர்தனிச் செம்மொழியாக்கிட.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், உட்காருங்கள், உட்காருங்கள். இல்லை, இவ்வளவு ஆத்திரப்பட வேண்டியது இல்லை. (குறுக்கீடு) (குறுக்கீடு) இவ்வளவு ஆத்திரப்பட வேண்டியது இல்லை. (குறுக்கீடு) நீங்கள் அனுபவம் வாய்ந்த உறுப்பினர். (குறுக்கீடு) இதில் ஒன்றும் தவறு இல்லை. நீங்கள் பேசும்போது விளக்கம் சொல்லுங்கள்.

**திருமதி செல்வி முருகேசன்:** முத்தமிழ் வித்தகர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழ் மொழியை, உயர்தனிச் செம்மொழியாக்கிட, உலகம் போற்றும் வகையில் உயர்த்திட, அனைவரும் அறிவியல் தமிழ் கற்று வளர ரூ.5.4 கோடி செலவில் அறிவியல் தமிழ்ப் பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்கி, தமிழ்கூறும் நல்லுலகின் தமிழ் வளர்த்த தமிழன்னையே, ஆன்றோர்கள் பாராட்டுகிறார்கள். சான்றோர்கள், அறிவுசால் அறிஞர்கள் பாராட்டுகின்றார்கள். தமிழ், தமிழ் என்று, தமிழைத் தலையில் வைத்துக்கொண்டு, ஊர், ஊராக வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்குத் தமிழ்நாட்டு மக்கள் யாரைப் பற்றி என்ன கவலை? (மேசையைத் தட்டும் ஒலி)

வறட்சியின் கோரப் பிடியில் சிக்கியிருக்கும் சென்னை நகருக்குக் குடிநீர் வழங்க வேண்டும்; என்ன நடக்கிறது? ரயிலிலே ஈரோட்டிலிருந்து தண்ணீர் வரவில்லையா? ஏதாவது ஒரு திட்டம்; புதிய வீராணம் திட்டம், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், இப்படி ஏதாவது ஒரு வகையில் திட்டத்தைக் கொண்டுவந்து, சென்னைவாழ் மக்களுக்குக் குடிநீரை வழங்குவதற்கு மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையில் உதித்த சென்னை நகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கும் சீரிய திட்டம் அல்லவா இது? இதைப் பற்றியும் குறைகூறிக் கொண்டிருந்தால் சென்னை நகர மக்களுக்கு எப்படித்தான் குடிநீர் வழங்குவது?

ஊராட்சிகளுக்கு, நகராட்சிகளுக்கு, பேரூராட்சிகளுக்கு என்று ரூ.463.54 கோடி ஒதுக்கீடு செய்து, தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுத்த, தாகம் தீர்த்த தனிப்பிறவியல்லவா எங்கள் அம்மா அவர்கள்! விண்ணின் மழைத் துளி, மண்ணின் உயிர்த் துளி என்று, பெய்யும் ஒவ்வொரு சொட்டு மழை நீரையும் வீணாக்காமல் சேமித்து வைப்போமேயானால், எப்படிப்பட்ட கடும் வறட்சியையும் நாம் எதிர்கொண்டு சமாளிக்க முடியும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையில் உதித்த திட்டம்தான் மழை நீர் சேகரிப்புத் திட்டம். இதற்கான கட்டுமானங்கள், மாநகர், நகர், கிராமம் என்று அனைத்துப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டு, நிலத்தடி நீர் சேமிக்கப்படும் பெருந்திட்டம் உலக வரலாற்றிலேயே எந்த ஒரு தலைவரும் அமைத்திராத அரிய, பெரிய திட்டமாக உலகத் தலைவர்கள் இன்றைக்கு வியந்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இவை மட்டுமா? கிராமங்களில் மகளிர் சுகாதார வளாகங்கள், கிராம நிருவாக அலுவலகங்கள், ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு ஹாஸ்டல் வசதி, மீனவர்களுக்கு வீடுகள், அவர்களுக்குப் பாதுகாப்புக் கவச உடைகள், ஏழையெளிய கிராமப்புற மக்கள் மருத்துவ வசதி பெற ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல், ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல், ஆலயங்களுக்குக் கும்பாபிஷேகம், ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதியில் 6000 திருக்கோயில்கள் செப்பனிட 15 கோடி நிதி உதவி, 10,022 பேரை ஆசிரியர் பணியிடங்களில் அமர்த்தி, அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 401.84 கோடி ரூபாய் செலவில் ஒதுக்கீடு செய்தது, இதுபோன்ற பல நல்ல திட்டங்களையெல்லாம் சில பேருக்குப் பாராட்ட மனமில்லாமல் போனாலும், குறை சொல்லி, குற்றம் சொல்லிப் பழக்கப்பட்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். பகவத் கீதையிலேயே அழகாகக் கூறப்பட்டிருக்கிறது; என்னவென்றால், நல்லவர்கள் செய்கின்ற நல்ல காரியங்களைப் பற்றிக் குறை சொன்னால் உங்களுக்கு அழிவு நிச்சயம் என்று. அன்றைக்கே உங்களுக்காக எழுதப்பட்டதுதானோ, என்னவோ?

நெசவாளர்களுக்குச் சேர வேண்டிய தொகையை, உரிய காலத்தில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.399.52 கோடியை கோ-ஆப்டெக்ஸ் மூலம் அளிக்க ஏற்பாடு செய்தது. ரூ.1.19 கோடி செலவில்



22,072 நலிவுற்ற நெசவாளர்களுக்கு இலவச அரிசி வழங்கி, நெசவாளர்களின் இடர்தீர்த்த இதயதெய்வமல்லவா எங்கள் அன்னை அவர்கள்!

*பிற்பகல் 1–05*

ஆலயங்களில் அன்னதானத் திட்டம் மட்டுமல்லாமல், தர்காக்களிலும் அன்னதானத் திட்டம், வாய் இல்லாத ஜீவன்களுக்கும் வாழ்வு அளிக்கும் வகையில் திருக்கோயில்களிலும், தனியாராலும் வளர்க்கப்படும் 100 யானைகளுக்கு, முதுமலை, டாப் ஸ்லிப் போன்ற சரணாலயங்களில் ஒரு மாதம் ஓய்வு மற்றும் மருத்துவ வசதி என்று காத்தவரல்லவா எங்கள் கருணைக் கடல் அம்மா அவர்கள்!

அடித்தளத்து மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்கு, ஆதிதிராவிடர்களுக்கு நிலம் வாங்க என்று 50 சதவிகித மானியத்துடன் கடன் உதவி, போக்குவரத்து நெரிசலில் சிக்கித் திணறிக் கொண்டிருக்கும் சென்னை வாழ் மக்களுக்கு, சிரமத்தைப் போக்க ஆசியாவிலேயே மிகப் பெரிய பேருந்து நிலையத்தை, கோயம்பேட்டில் 37 ஏக்கர் பரப்பில் ரூ.103 கோடி செலவில் நிறுவியது, உலக வங்கியின் உதவியுடன் நெடுஞ்சாலைத் துறையில் உள்ள முக்கிய சாலைகளை மேம்படுத்துதல், தேசிய நெடுஞ்சாலைகளை மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கியச்சாலைகள், கிராமச் சாலைகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள சாலைகள், சிறிய மற்றும் பெரிய பாலங்களை அமைத்தல் போன்றவற்றில் சரித்திரம் படைத்த சாதனையாளர் அல்லவா எங்கள் அம்மா அவர்கள்!

மலேசியா, மாலத்தீவு, ஸ்ரீலங்கா என்று பிழைப்பிற்கு வழி தேடிச் சென்று, ஏமாற்றப்பட்டு, தவறான வாக்குறுதிகளில் சிக்கி, கைதாகி, தண்டனை பெற்று, வெங்கொடுமைச் சிறைகளில் சிக்கித் தவித்த தமிழக இளைஞர்களைத் தண்டனையிலிருந்து காப்பாற்றி, கரை சேர்த்து, பாதுகாப்பாகத் தாய் நாட்டிற்கு அழைத்து வந்து, நேரில் அழைத்து ஆறுதல் கூறி, வேலைவாய்ப்பும் வழங்கி, இந்திய தூதரகங்களில் இனி தமிழ் தெரிந்தவர்களை அதிகாரிகளாக நியமிக்க வேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்திய வீரத் திருமகள், வெற்றித் திருமகள், விவேகத் திருமகள் நம் அன்னையல்லவா! (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காகவாவது எதிர்க்கட்சிகள் பாராட்டியே ஆகவேண்டும்.

காலங்காலமாய், ஏழையெளிய மக்களின் உழைப்பினை உறிஞ்சிய லாட்டரி, மற்றும் கந்து வட்டி அரக்கர்களை அழித்து, கோரப் பிடியில்

இருந்து காப்பாற்றிய ஆற்றல் மிக்க சக்தி நம் அம்மா அவர்கள்! 'இல்லை' என்ற வார்த்தை இனி அகராதியில் இல்லாமலேயே போகும். 'முடியாது' என்பதை முடித்துக் காட்டுபவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சாத்தியம் என்பது வார்த்தையல்ல, செயல் என்பதை நிரூபிப்பவர்தான் நம்முடைய அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இரண்டே இரண்டு கோரிக்கைகளை மட்டும் பணிவோடு வைக்கிறேன். சென்னிமலை, நெசவாளர்கள் நிறைந்த பகுதி; 22 ஊராட்சிகளை உள்ளடக்கிய பகுதி. கிராம மக்களுக்குப் போதிய மருத்துவ வசதி கொடுப்பதற்கு இங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், காங்கேயம் வளர்ந்து வரும் நகரமாக, தேசிய நெடுஞ்சாலையும், போக்குவரத்து நெரிசலும் அதிகம் உள்ள பகுதியாக விளங்கிக் கொண்டு இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், தேங்காய் எண்ணெய் உற்பத்தி மில்களும், அரிசி ஆலைகளும் மிகுந்த அளவில் உள்ளன. இங்கு ஏராளமானோர் வெளியூர்களில் இருந்து வந்து தொழில் செய்துகொண்டு உள்ளனர். இங்கு இருக்கும் அரசு மருத்துவமனையில் அனைத்துப் பிரிவுகளுக்கும் கட்டடங்கள் இருந்தும், போதிய மருத்துவ வசதிகள், செவிலியர்கள், துப்புரவுப் பணியாளர்கள் இல்லை. எனவே, உடனடியாகப் போதிய மருத்துவர்களை நியமிக்கப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்ப் பறவை குஞ்சுகளை அரவணைத்துச் செல்வதைப் போல், தணல் வீசும் பாலை நிலத்துக் கங்காரு தன் வயிற்றுப் பையிலேயே குட்டிகளைப் பாதுகாத்து வருவதுபோல், வரிப்புலி தான் ஈன்ற குட்டிகளை, தன் நெருப்பு விழிகளாலே அகல அபாய விளக்காக உருட்டிக் காட்டிக் காப்பதுபோல் தமிழக மக்களைக் காப்பாற்றுகின்ற காவல் தெய்வம், தமிழகத்தின் ஒளி விளக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித அரசின் எண்ண உணர்வு மலர்கள் இந்த ஆளுநரின் உரையில் இடம் பெற்றுள்ளன.

'தென்பொதிகை தவழ்ந்து வந்த தென்றல்,
தீங்கனியின் சுவை குழைத்த செந்தேன்,



அகிலும், சந்தனமும் அரைத்தெடுத்த பிழம்பு,
இத்தனைக்கு மேலாக அமைந்தது நமது மேதகு ஆளுநரின் உரை'

என்பதை மன நிறைவோடு வரவேற்று, பாராட்டி,

போற்றுபவர்கள் போற்றட்டும், தூற்றுபவர்கள் தூற்றட்டும்,
அணி வகுத்து நிற்போம் அம்மாவின் பின்னே
புறப்படட்டும் ரத கஜ துரக பதாதிகள்

என்று வெற்றி முழக்கமிட்டு, வீர முழக்கமிட்டு, தாயின் திருவடிகளை வணங்கி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திருமதி எஸ். மகேஸ்வரி:** Point of order. பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி முருகேசன் அவர்கள் பேசிய நேரத்திலே, என்னுடைய கணவரைக் கொன்றாலும் பரவாயில்லை என்று சொல்லி, ஜெயின் கமிஷன் அறிக்கையை எல்லாம் புறக்கணித்துவிட்டு, ஒரு கொள்கை இல்லாக் கூட்டணியை-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், அது முடிந்துவிட்டது. திரு. நன்மாறன்.

*பிற்பகல் 1–10*

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 'நிதி நெருக்கடி இருந்தபோதிலும், சமூகப் பாதுகாப்பு வளையம் ஒன்று வகுக்கப்பட்டு, வலுப்படுத்தப்பட்டுள்ளது' என்ற வாக்கியம் உரையில் இடம் பெற்று இருக்கிறது. சமூகப் பாதுகாப்பு வளையம் என்பதற்குப் பதிலாக சமூக அச்சுறுத்தல் வளையம்தான் உருவாக்கப்பட்டிக்கிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். துறை வாரியாக, தொழில் வாரியாக. உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று பாரதி பாடினார். நம்முடைய மாநிலத்தில் உழவு நலிவடைந்திருக்கிறது. தொழில்கள் நாளுக்கு நாள் நலிவடைந்து வருகின்றன.

இதிலே ஒரு விஷயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அரசு போக்குவரத்து நிறுவனம் சம்பந்தமாக, அதனுடைய நிலைமை

சீரடைந்திருப்பது மாதிரியான ஒரு தோற்றம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மன்னார்குடி பகுதியில் ஒரு மாணவி பேருந்திலேயே விழுந்து மரணமடைந்ததைச் சொன்னார்கள். அமைச்சர் பதில் தந்திருக்கிறார். நான் சுட்டிக்காட்ட விரும்புவது, இப்போது புதிதாகச் சில உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன; Stage invoice, அதாவது, பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து அரசரடிக்குள்ளாகவே invoice-ஐ close பண்ணவேண்டுமென்று சொல்கிறார்கள். இது மிகுந்த அளவுக்குப் பணியில் பாதிப்பை உருவாக்குகிறது. அதுமாத்திரமல்ல; அரசுப் பேருந்துக்கும், தனியார் பேருந்துக்கும் இடையிலான போட்டியாக மாறி, அரசுப் பேருந்து நடத்துநர் invoice-ஐ close பண்ணுவதற்கு ரொம்பத் தாமதம் ஆகிறது. Mini bus முந்திப் போகிறது. இது அரசுப் பேருந்தினுடைய வருவாயை இழக்கச் செய்யக்கூடியதாக மாறும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, உலக வங்கி; அதுபற்றி அறிக்கையிலே இருக்கிறது. உலக வங்கி நம்மைக் கண்டு கொள்ளாமல் இருந்து, இப்போது ரொம்ப உறவு நெருக்கமாகிறது என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் சுட்டிக்காட்ட விரும்புவது, உலக வங்கியில் கடன் பெற வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை. அதனுடைய நிபந்தனை என்ன? கடுமையான நிபந்தனைகள் இருந்தால் அது தமிழகத்தினுடைய நிலைமையை மேலும் சீர்கேடு அடையச் செய்யும் என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மலேசியா, மாலத்தீவு விஷயம் எல்லாம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆளுங்கட்சியும் குரல் கொடுத்தது; எதிர்க்கட்சிகளும் குரல் கொடுத்தன. நான் கூற விரும்புவது, அங்கே போய்ப் பிழைக்கிற சூழல் ஏன் உருவானது என்பதைத்தான் அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே என்ன வேலைவாய்ப்பு? கோடிக்கணக்கான ரூபாய் என்று எழுத்தில் சொல்கிறோம். எத்தனை இலட்சக்கணக்கானவர்களுக்கு வேலை கிடைக்கிறது என்பதைத்தான் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே உள்ள இளைஞர்கள் வாழ வழியில்லாமல் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறதே, இதைத் தவிர்ப்பதற்கு, சுய வேலைவாய்ப்பு உருவாக்கப்படுவதற்கு ஆளுநர் உரையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

தரையில் வாழ வழியில்லை, தண்ணீரில் வாழ விரும்புகிறோம். அங்கே தண்ணீரிலே போய், கடலிலே போய் மீன் பிடிக்கப் போகிறார்கள்.





மீன் பிடிக்கச் செல்கிறவர்களும் அங்கே போய் மீன் பிடிப்பதற்குள்ளாக இலங்கைக் கடற்படை பிடிக்கிறது, எல்லாம் அறிக்கையிலே இருக்கிறது. குமரி மாவட்டத்திலே மணக்குடியைச் சேர்ந்த மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் சென்று, காணாமல் போயிருக்கிறார்கள். இன்று வரையிலும் அவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்கிற கவலை அந்த மாவட்ட மக்களுக்கு இருக்கிறது.

***மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டிய அந்த மணக்குடி கிராமத்தில் காணாமல் போன மீனவர்களை coast guard மூலமாக, அதாவது helicopter மூலமாகவும், படகு மூலமாகவும் ஆங்காங்கு எங்கு இருக்கிறார்கள் என்று தேடியும் கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலையிலே, அந்தப் பணி நடந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. என். நன்மாறன்:** விரைவில் கண்டுபிடிக்கக்கூடிய சூழலை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடலூரில் ஒரு சம்பவம். இராணுவத்திற்கு ஆள் எடுக்கிறோம் என்று அறிவித்து, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கூடி அதிலே கடுமையான தாக்குதல் நடைபெற்றதைப் பத்திரிகையிலே பார்த்தோம். தொலைக்காட்சியிலும் பார்த்தோம். ஆக, இன்னமும் இளைஞர்கள் மத்தியில் புதிய வேலைவாய்ப்பு இல்லாத ஒரு சூழலில் தமிழகம் தள்ளப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*11*-வது நிதிக் குழு பற்றி அறிக்கையிலே இருக்கிறது. அது தமிழகத்திற்கு அநீதி இழைத்தது. *12*-வது நிதிக் குழு அவ்வாறு இருக்காது என்று நம்புகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அது உறுதி செய்யப்பட வேண்டும். நிதிக் குழுவினுடைய அறிக்கைகள் சட்டமன்றத்திற்கு முன்னால் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதைத் தெரிவிக்கிறேன். மாநிலத்திற்கு *50* சதமானம் நிதி கோருகிறோம் என்று அறிக்கையில் உள்ளது. மாநிலத்திற்குக் கேட்கிறோம். இந்த மாநிலத்திலிருந்து உள்ளாட்சிகளுக்கு வழங்குகிற தொகை என்பது ரொம்ப பாரபட்சமாக இருக்கிறது. உள்ளாட்சிகள் எல்லாமே தள்ளாடிக் கொண்டிருக்கிற ஒரு கொடிய நிலைமையில் இருக்கின்றன. உதாரணமாக, மதுரை மாநகராட்சி. வைகை வடகரை குடிநீர்த் திட்டம் என்ற ஒரு திட்டம். அது நிறைவேற்றப்பட்டால்தான் ஏற்கெனவே இருக்கிற டேங்குகளில் தண்ணீர் ஏற்ற முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இன்னும் அந்தக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. மாநகராட்சிக்கு உரிய நிதி வழங்காத நிலைமை இருக்கிறது. மாநகராட்சிக்கு மாத்திரமல்ல, உள்ளாட்சிகளுக்கே; பல உள்ளாட்சிகள் இத்தகைய நிலைமைகளில்தான் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

சட்டம்—ஒழுங்கு இதிலே இருக்கிறது. தமிழகத்தில் சட்டம் இருக்கிறது. ஆனால் அது ஒழுங்காக இருக்கிறதா என்பதுதான் ஒரு கேள்வியாக மாறியிருக்கிறது. Encounter; வரிசையாக ஒவ்வொரு செய்தியையும் பார்த்தோம். கடைசியாக வெங்கடேச பண்ணையார் விஷயம். அதிலே மறு விசாரணை நடத்தக்கூடிய நிலைமைக்குச் சென்றிருக்கிறது என்றால், encounter என்பதிலே ஒரு நியாயமற்ற சூழல் இருக்கிறது என்பதுதான் அதிலே வெளிப்படுகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திருவாரூர் மாவட்டத்திலே விட்டுக்கட்டி. அங்கே ஏற்பட்ட பிரச்சினையிலே இளைஞர்கள் மீது கடுமையான தாக்குதல்; தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் மீது. அது சம்பந்தமாக தேசிய மனித உரிமை ஆணையமே தலையிட வேண்டிய நிலைமை என்பது ஏற்பட்டிருக்கிறது. எனவே, சட்டம்—ஒழுங்கு என்பதும் முறையாகப் பராமரிக்கப்பட வேண்டிய நிலைமையில் தமிழகம் இருக்கிறது. *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் இப்போது ஞாபகப்படுத்துகிறார்.

*பிற்பகல் 1–15*

**திரு. சி. சிவசாமி:** மதுரையில் லீலாவதி கொலை தி.மு.க. ஆட்சியில்தானே நடந்தது?

**திரு. என். நன்மாறன்:** சரி, சரி. *(குறுக்கீடு)* நான் பின்னாலே சொல்கிறேன். இல்லை, இல்லை, வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் உறுப்பினரா, அமைச்சரா என்பதை நான் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், அமைச்சர்கள் விளக்கம் தருகிறார்கள். இவர் அமைச்சராக ஆகிற ஆசையிலே ஏதாவது செய்கிறாரா என்று எனக்குத் தெரியவில்லை. இதுசம்பந்தமாக, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் எழுந்து விளக்கம் தருவது நியாயம். அதுதான் மரபு. இது என்னமோ இன்றைக்குத் திடீர் என்று ஒன்று ஏற்படுகிறது. அது பொருத்தமல்ல. அரசு தலைமைக் கொறடா அவர்கள்



*(குறுக்கீடுகள்)* I am not yielding. அண்ணே, நீங்கள் புதிதாக மந்திரி ஆவீர்கள் *(குறுக்கீடு)* அண்ணே, உட்காருங்கள். *(சிரிப்பு)* அதேபோல, சட்டம்—ஒழுங்கு. *(குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நன்மாறனுக்கு அந்தச் சந்தேகம் வேண்டாம். அடுத்த அமாவாசைக்கு அவர்கள் மந்திரி.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம்—ஒழுங்குப் பிரச்சினையில்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் யார் பேச எழுந்தாலும், அனுமதி பெற்றுப் பேசுவது நல்லது.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்—ஒழுங்கு என்பதிலே எல்லோருக்கும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எம்.எல்.ஏ.க்கள் என்ற முறையில் மக்கள் முறையிடுகிறார்கள். கடந்த தீபாவளி நேரம். தீபாவளி நேரத்தில் நம்முடைய மக்கள் வாழ்க்கையை இழந்து, வேலையை இழந்து லாட்டரிச் சீட்டு விற்றார்கள். முடியவில்லை. பல்வேறு தொழில் பார்க்கிறார்கள். தாக்குதலுக்கு உள்ளாகி, சாலையோரத்தில் ஏதோ துணிமணி விற்றுப் பிழைக்கலாம் என்று நிற்கிறார்கள். தீபாவளி நேரத்திலே எல்லோருமே ரோடுகளில் விற்பனை செய்வது இயற்கை. மதுரையில் காவல் துறை ஆணையாளர் மூலம் கடுமையான தாக்குதல், இதுவரைக்கும் இல்லாத தாக்குதல்.

இப்போது உழைப்பாளி மக்கள் வரிசையாகத் தாக்கப்பட்டு, குறிப்பாக, அரசு ஊழியர்கள், ஆசிரியர் விஷயம். அதிலே இவ்வளவு ஆயிரக்கணக்கானவர்கள், இந்தியாவிலேயே எங்கேயும் dismiss செய்யப்படவில்லை. அதிலும் அகில இந்திய அளவில் தமிழகம் முன்னிலையில் இருக்கிறது என்பதை நாம் பார்க்க முடியும். இந்தியாவே பிரம்மிக்கும். கடைசியாக இன்னமும் 999 பேர் வெளியில் நிற்கிறார்கள். பதவியிறக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அது முடிந்து, போக்குவரத்துத் தொழிலாளர்கள்.

வரிசையாக ஒவ்வொன்றாகத் தாக்கப்படுகின்றபோது, சுமைப் பணி ஊழியர்கள்—load man வேலை பார்க்கிறவர்கள்; தீபாவளி நேரத்தில் கடைகளில் ஏதாவது தருவதுண்டு. நோட்டை எடுத்துக் கொண்டு போனால், 'போய்யா, அரசு ஊழியருக்கே ஒன்றுமில்லை, போக்குவரத்து ஊழியருக்கு இல்லை, நீ என்ன' என்று வருகிறது. இப்போது அங்கே

தொட்டு, இங்கே தொட்டு, எல்லாப் பக்கமுமே கடுமையான தாக்குதல் என்பது உழைப்பாளி மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. மூடிய ஆலைகள் மூடப்பட்டே இருக்கின்றன. இன்னும் திறக்கப்படவில்லை. அதுகுறித்து இந்த அறிக்கையில் எதுவும் சொல்லப்படவில்லை. புதிய தொழிற்சாலைகள் சம்பந்தமாகவும் இந்த அறிக்கையில் எதுவும் இல்லை.

கைத்தறி. கைத்தறி என்பது ஓய்ந்து, கடுமையான நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறது. கைத்தறி, விசைத்தறி எல்லாம், அதிலும் பனியன் தொழில், Engineering Industry, இதுபோல ஒவ்வொன்றையும் சொல்லலாம். கைத்தறித் தொழில் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், சிட்டா நூல் மிகவும் மலிவாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். இதற்கு மத்திய அரசோடு பேசி, உரிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக, இந்த அவையிலே ஒன்றைச் சொன்னார்கள். தேர்தல் சம்பந்தமாகக்கூட ஆளுநர் உரையிலே இருக்கிறது. இங்கே சேரலாமா, அங்கே சேரலாமா என்றுகூட மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் கேள்வியை எழுப்பினார்கள். ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற முறை இதே அவையில் வருங்காலத்தில் ஆளும்கட்சி யாரோடு தேர்தல் உறவு கொள்ளும் என்பதைச் சொன்னார்கள். இப்போது இருக்கிற மத்திய அரசோடு சேரமாட்டோம் என்று தெளிவாகச் சொன்னார்கள். அதே நிலையில் இப்போது வரக்கூடிய தேர்தலிலும் ஆளும்கட்சி இருக்குமா என்பது போகப் போகத் தெரியும். பின்னால் பதில் சொல்லும்போதுகூட அவர்கள் தெளிவுபடுத்துவது உதவியாக இருக்கும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** அடுத்து ஆளுநர் உரை. அது தமிழில் இல்லை. தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எதிர்க்கட்சிகள் உள்ளே இருந்தால் தமிழில் சொல்வோம் என்பது பொருந்தாது. கடந்த 3 ஆம் தேதி பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நினைவு தினம். அவருக்குச் செய்கிற மரியாதையாக அது இருக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல ஆவின் பால். அதிலே பதிலித் தொழிலாளர்களாக இருந்தவர்கள் இன்னும் நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும். Urban Bank மதுரையில் கூட்டுறவு Bank. அந்த Bank மூடிய நிலையில் இருக்கிறது. Deposit பண்ணிய மக்களுக்குப் பணம் கிடைக்க வேண்டும்.



அதேபோல, பட்டா பிரச்சினை. ஏழை, எளிய மக்களின் நலனை முன்நிறுத்துகிறோம் என்று இருக்கிறது. பிற்பட்ட மக்களுக்குப் பட்டா என்பது வழங்கப்பட்டது. அது கடந்த காலங்களில் கொடுக்கப்படவேயில்லை. மதுரை காமராஜபுரம் பகுதியிலும்கூட one time scheme என்கிற முறையில் கலைஞர் அந்த ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்தார்கள். இன்றைக்கும் அது நிறைவேற்றப்படாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, பட்டா வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் உள்ள வக்ஃபு வாரியக் கல்லூரி, சிறுபான்மையினர் நடத்தக்கூடிய கல்லூரி. கடந்த காலங்களில் சிறப்பாக இருந்து வந்தது. இப்போது நிலைமை பொருத்தமாக இல்லை. சீர்கேடடைந்த ஒரு நிலைமை இருக்கிறது. வாரிய முடிவிற்கும், யதார்த்தத்திற்கும் பொருத்தமற்ற ஒரு நிலைமை இருக்கிறது. அதில் மீண்டும் விசாரணை நடத்தி, சரியான முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லிஸ் நகர் பகுதியில் குடியிருக்கிற மக்கள், முழுப்பணம் செலுத்தினாலும் இன்னும் பத்திரம் கிடைக்காமல் இருக்கிறது. அது கிடைக்க வேண்டும்.

*பிற்பகல் 1–20*

கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இன்னும் கொண்டு வந்து செயல்படுத்தப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அது கொண்டு வரப்பட வேண்டும். கடந்த வறட்சிக் காலத்திலே தூர் வாரப்பட்ட குளங்களில் வேலை செய்தவர்களுக்கு இன்னும் அரிசி கிடைக்கவில்லை. ஆகவே, அரிசி கிடைக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். *(மணியடிக்கப்பெற்றது)*

இதுபோன்ற கருத்துகளை நினைவுபடுத்தி, ஆளுநர் உரை உண்மைக்குத் திரை என்று மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி குறிப்பிட்டிருக்கிறது. அதோடு சேர்த்து, சமூகப் பாதுகாப்பு வளையம் இல்லை; சமூக அச்சுறுத்தல் வளையம் இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு, உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கம். ஆளுநர் உரையில் பல்வேறு செய்திகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதிலே குறிப்பாக, ஆளுநர் உரையில் இந்த அரசு பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, உலக வங்கி பெருமளவிலே பாராட்டியிருப்பதாகப் பல பக்கங்களிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. உலக வங்கி பாராட்டியிருக்கிறது என்று சொன்னாலே, உள்ளூர் மக்கள் தலையிலே இடி விழப் போகிறது என்றுதான் அர்த்தம். ஆகவே, உலக வங்கியின் பாராட்டுதல் என்பது உள்ளூர் மக்களுக்கு இடியாக மாறப் போகிற அபாயம் தோன்றியிருக்கிறது என்று நான் வேதனைப்படுகிறேன். காரணம், அவர்களிடத்திலே நாம் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயைப் பெற்று, அதற்காகச் செலுத்துகிற வட்டி, அதற்காகச் செலுத்துகிற அபராத வட்டி இருக்கிறதே, இப்போதே வாங்கியிருக்கிற கடன் சுமையைத் தீர்ப்பதற்கு இன்னும் மூன்று தலைமுறை வேண்டும் எங்களுக்கு. ஆனால், நீங்கள் போடப் போகிற இந்த உலக வங்கியினுடனான ஒப்பந்தத்தின் மூலமாக ஏற்படப் போகிற அந்தக் கடன் சுமை இருக்கிறதே, அது பல்லாயிரம் சுமைகளை இந்தப் பகுதி மக்களிடத்திலே ஏற்ற இருக்கிறது. ஆகவே, பாராட்டுகளோடு அது நின்று விடாமல், மக்களைப் பாதுகாப்பதற்குரிய திட்டமாகவும் நீங்கள் உலக வங்கியை அணுக வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இங்கே பல செய்திகள் சொல்லப்பட்டன. காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி இங்கே குறிப்பிட்டுப் பலர் பேசினார்கள். நான் பிரச்சினைகளுக்கு உள்ளே செல்ல விரும்பவில்லை. ஆனால் காவிரி நீர் கிடைக்காத காரணத்தினாலே காவிரி டெல்டா பாசன விவசாயம் மிகப் பெரிய கேள்விக்குறியாக ஆகி, இன்றைக்கு வீதியிலே அலைந்து கொள்ள வேண்டிய அவல நிலைக்கு விவசாயி ஆளாகி இருக்கிறான். ஆகவே, காவிரி நீர் இல்லையென்று சொன்னால், ஒன்றுபட்ட தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மிகப் பெரிய பாதிப்பு. இன்னும் அதை நம்பியிருக்கிற மாவட்டங்கள் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகின்றன. ஆனால், பேசுகிற போக்கிலேயே பல செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அநேகமாகக் காவிரி நீர் இனி உங்களுக்கு வராது என்று, போகிற போக்கிலே சொல்கிற செய்தியைக் கேட்கிறபோது, இதயமே வெடித்து விடுவதைப் போன்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது. காவிரி நீர் வராது என்று சொல்வதற்கு யாருக்கும் உரிமை இல்லை. அதைப் பற்றி நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். இதிலே அரசியல் கருத்து இல்லை. ஆனால் காவிரி நம்முடைய ஜீவாதாரப் பிரச்சினை. இரண்டாயிரம் ஆண்டு காலமாக





நாம் அனுபவித்து வருகிற உரிமை இது. ஆகவே, இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பெற்றிருக்கிற இந்த உரிமை நமக்கு வராது என்று சொல்வதற்கான ஒரு கருத்து உருவாவது என்பதே நாம் ஏற்றுக்கொள்ள முடியாத கருத்து. அந்தக் கருத்தை முறியடிப்பதற்குரிய முயற்சி இந்த அரசின் மூலமாக என்ன நடந்தது என்பதுதான் கேள்வி. பிரதமர் வருகிறார். முதலமைச்சர் பேச மறுக்கிறார். பின்னாலே எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறார். பின்னாலே, அதற்கு முன்னாலேயே நான் கேட்டு விட்டேன் என்று சொல்கிறார். ஆகவே, இப்படிச் சொல்வதன் மூலமாக எங்களுடைய பிரச்சினை தீர்ந்ததா என்று பார்த்தால், பிரச்சினை, கடலிலே கொட்டுவதற்கான சூழ்நிலைக்குத்தான் வந்திருக்கிறதே தவிர, காப்பாற்றுவதற்குரிய முயற்சி இல்லாமல் போய்விட்டதுதான் எங்களுக்கு இருக்கிற வருத்தம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மை நிலையைப் புரிந்துகொண்டும், தெரிந்து இருந்தும், தெரியாததுபோல், புரியாததுபோல், ஒரு நடிப்பைப்போல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது நல்லதல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், காவிரிப் பிரச்சினைக்கும், தமிழக அரசுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. உங்களுக்குத் தெரியும். தமிழக அரசு பேசியது. கர்நாடக மாநிலம் ஒத்துக்கொள்ளவில்லை. Tribunal award-ஐ அவர்கள் மதிக்கவில்லை. C.R.A. — Cauvery River Authority–யினுடைய ஆணையையும் அவர்கள் ஏற்கவில்லை. உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையையும் ஏற்கவில்லை. 19–வது பாராவிலே இது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அதை நீங்கள் படித்துக்கொள்ள வேண்டும். உங்களால் இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. காவிரியின் தண்ணீரைத் தராமல் தடுத்திருப்பதே கர்நாடகம்தான். 89.771 டி.எம்.சி. தண்ணீர் distress period-இல் தரவேண்டும். அதைக்கூட அவர்கள் தரவில்லை. ஆனால், அங்கு விவசாயம் செழிப்பாக இருக்கிறது. ஐந்து இலட்சம் ஏக்கர் மட்டுமே விவசாயம் செய்ய உரிமை பெற்றிருந்தவர்கள் இன்று 22 இலட்சம் ஏக்கர் வரைக்கும் தண்ணீரை ஆங்காங்கு திருப்பி விவசாயத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கு காங்கிரஸ் இருக்கிறது. கர்நாடக முதலமைச்சர், காங்கிரஸ் முதலமைச்சராக இருக்கிறார். தற்போது நீங்கள் தோழமை உறவு அவர்களோடு வைத்திருக்கிறீர்கள் சோனியா காந்தி அம்மாவிடம் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) கர்நாடக முதலமைச்சரிடம் சொல்லி, தற்போது தமிழகத்தில் தத்தளிக்கின்ற விவசாயிகளுக்குத் தண்ணீர் தருவதற்கு உங்களுடைய முயற்சியை எடுங்கள். அது நாட்டுக்குப் பலன் உள்ளதாக இருக்கும்.

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 5

அப்படி ஒத்துக்கொள்ளவில்லை என்றால், இந்தத் தேர்தலில் காங்கிரசோடு நாங்கள் தொகுதி உடன்பாடு கொள்ளமாட்டோம், எதிர்ப்போம் என்று சொல்லுங்கள்(மேசையைத் தட்டும் ஒலி) அப்போது அது பொறுப்பான செயலாக இருக்கும், (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1–25

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு நிதியமைச்சருக்கு சிவபுண்ணியம் சொல்லட்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள், கர்நாடக முதலமைச்சரோடு பேசினார். நான் சென்று பேசினேன். எல்லோரும் பேசினோம். உச்ச நீதிமன்றத்தைத் துச்சமென மதிக்கிறார். ஒரு தனி நாடுபோல் கர்நாடக மாநிலம் இப்போது செயல்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தட்டிக் கேட்காமல், உங்கள் இயக்கத்தினுடைய சோனியா காந்தி தவறு செய்கிறார். (குறுக்கீடு) அதைச் செய்யுங்கள், தமிழ்நாடு உங்களுக்கு வேண்டுமா, அல்லது கர்நாடகம் வேண்டுமா என்று நீங்கள், காங்கிரஸ்காரர்கள் முடிவு செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) கர்நாடகத்திற்கு நீங்கள் ஏன் வக்காலத்து வாங்குகிறீர்கள்? இன்று தமிழகத்து விவசாயிகள் எல்லாம் இந்த அவல நிலைக்குச் சென்றிருக்கிறார்கள் என்றால், கர்நாடக காங்கிரஸ் கட்சி காரணம், கர்நாடக முதலமைச்சர் காரணம், தட்டிக் கேட்காமல் இருக்கிற சோனியா காந்தி காரணம், ஒத்துப் போகின்ற நீங்களும் ஒரு காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராவது ஒருவர் எழுந்திருங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சிவபுண்ணியம் பதில் சொல்வார்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிதியமைச்சரிடமிருந்து ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன்.



2004 பிப்ரவரி 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் பதில் சொல்வார். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், சிவபுண்ணியம் பதில் சொல்வார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஆணையம் கூட்டிய நேரம் முதலமைச்சர் சார்பிலே நான் கலந்து கொண்டேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** ஏன் முதலமைச்சர் கலந்து கொள்ளவில்லை?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இது என்ன கேள்வி? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராவது ஒருவர் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், கர்நாடகாவிலே—இப்போது ஏதோ கூட்டணி வைத்திருக்கிறீர்கள், தண்ணீர் விடுகிறீர்களா, இல்லையா, இல்லாவிட்டால் கூட்டணியிலிருந்து வெளியேறுவோம் என்று சொல்லுங்கள் என்று சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் தி.மு.க.–வைச் சொல்லவில்லை. காங்கிரசைத்தான் சொன்னார்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, அவர் அவருடைய உணர்வைச் சொன்னார். அவர் தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் கிடைக்க வேண்டும் என்ற உணர்வில் சொன்னார். அதைத்தான்நானும் சொல்கிறேன். நேற்றைய வரையில் powerless Prime Minister–ஆக இருந்தவர் power உள்ள Prime Minister-ஆக ஆகியிருக்கிறார். 'மரியாதையாக கர்நாடகத்திலிருந்து தண்ணீர் விடச் சொல்லி, authority - யிலே தலைவராக இருக்கிற நீங்கள் செய்யுங்கள்; இல்லாவிட்டால் உங்களோடு நாங்கள் கூட்டு வர முடியாது' என்று கர்ஜித்து இருக்கவேண்டும். நேற்றைக்குத்தான் powerless. இன்றைக்கு எப்படி? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடு) சிவபுண்ணியம் பதில் சொல்லட்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இல்லை. ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடு) இல்லை. Point of order கேட்டதற்கு நான் பதில் சொல்லிவிடுகிறேன்.

[2004 பிப்ரவரி 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், சிவபுண்ணியம் பதில் சொல்லட்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** கேட்டதற்கு நான் பதில் சொல்லி விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமிழகத்து காங்கிரஸ்காரர்களை மிகவும் காட்டமாகத் தாக்கி, ஏன் நீங்கள் இப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். நான் ஒன்றே ஒன்று கேட்கிறேன். உண்மையிலேயே உங்களுக்கு, ஆளுகிற கட்சிக்கு, முதலமைச்சருக்கு, தமிழ்நாட்டு விவசாயிகள் மீது அக்கறை இருக்குமேயானால், இப்போது நீங்கள் கூட்டு வைத்திருக்கிற நம்முடைய வாஜ்பாய் அவர்கள் ஆணையத்தினுடைய தலைவராக இருக்கிறாரே, ஆணையத்திலே ஏன் உடடினயாக அவரை உத்தரவு போடச் சொல்லவில்லை? ஏன்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் அவருக்குப் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) பதில் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆணையத்தில் நாங்கள் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டோம். ஆணையமும் தண்ணீர் தர (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு) சொல்கிறேன், சொல்கிறேன், இருங்கள். மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் கண்ணுக்கு எறும்பு போவது தெளிவாகத் தெரிகிறது. யானை போவது அவர் கண்ணுக்குத் தெரியவில்லை. அது அவருடைய கண்ணின் கோளாறு. ஆணையத்தில் கலந்து கொண்டோம். ஆணையம் ஆணையிட்டது. அந்த ஆணையம் இட்ட ஆணையையே கர்நாடக அரசு ஏற்றுக்கொள்ளவில்லையே? செயல்படுத்தவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் (குறுக்கீடு) சிவபுண்ணியம், பேசுங்கள்.

**திரு. வை.சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மணி 1–28 ஆகிவிட்டது. என் நேரம் இப்படிப் போய்க் கொண்டிருக்கிறது. என்னை அனுமதிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், நாளைக்கு ஏழு நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். நாளைக்கு எடுத்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) முடித்து விடுவோம். (குறுக்கீடு) நாளைக்கு ஏழு நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்.



2004 பிப்ரவரி 5]

**திரு. ஜி. பழனிசாமி:** நாளைக்கு எல்லோரும் பேசி முடித்த பிறகு கடைசியாகக் கொடுக்காதீர்கள். நாளைக்காவது முதலிலேயே அவருக்குப் பேச வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. (குறுக்கீடு) நாளைக்கு முதலிலேயே பேசுங்கள்.

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 6–2–2004 ஆம் நாளன்று வினாக்கள்–விடைகள் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம், 'வினாக்கள்–விடைகள் ' என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐத் தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்".

(குறுக்கீடு) நாம் ஏற்கெனவே எடுத்த முடிவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை.
தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

6–2–2004 அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6–2–2004) வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. சேலம், சேலம் மாவட்ட மாவுப்பொருள் மற்றும் ஜவ்வரிசி தயாரிப்போர் பணி-தொழிற் கூட்டுறவுச் சங்கம் (ஜவ்வரிசி) மூலம் செய்யப்படுகிற விற்பனை மீது 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் யாதொரு வணிகர் செலுத்த வேண்டிய வரியைப் பொறுத்த வரையில், வரி வீதத்தில் இரண்டு சதவீதம் குறைத்தது குறித்து வணிக வரித் துறையின் 12–6–2003 ஆம் நாளிட்ட 59 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையைச் சேர்ந்த C–பகுதியின் 9–ஆம் இனத்தைச் சேர்ந்த (V) துணை இனத்தில் குறிப்பிடப்பட்டவாறு, குன்னூரில் உள்ள "டீசெர்வ்" (Teaserve) என்ற புதிய மையத்தில் விற்பனை செய்யப்படும் தேயிலைக்குச் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்த வரையில், வரி வீதத்தை நான்கு சதவீதமாகக் குறைத்து அறிவிப்பது குறித்து வணிக வரித் துறையின் 29–5–2003 ஆம் நாளிட்ட 48 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

3. "எத்தனால்" (Ethanol), அதாவது, அன்ஹைட்ரஸ் எத்தனால் ஆல்கஹால் (Anhydrous Ethyl Alcohol) மாநிலத்தில் பெட்ரோலுடன் கலப்பதற்காகவும், எத்தனால் கலந்த பெட்ரோலாக (ethanol doped petrol) விற்பனை செய்யப்படுவதற்காகவும், குறிப்பிட்ட சில எண்ணெய் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படும்போது அவ்விற்பனையின்மீது வணிகர் ஒருவர் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், செலுத்தத்தக்க வரி வீதத்தை எட்டு சதவீதமாகக் குறைப்பது குறித்தும், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தைச் சேர்ந்த பதினோராவது (Eleventh) விவர அட்டவணையில் திருத்தம் செய்தது குறித்தும், வணிக வரித் துறையில் 1–4–2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின், சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II (1) /வ.வ/19 (e–4)/2002 ஆம் எண் அறிவிக்கை மற்றும் 27–3–2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில்





வெளியிடப்பட்ட II (1)/வ.வ/19(b–8)/2002 ஆம் எண் அறிவிக்கை ஆகியவற்றில் மாற்றங்கள் செய்தது குறித்தும் வணிக வரித் துறையின் 1–10–2003 ஆம் நாளிட்ட 142 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*3. புதிய உறுதியுடனும், வரவிருக்கின்ற வளமையான வருங்காலம் பற்றிய நம்பிக்கையுடனும் தமிழ்நாடு புத்தாண்டை வரவேற்றது. வளர்ச்சியின்மையையும், முடங்கிவிட்ட நிதிநிலையையும் கொண்ட கடந்த கால நிலைமைகளை மாநிலம் புறத்தே ஒதுக்கித் தள்ளிவிட்டது. 2003 ஆம் ஆண்டு வியக்கத்தகு திருப்புமுனையாக அமைந்துள்ளது. சீர்திருத்த முன்னுரிமைகளை வளர்ச்சிக் கோட்பாடுகளுடன் வெற்றிகரமாக ஒருங்கிணைத்து, அவற்றிற்கும் மேலாக வறியோர்களின் நலன்களை முன்னிறுத்துவதன் மூலம் மாநிலங்களிடையே முதலிடத்தைப் பெறவேண்டும் என்ற தனது நெடுநாளைய இலக்கை நோக்கி விரைந்து செயல்படும் மாநிலமாகத் தமிழ்நாடு உருவாகி உள்ளது. குறுகிய காலத்தில் இந்த வியக்கத்தக்க, ஈடு இணையற்ற சாதனையைப் படைத்த பெருமை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களையே சாரும்.*

*4. 2001 ஆம் ஆண்டு மே திங்களில் இந்த அரசு பதவியேற்றபோது நிலவிய மிகவும் இடர்ப்பாடான நிதி நிலைமையையும், அதனால், 2001–2002–ல் திட்ட ஒதுக்கீட்டை ரூபாய் 5,200 கோடிக்குக் குறைக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது என்பதையும் இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுகூரலாம். அன்று நிலவிய நிதி இடர்ப்பாட்டின்*

தன்மை மற்றும் கடுமையின் பின்னணியில் வருங்காலமே இருண்டதாகத் தோற்றமளித்தது. முதலமைச்சர் அவர்களால் உறுதிப்பாட்டுடனும் மனோதிடத்துடனும் மேற்கொள்ளப்பட்ட ஒரு துணிகரமான பொருளாதாரச் சீரமைப்புத். திட்டம் 2003–2004 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டை ரூபாய் 7,000 கோடிக்கு உயர்த்தவும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் பாராட்டுக்குரிய வகையில் ரூபாய் 40,000 கோடி ஒதுக்கீட்டுடன் வகுக்கப்படவும் உதவியுள்ளது. நிதி நெருக்கடி இருந்தபோதிலும், ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையமொன்று வகுக்கப்பட்டு, வலுப்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு பெருமளவில் சேவைப் பணிகளை நல்கும் தமிழ்நாடு மின்சார வாரியம், அரசு போக்குவரத்து நிறுவனங்கள் போன்றவை சீரான நிதி நிலைமைக்கு மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளன. ரூபாய் 4,000 கோடி அளவிற்குத் தொகை கொடுக்காமல் முந்தைய அரசு விட்டுச்சென்ற பெருஞ்சிக்கலான நிலைமை திறமையாக சமாளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் வியக்கத்தக்க இந்தத் திருப்பம் ஒரு பெரும் அற்புதம் என்றே கூறலாம்.

5. முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அரசின் பொருளாதாரச் சீரமைப்பு முன்னுரிமைகளைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இதில் நிதிநிலையைத் திருத்தி நிலைப்படுத்துவதற்கான நிதிச் சீர்திருத்தங்கள், முதலீட்டுச் சூழ்நிலைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், நல்ல நிருவாகம் வாயிலாக சேவைப் பணிகளை மேம்படுத்துதல், வறுமையை ஒட்டுமொத்தமாகக் குறைப்பதற்கான திட்டங்கள் ஆகியவை இதில் அடங்கும். இம்மாநில அரசு, நிதி நிலைமைச் சீரழிவு அபாய நிலையை வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தி, அதே நேரத்தில் திட்டமிட்ட மேம்பாட்டையும் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில், இந்தச் சிக்கலான சீர்திருத்த நடைமுறை, ஏழை எளிய மக்களின் நலனை முதன்மையாக மனதில் கொண்டு மனித நேயத்தோடு மேற்கொள்ளப்பட்டது.

6. தமிழ்நாட்டிற்கு நிதியுதவி செய்வதிலிருந்து கடந்த காலத்தில் ஒதுங்கிவிட்ட உலக வங்கி, தற்போது, மாநில அரசுக்கு, அதன் பொருளாதாரச் சீர்திருத்தச் செயல் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உதவுவதில் மீண்டும் விருப்பம் காட்டி வருகிறது. இச்செயல் திட்டத்திற்கான உலக வங்கியின் நிதி உதவி கணிசமான கால அளவிற்கு தொடர்ந்து கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிதியுதவி குறிப்பான திட்டங்களுக்கான நிதி உதவிக்கும் மேலாக கூடுதலாகக் கிடைக்கும். இந்த அரசு முதன்மைத் துறையில் மேற்கொண்டுள்ள புதிய



முயற்சிகளையும், முதலீட்டுச் சூழ்நிலையை மேம்படுத்துவதற்காக, 2003 செப்டம்பரில் புதிய தொழில் கொள்கைகளில் அறிவித்துள்ள இரண்டாம் தலைமுறைச் சீர்திருத்தங்களையும் உலக வங்கி வெகுவாகப் பாராட்டியுள்ளது. முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையில் உருவான திட்டமாகிய ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையத்தை உருவாக்குவதில் தமிழ்நாடே முதன்மையாகத் திகழ்கின்றது என்பதை உலக வங்கி ஏற்றுக்கொண்டுள்ளது.

7. பெரும் நிதி இடர்ப்பாடுகளிடையே, பாதகமான பருவநிலை மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து நிலவி, 2002–2003 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களையும் பாதிக்கும் வகையில் எப்போதுமில்லாத அளவிற்கு உச்சகட்டத்தை எட்டிய வறட்சி நிலையை அரசு எதிர்த்துப் போராட வேண்டியதாயிற்று. இந்த அச்சமூட்டும் சவால் வேறு எந்த ஒரு அரசையும் மனம் தளரச் செய்திருக்கும். நிதிச் சீரமைப்பு நடைமுறையினை மேற்கொண்ட அதே வேளையில், ஒவ்வொரு நெருக்கடியையும் சந்திக்க ஆயத்தமுடன் உரிய நடவடிக்கை மேற்கொண்டு, ஏழை எளியவர்களைச் சென்றடையும் வகையில் நிவாரணமும், இடருதவியும் வழங்குவதை இவ்வரசு உறுதி செய்தது. இதற்கான பாராட்டுதல்கள் அனைத்தும் முதலமைச்சர் அவர்களையே சாரும்.

8. 2002 'ஆம் ஆண்டில் கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்குச் சேரவேண்டிய பங்கிற்கு தண்ணீர் வழங்க மறுத்ததைத் தொடர்ந்து, காவிரி வடிநில மாவட்ட நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள் போதுமான வேலையின்றி பாதிக்கப்பட்டபோது, இந்த அரசு ரூபாய் 210 மதிப்புடைய உணவுப் பொருட்கள் அடங்கிய பைகளை 10 இலட்சம் குடும்பங்களுக்குப் பரிசாக வழங்கியது. இத்திட்டம், ரூபாய் 21 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. பசிப்பிணி போக்குவதற்காக, ஊரகப் பகுதிகளில் 2003 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் ஆகஸ்டு வரையில் ஒவ்வொரு மாதமும் தேவையின் அடிப்படையில் குடும்பம் ஒன்றிற்கு இலவசமாக 30 கிலோ அரிசி வழங்கும் சிறப்புத் திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட்டது. 9.71 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் ரூபாய் 115.94 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. பண்ணை வருவாய் பாதிக்கப்பட்டபோது, ரூபாய் 146 கோடி செலவில், கூட்டுறவுத் துறையிலிருந்து பெற்ற கடன்களுக்கான வட்டி மற்றும் அபராத வட்டியினைத் தள்ளுபடி செய்வதற்கான பெருந்திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தியது. கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களுக்காக சிறு மற்றும் குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டித் தொகைகளைத்

தள்ளுபடிசெய்து, 2003 ஆம் ஆண்டு மே மாதம் ரூபாய் 20 கோடி செலவில் அரசு அறிவித்த திட்டம், விவசாயிகளுக்கு அவர்களது கடினமான சூழ்நிலையில், மிகப் பெரிய நிவாரணத்தை அளித்தது. பொருளாதாரச் சூழலில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக, கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டபோது, இந்த அரசு உடனடியாகச் செயல்பட்டு ரூபாய் 1.19 கோடி செலவில் 22,072 கைத்தறி நெசவாளர்களுக்கு மாதமொன்றுக்கு 20 கிலோ அரிசி இலவசமாக வழங்கியது. மோசமான நிதி நிலைமையை எதிர்கொண்ட இடர்ப்பாடான நேரங்களிலும், ஏழை எளியவர்களுக்கு நிவாரணமும், ஆதரவும் அளிப்பதில் இந்த அரசு உரிய நேரத்தில் தலையிட்டுச் செயல்பட்டுள்ளது என்பதற்கு இவை சான்றுகளாகும். இந்த அரசு கனிவுடன் ஆக்க நடவடிக்கைகளை எடுத்து மக்கள் நலனில் எப்போதும் அக்கறை காட்டுகிறது என்பதையும் இவை எடுத்துக்காட்டுகின்றன.

9. மக்களுக்கு உண்மையான பயன்களை அளிப்பதை நோக்கமாகக் கொண்ட சமூகச் சீர்திருத்தப் பணிகளை நிறைவேற்றுவதில் முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நிற்கின்றார்கள். லாட்டரிச் சீட்டுகளைத் தடைசெய்தது பெருவாரியாக வரவேற்கப்பட்டுள்ளது. வாழ்க்கையைச் சீரழிக்கும் கொடுமையிலிருந்து ஏழை எளியவர்களை மீட்கும் முக்கியமான நடவடிக்கை இதுவெனத் தற்போது உணரப்படுகிறது. பெரும் பரிசைப் பெறும் கானல் நீர் ஆசை உறுதிமொழிகளினால் கவரப்பட்டு, இதுவரை மொத்த வருமானத்தையும் லாட்டரிச் சீட்டுகள் வாங்குவதற்குச் செலவிட்டு ஏழ்மையுற்ற இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள், தங்களுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் கொண்டுவந்ததற்காக முதலமைச்சர் அவர்களுக்குத் தற்போது நன்றி கூறியவண்ணம் இருக்கின்றனர். கந்து வட்டிக்காரர்களால் உருவாக்கப்பட்ட பேரழிவு, பூதாகரமான நிலையினை அடைந்தது. அளவிற்கதிகமான வட்டி வீதங்களைக் கட்டுப்படுத்தவும், சட்டத்தை மீறுபவர்கள் மீது கடுமையான தண்டனைகளை வழங்கிடவும் அரசு தக்க சட்டத் திருத்தங்களைக் கொண்டுவந்தது. பாராட்டத்தக்க இச்சட்ட நடவடிக்கை, ஊரகக் குடும்பங்களுக்கு, அதிலும் குறிப்பாக வறட்சியின் காரணமாக வருமானம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இருந்த குடும்பங்களுக்குப் பெரும் நிவாரணம் அளித்தது. இந்நடவடிக்கைகள் அண்மையில் தீபாவளி மற்றும் பொங்கல் ஆகிய பண்டிகைகளை மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாட உதவின. வறட்சியினாலும், மோசமான பருவநிலைகளினாலும் தொடர்ந்து மூன்று வருடங்களாகப் பாதிக்கப்பட்ட போதிலும், தமிழ்நாடு பெரும்பாலான ஏனைய மாநிலங்களைப்



போலல்லாது, இந்த நெருக்கடியை வெற்றிகரமாகச் சமாளித்து தேவையேற்பட்ட ஒவ்வொரு சமயத்திலும் நிவாரணமும், தேவையான உதவியும் நல்கியுள்ளது.

10. முதலமைச்சர் அவர்களின் தக்க நேரத்திலான நேரடித் தலையீட்டினால், வெளிநாட்டிலுள்ள இந்திய தூதரகங்கள், மலேசியா மற்றும் மாலத்தீவு சிறைகளில் அடைக்கப்பட்டு ஆதரவின்றி வாடிக்கொண்டிருந்த தமிழர்களுக்கு விழிப்புடன் சட்ட உதவி அளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. அதேபோல முதலமைச்சர் அவர்களின் நேரடித் தலையீட்டினால் ஸ்ரீலங்கா கடற்படையினால் பிடிக்கப்பட்ட 380 மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும், 47 இயந்திரப் படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

11. பன்னிரண்டாவது நிதிக் குழு தனது தமிழ்நாட்டு வருகையை அண்மையில் நிறைவு செய்துள்ளது. பொது நிதி அமைப்புகளை முற்றிலுமாகச் சீரமைத்து, மாநிலங்களுக்கு உரித்தான பங்குகளை அளிப்பதன் அவசியம்பற்றி முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். மத்திய வரித் தொகுப்பிலிருந்து மாநிலங்களின் பங்கை, தற்போதுள்ள அளவான 29.5 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்கு உயர்த்தி, மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்குக் கூடுதலான நிதிப் பகிர்வு மாற்றங்கள் செய்யுமாறு இவ்வரசு கேட்டுக்கொண்டுள்ளது. பதினோராவது நிதிக் குழு தமிழ்நாட்டிற்கு இழைத்துள்ள அநீதியை, பன்னிரண்டாவது நிதிக் குழு முற்றிலுமாக மாற்ற வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். சிறந்த முறையில் செயல்படும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கான நிதியுதவி, அவற்றின் திறமையான செயல்பாட்டினையும் நல்லாட்சியையும் பாராட்டும் வகையில் அமையவேண்டும். கடன் குறைப்பு மற்றும் சீரமைப்பு, உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் இயற்கைச் சீற்ற நிவாரணச் செலவுக்கான நிதியுதவி அளித்தல், போன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்த விரிவான கருத்துருக்கள் இந்நிதி ஆணையத்திடம் கொடுக்கப்பட்டுள்ளன. அரசு நிருவாகத்தை நவீனமயமாக்குவதற்கும் தமிழ்நாட்டின் சிறப்புப் பிரச்சினைகள் குறித்து தீர்வு காண்பதற்கும், அரசு மேற்கொள்ளும் முயற்சிக்கு நிதியுதவி அளிக்குமாறு நிதியாணையத்திடம் கோரப்பட்டுள்ளது. பன்னிரண்டாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள் பெருமளவிற்கு இம்மாநில மக்களின் தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்வதாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

[2004 பிப்ரவரி 5

12. சட்டம், ஒழுங்கைச் சிறந்த முறையில் பராமரிப்பது வளர்ச்சிப் பணியின் அடித்தளம் என்ற வகையில் முதலமைச்சர் அவர்கள் இவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார்கள். தமிழ்நாட்டில் அவர்களது வலுவான தலைமையானது, துரோக சிந்தனை மற்றும் பிளவு நோக்குகொண்ட சக்திகளை ஒடுக்கிவைத்து, தமிழ்நாட்டில் முழுப் பாதுகாப்பு நிலவுவதை குடிமக்கள் உணரும்வண்ணம் உறுதிப்படுத்தியுள்ளது. வலுவான தலைமை, திறமையான காவல் பணிகள், சட்டம்-ஒழுங்கைச் சிறந்த முறையில் பராமரித்தல் போன்றவற்றிற்கும் அவற்றினால் அமையப்பெறும் முதலீடு செய்வதற்கு உகந்த சூழல் அமையப் பெறுவதற்கும் உள்ள தொடர்பு, தமிழ்நாட்டைப் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது.

13. முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திய ஒட்டுமொத்தச் செயல் திட்டம், தமிழ்நாட்டை, இடர்ப்பாடற்ற அமைதி நிலவும் பூங்காவாக மாற்றியுள்ளது. புதிய கட்டடங்கள், புதிய வாகனங்கள், நவீன தகவல் தொடர்புச் சாதனங்கள், வீட்டு வசதி மற்றும் காவலர் பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கிய காவல் துறை நிர்வாகக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது மற்றும் காவல் துறையை நவீனப்படுத்துவதன் மூலம் அதன் திறமையை மேம்படுத்துவது ஆகிய முதலமைச்சரின் செயல் திட்டங்கள், தமிழ்நாடு காவல் துறையை, இந்தியாவிலேயே மிகச் சிறந்த மாநில காவல் படையாக மாற்ற உதவி செய்துள்ளன. காவல் துறைப் பணியாளர்கள் நியமனத்தில் ஏற்பட்டிருந்த பெரும் பின்னடைவைப் போக்க, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, நடப்பாண்டில் 8,431 நிலை-II ஆண் காவலர்களும், 2,306 நிலை-II பெண் காவலர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றனர்.

14. பாலின நேர்மை நெறி பேணுதல் மற்றும் மகளிருக்கு எதிரான குற்றங்களைக் கட்டுப்படுத்துவது குறித்த முதலமைச்சர் அவர்களின் செயல்திட்டம் பின்பற்றப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் நடமாடும் ஆலோசனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நிதியாண்டு முடிவடைவதற்குள் மாநிலம் முழுமையிலும் 188 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும். அனைத்து மகளிர் அதிரடிப்படை மற்றும் அனைத்து மகளிர் காவல் படை எனத் தனியாக ஏற்படுத்தப்பட்டிருப்பது தமிழகக் காவல் துறையின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். 2004–2005 ஆம் ஆண்டில், ரூபாய் 30 கோடி மதிப்பீட்டுச் செலவில், மாநில காவல் துறை இயக்குநர் அலுவலகத்திற்குப் புதிய வளாகம் கட்டப்படும்.



2004 பிப்ரவரி 5]

15. காவலர்களுக்கு வசதிகளையும், பயன்களையும் அளிப்பதுடன் மட்டுமல்லாது, அவர்களுடைய குறைகளை நேரடியாகக் கேட்டறிந்து களைவதன்மூலம் காவல் படையின் ஒழுக்க நெறியை உச்ச நிலையில் இருக்கச் செய்ய முதலமைச்சர் அவர்கள் பெருமுயற்சி எடுத்துள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு காவல் துறை அதிகாரிகள் மற்றும் ஏனைய பதவித் தரங்களில் உள்ளவர்களுடன், ஐந்து முறை விரிவான கூட்டங்களை நடத்தியுள்ளார்கள். இது காவல் துறையின் ஒழுக்க நெறியை உயர்த்தியுள்ளதுடன், அத்துறையை எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளத் தயார்படுத்தியுள்ளது. காவல் துறைப் பணியாளர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான அமைப்பு முற்றிலும் திருத்தியமைக்கப்பட்டு, மிகவும் பொருள் பொதிந்ததாக மாற்றப்பட்டுள்ளது. மகளிர் காவலர்களின் குழந்தைகளுக்காக 6 காவல் துறை ஆணையர் அலுவலகங்களில் குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் மொத்தம் ரூபாய் 241.61 கோடி செலவில் காவலர்களுக்கு 6,000 வீடுகள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

16. புழலில், ரூபாய் 77.09 கோடி மதிப்பீட்டுச் செலவில், 3,000 கைதிகளை இடமமர்த்தக் கூடிய நவீனத் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய புதிய சிறை வளாகம் ஒன்றினைக் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. 2003–2004–ல் சிறை நிருவாகத்தை நவீனப்படுத்தும் திட்டத்திற்காக ரூபாய் 19.07 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் நாகர்கோவில் மற்றும் திண்டுக்கல்லில் உள்ள கிளைச் சிறைச்சாலைகள் மாவட்டச் சிறைச்சாலைகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன. சிறைச் சாலைகளுக்கும் நீதிமன்றங்களுக்குமிடையே தொலைதூரக்காட்சித் தொடர்பு (வீடியோ கான்பரன்சிங்) வசதி, ரூபாய் 8.61 கோடி செலவில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.

17. மதுரையில் ரூபாய் 55.59 கோடி செலவில், நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள உயர் நீதிமன்றக் கிளை 13.4.2004 ஆம் நாளன்று திறக்கப்படும். 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் தமிழ்நாட்டில் மொத்தம் 49 விரைவு விசாரணை நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதன் மூலம் கிட்டத்தட்ட 65,000 வழக்குகளுக்குத் தீர்வு கண்டு சாதனை படைக்க முடிந்தது. தேனி மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் கட்டவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

18. பருவ மழை பொய்த்ததைத் தொடர்ந்து, 2002 ஆம் ஆண்டில், வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டதனால் பெரும் நிவாரணத் திட்டம்

[2004 பிப்ரவரி 5

ஒன்றை அரசு நிறைவேற்றியது. இந்த நடவடிக்கை, பெருமளவில் பாராட்டினைப் பெறும் வகையில், வறுமை மற்றும் கையறு நிலையிலிருந்து மக்களைப் பாதுகாத்தது. 2003 ஆம் ஆண்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழை முந்தைய ஆண்டைக் காட்டிலும் சிறிதளவு கூடுதலாக இருந்தாலும் எதிர்பார்த்த அளவைவிடக் குறைவாகவே இருந்தது. மாநில இயற்கைச் சீற்ற நிவாரண நிதி ஏற்கெனவே முழுமையாகச் செலவிடப்பட்டுவிட்டது. தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 1,584 கோடி நிதியுதவி கோரியும், வேலைக்கு உணவு திட்டத்திற்காக 10.8 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி வழங்கக் கோரியும் மத்திய அரசிடம் வறட்சி குறித்த விரிவான அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பல்வேறு வறட்சி நிவாரண நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு கணிசமான நிதி உதவி அளிக்குமென்று அரசு நம்புகிறது. இதற்கிடையில், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசு ரூபாய் 50 கோடி அனுமதித்துள்ளது.

19. இம்மாநிலத்திற்கு, காவிரி நீரில் நியாயமாக உரிமையுள்ள பங்கினை கர்நாடக அரசு விடுவிக்கத் தவறிவிட்ட காரணத்தால், தமிழ்நாட்டில் வறட்சி நிலை மேலும் கடுமையாகியுள்ளது. காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படியான 193.59 டி.எம்.சி. அடி தண்ணீரின் அளவையோ அல்லது, காவிரி கண்காணிப்புக் குழுவின் பற்றாக்குறைக் காலப் பங்கீட்டு அளவின்படியான 89.771 டி.எம்.சி. அடி தண்ணீரின் அளவையோ ஒப்பிடுகையில், 2004 ஜனவரி வரை மேட்டூர் அணைக்கு வந்த தண்ணீரின் அளவு 60.45 டி.எம்.சி. அடி மட்டுமேயாகும். அரசியலமைப்பு நெறிப்படியும், சட்டப்படியும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் கூட்டு அமைப்புகளான, உச்ச நீதிமன்றம், காவிரி நதி நீர் அதிகார மன்றம், காவிரி நதிநீர் தாவா நடுவர் மன்றம் போன்ற அனைத்து அமைப்புகளின் உத்தரவுகளை கர்நாடக அரசு ஏற்றுச் செயல்பட திரும்பத் திரும்ப மறுப்பது ஆரோக்கியமான முன்னுதாரணம் அல்ல. காவிரி ஆற்றிலிருந்து தனது நியாயமான பங்கினைத் தமிழ்நாடு பெற இயலும் வகையில், தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளும் தன்னுடைய முயற்சியில் இந்த அரசு ஒருபோதும் தளராது.

20. 2002 ஆம் ஆண்டிலும், 2003 ஆம் ஆண்டிலும் பருவ மழை பொய்த்துப் போனதனால், சென்னை மாநகர் தொடர்ந்து கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையை சந்தித்து வருகிறது. இதனால் நகரின் நீர்த் தேக்கங்களில் உள்ள நீரின் அளவு கடந்த 55 ஆண்டு கால வரலாற்றில்



2004 பிப்ரவரி 5]

கண்டிராத, மிகக் குறைந்த அளவாக உள்ளது. இதற்கான நீண்ட காலத் தீர்வுகளைக் காண்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. ரூபாய் 730 கோடி செலவிலான சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்–I (புதிய வீராணம் திட்டம்) திட்டமிட்டவாறு 2004 ஆம் ஆண்டு மே மாதம் முடிக்கப்படும். சென்னையின் நீண்ட காலக் குடிநீர்ப் பற்றாக் குறைக்கான ஒரே நிரந்தரத் தீர்வாக கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டங்களைச் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 700 கோடி வழங்குமாறு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள். மத்திய அரசு ஏற்கெனவே ரூபாய் 50 கோடிக்குத் தொடக்க நிதியுதவியை அறிவித்துள்ளது. மத்தியக் குழு மதிப்பீடு செய்த பிறகு, மேற்கொண்டும் நிதியுதவி கிடைக்கும் என நாம் எதிர்பார்க்கிறோம். அனைத்துப் பகுதிகளுக்கும் தேவையான அளவு தண்ணீரை வழங்குவதற்கு ஏதுவாக, லாரிகளில் தண்ணீர் வழங்குவது அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆரணியாறு, கொசஸ்தலையாறு பகுதிகளில் நிலத்தடி நீரைப் பெற்று, குடிநீர் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்கொண்டுள்ள இந்தச் சவாலைச் சமாளிக்க, அரசு இயந்திரம் முழு வீச்சில் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

21. ஆற்றுப் படுகைகளைப் பாதுகாப்பதற்கும், வகைதொகையில்லாமல் மணல் வெட்டி எடுப்பதன் காரணமாக ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட பெரும் முயற்சியாக, பொதுப் பணித் துறையின்மூலம் மட்டுமே மணலை முறையாக வெட்டி எடுக்கும் சீரான திட்டத்தினை அரசு வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது. இந்நடவடிக்கைகள், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதையும் நமது நீர் ஆதாரங்கள் பாதுகாக்கப்படுவதையும் உறுதி செய்வதுடன் அரசுக்கு கூடுதல் வருவாயையும் ஈட்டித்தரும்.

22. மாநிலத்தின் வளர்ச்சிக்கான தொலைநோக்குப் பார்வையை உள்ளடக்கிய முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டம், தமிழ்நாட்டில் நேர்மை நெறியுடன் கூடியதும், முழுமையானதுமான வளர்ச்சியை உறுதி செய்ய விழைகிறது. நடப்பு நிதி ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூபாய் 7,000 கோடியை இந்த அரசு முழுமையாக எய்தும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 8,001 கோடி என்ற உயரளவிற்கு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் வேண்டி இந்த அரசு மத்தியத் திட்டக் குழுவை அணுகும். இது, 2003–2004 ஆம் ஆண்டு

வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் பெருமளவு உயர்த்தப்பட்டிருப்பதைக் காட்டுகிறது.

23. தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதை உள்ளடக்கிய புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய மாற்றுப் பயிர் திட்டம், பண்ணைத் துறையைச் சீரமைப்பதற்கான வழிகாட்டிக் கோட்பாடாக அமைந்துள்ளது. புதிய கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், தருமபுரி மாவட்டத்திலும், ரூபாய் 7.21 கோடி செலவில் இந்நோக்கத்தை மேம்படுத்தும் துல்லிய பண்ணையியல் திட்டம் துவக்கப்பட உள்ளது. மிகக் குறைந்த அளவு தண்ணீரைப் பயன்படுத்திக் கூடுதலாக ஆதாயம் பெறும் வகையில் துல்லிய பண்ணையியல் நடைமுறையின் மூலம், மரவள்ளிக் கிழங்கு போன்ற பயிர்களைப் பயிரிடுவதை இவ்வரசு ஊக்குவிக்கும்.

24. இந்த அரசு மேற்கொண்ட ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், தரிசு நிலங்களைப் பொருளாதார ரீதியில் உற்பத்திக்கு உகந்த நிலங்களாகச் சீரமைப்பதில் ஒரு முன்னோடி முயற்சியென பாராட்டப்பட்டு வருகிறது. தொடர்ந்து வறட்சி நிலவியபோதிலும், இத்திட்டத்தின்கீழ் எய்திய சாதனைகள், மிகவும் பாராட்டத்தக்கவையாக உள்ளன. 2003 டிசம்பர் வரையில் சுமார் 70 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு, சுமார் 1.19 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் உற்பத்திக்கு உகந்த நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன.

25. ஊரக வேளாண் அடிப்படைத் தொழிலை மேம்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையிலான மற்றொரு தொலைநோக்குத் திட்டமான புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் விரைவான முன்னேற்றத்தைக் கண்டு வருகிறது. 369 வளர்ச்சி வட்டாரங்களில் மொத்தம் 695 திட்டங்களைச் செயல்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 72 திட்டங்கள் ஏற்கெனவே உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

26. மாநிலத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சீரமைக்க மேற்கொள்ளப்பட்ட அரசின் துணிச்சலான முயற்சிகள், முக்கியத்துவம் வாய்ந்த இத்துறைக்குப் புதிய வலுவூட்டியுள்ளன. பால் உற்பத்தியாளர்களுக்குரிய நிலுவைத் தொகையான ரூபாய் 34.91 கோடி கொடுத்துத் தீர்க்கப்பட்டுள்ளது. இந்த அரசின் தலையீட்டின் காரணமாக, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளால் கரும்பு சாகுபடியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையான மொத்தம் ரூபாய் 123.74 கோடி, கொடுத்துத் தீர்க்கப்பட்டுள்ளது.



27. தமிழ்நாட்டிலுள்ள மீனவர்களின் நலன் இந்த அரசின் மிக உயர்ந்த முன்னுரிமையைப் பெற்றுள்ளது. இந்த அரசு 2001 மே திங்களிலிருந்து மீனவர்களுக்காக ரூபாய் 35.87 கோடி செலவில் 11,389 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. ரூபாய் 1.73 கோடி ஒதுக்கீட்டில், சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் முதல் முறையாக சுமார் 30,192 மீனவப் பெண்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர். மீனவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது, அவர்களின் பாதுகாப்பிற்காக ரூபாய் 1 கோடி செலவில் 10,000 உயிர் காப்புக் கவச உடைகளை அரசு வழங்கியுள்ளது.

28. முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில், மழை நீர் சேகரிப்பிற்கான சீரிய வழிகாட்டி இயக்கத்தைத் தொடங்கியுள்ளார்கள். தமிழ்நாட்டில் மட்டும்தான், ஒவ்வொரு மாநகர், நகர், கிராமம் ஆகியவற்றிலுள்ள கட்டிடங்கள் அனைத்திலும் மழைநீர் சேகரிப்புக் கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பருவ மழைக் காலத்திற்கு முன்னர் இத்திட்டத்தைக் கட்டாயம் செயல்படுத்த வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் உறுதிப்பாட்டினால் மட்டுமே இது சாத்தியமாயிற்று. ஊரகப் பகுதிகளில், மழை நீர் சேகரிப்பின்மூலம் நிலத்தடி நீரைப் பெருக்கும் திட்டம், தற்போது ஒரு பெருந் திட்டமாக உருவாகியுள்ளது. நீர்ப் பற்றாக்குறையுள்ள தமிழ்நாட்டில் அரிதான நீரைச் சேமித்துப் பாதுகாக்கும்வண்ணம் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

29. 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில், ஊரக வளர்ச்சிக்கான மத்திய அரசு பொறுப்பேற்கும் பல்வேறு திட்டங்களின்கீழ், நிதியுதவிகளைப் பயன்படுத்திக் கொண்டதில் தமிழ்நாடு முதல் நிலையில் உள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நமது அரசின் திறமையான செயல்பாட்டைக் கருதியே, 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில், மாநிலத்தின் ஆண்டு ஒதுக்கீட்டுத் தொகைக்கும் அதிகமாக, மத்திய அரசு கூடுதலான நிதியை வழங்கியுள்ளது.

30. முழுமையான துப்புரவு இயக்கத்தின்கீழ், ரூபாய் 327.32 கோடி செலவில் 28 மாவட்டங்களில், அனைத்துப் பகுதிகளும் பயன்பெறும் வகையில் அரசு செயல்பட்டுவருகிறது. மாநிலம் முழுவதிலுமுள்ள கிராம ஊராட்சிகள் அனைத்திலும், மொத்தம் ரூபாய் 268.13 கோடி செலவில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான 12,618 ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் இந்த ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்படும். மாநிலம் முழுவதிலும் கிராம நிருவாக அலுவலர்களுக்காக மொத்தம் ரூபாய்

77.89 கோடி செலவில் 12,506 அலுவலகங்கள் 2004 ஆம் ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்படும்.

31. பேருந்துகள் ஓட இயலாத சாலைகளை உள்ளடக்கிய, எந்த ஒரு அமைப்பினாலும் பராமரிக்கப்படாத மொத்தம் 5850 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை ரூபாய் 300 கோடி மதிப்பீட்டுச் செலவில் தரம் உயர்த்தவும், புதுப்பிக்கவும், சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகளைச் செயல்படுத்துவதற்குமான பெருந்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றுடன் கூட, மாநிலத்தின் ஊரகப் பகுதிகளிலுள்ள 6492 கி.மீ. நீளமுள்ள ஏனைய மாவட்டச் சாலைகளைக் குறிப்பாகப் பேருந்து வழித்தடச் சாலைகளை மேம்படுத்த, அரசு ரூபாய் 336.05 கோடி அனுமதித்துள்ளது. இந்தப் பெருந்திட்டமானது மக்களுக்கு நிரந்தரமான பயனை அளிப்பதுடன் பெருமளவில் மக்களின் பாராட்டையும் பெறும். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களை போக்குவரத்துக் கழகங்களாக ஒருங்கிணைக்கும் திட்டம் முடிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 2500 பழைய பேருந்துகளுக்குப் பதிலாக இரு கட்டங்களில் புதிய பேருந்துகள் விடப்படும். 6000 பேருந்துகளில் பெரும் பழுதுகளைச் சீர்செய்ய ரூபாய் 30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

32. அரசு 2003–2004 ஆம் ஆண்டில், ரூபாய் 572.16 கோடி ஒதுக்கீட்டில் ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இதன்மூலம், 2004 மார்ச் மாத இறுதிக்குள் கிட்டத்தட்ட 6000 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி கிடைக்கும். நடப்பு நிதியாண்டில் கிட்டத்தட்ட 10,000 கைப் பம்புகள் ரூபாய் 60 கோடி செலவில் சிறு விசைப் பம்புகளாக மாற்றப்பட்டு வருகின்றன. 3912 ஊரகக் குடியிருப்புகள், 21 பேரூராட்சிகள், 5 நகராட்சிகளை உள்ளடக்கிய 5 பெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மொத்தம் ரூபாய் 463.54 கோடி மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

33. அனைவருக்கும் தொடக்கக் கல்வி மற்றும் பள்ளிகளில் 100 சதவீதம் மாணவர் சேர்க்கை என்ற இலக்கு, தொய்வின்றி முழு வேகத்துடன் பின்பற்றப்பட்டு வருகிறது என்பதை அறிய மகிழ்ச்சியாக இருக்கிறது. 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இந்த அரசு 1,112 தொடக்கப் பள்ளிகளையும், 1,075 நடுநிலைப் பள்ளிகளையும், 260 உயர்நிலை மற்றும் 300 மேல்நிலைப் பள்ளிகளையும் தொடங்கியுள்ளது. அரசு கடந்த இரண்டாண்டுகளில் 10,022 ஆசிரியர்களுக்குப் பணி நியமனம்





வழங்கியுள்ளது. "அனைவருக்கும் கல்வி" திட்டத்தின் கீழ் ரூபாய் 401.84 கோடி ஒதுக்கீட்டுடன் மாநிலத்திலுள்ள கல்வி கட்டமைப்பு வசதிகளின் தரத்தை மேம்படுத்துவதில் முன்னெப்போதும் இருந்திராத அளவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. அரசின் இந்த முயற்சிகளினால் 2001–2002 ஆம் ஆண்டில் 16 சதவீதமாக இருந்த தொடக்கக் கல்வியைப் பாதியில் நிறுத்திவிடுகின்ற மாணவர் எண்ணிக்கை 2002–2003 ஆம் ஆண்டில் 12 சதவீதமாகக் குறைந்துள்ளது.

34. தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பாராட்டத்தக்க சாதனைகள் புரிந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளைக் கௌரவிப்பதற்கான ரொக்க ஊக்க உதவி வழங்கும் பெரும் திட்டம் ஒன்றை அரசு அறிமுகம் செய்துள்ளது. இதுவரை 123 விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு ரூபாய் 2.10 கோடி ரொக்க ஊக்கத் தொகை அளிக்கப்பட்டுள்ளது. விளையாட்டுத் திறனை அறிவதற்கான முயற்சியை விரிவுபடுத்துவதற்கும், பள்ளிகளில் விளையாட்டுப் பண்பை ஊக்குவிப்பதற்கும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், உடல் திறன் பல்முனை தேர்வு முறை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதுவரை, 50–க்கும் அதிகமான விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள், விளையாட்டு வீரர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு, இத்திட்டத்தின்கீழ் விளையாட்டுச் சாதனங்கள், தரமான சத்துணவு, உளவியல் மேம்பாடு, நிதியுதவி போன்ற வகைகளில் உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. வரும் நிதி ஆண்டில், கட்டமைப்பு வசதி மேம்பாடு, திறமையைக் கண்டறிதல், பயிற்சி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து விளையாட்டு மேம்பாட்டிற்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்படும். உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுகளில் சிறந்து விளங்குவதை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்த அரசு, தமிழ்நாட்டில் உடற்பயிற்சிக் கல்வியையும் விளையாட்டுகளையும் வளர்ப்பதற்கென்றே தனித்தொரு புதிய பல்கலைக்கழகம் ஒன்றை ஏற்படுத்தக் கருதியுள்ளது.

35. இயன்ற செலவிலும், எளிதிலும் பெறத்தக்க சுகாதார வசதிகளை மக்களுக்கு வழங்கியதில் இந்த அரசு எய்திய சாதனைகள் குறிப்பிடத்தக்கவையாகும். 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் ரூபாய் 39.75 கோடி மொத்தச் செலவில், 746 சுகாதாரத் துணை மையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூபாய் 46.50 கோடி மொத்தச் செலவில் 93 தொடக்கச் சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட

மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. இந்த அரசு 5 மருத்துவக் கல்லூரிகளில் 315 இடங்களை கூடுதலாக ஏற்படுத்தியுள்ளது. 5 மருத்துவக் கல்லூரிகளில், தேவையான கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான முதற்கட்ட கட்டுமானப் பணிகள் ரூபாய் 10.01 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேலூர், கன்னியாகுமரி, தேனி ஆகிய இடங்களில் 300 படுக்கை வசதி கொண்ட புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை அமைக்கும் பணியில் விரைவான முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது. கன்னியாகுமரியில் உள்ள மருத்துவக் கல்லூரிக்கு இந்திய மருத்துவ மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. சென்னை மாநகரம் இந்தியாவின் மருத்துவத் தலைமையிடமாகத் தற்போது உருவாகியுள்ளது. சென்னை, அரசு பொது மருத்துவமனையில் ரூபாய் 104.47 கோடி ஒதுக்கீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய வளாகம் விரைவில் திறக்கப்படும்.

36. மாநில அளவில் உற்பத்தித் துறையிலுள்ள நமது வலிமைகளை ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் இரண்டாம் தலைமுறை சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதற்கான செயல்திட்டம் ஆகியவற்றை இலக்காகக் கொண்டுள்ள, புதிய தொழிற் கொள்கை 2003 ஆம் ஆண்டு செப்டம்பரில் அறிவிக்கப்பட்டு அனைவரது பாராட்டுதலையும் பெற்றுள்ளது. உற்பத்தித் துறையில் 2003 அக்டோபர் இறுதியில், மொத்தம் ரூபாய் 46,795 கோடி என்ற உயரளவிற்குப் புதிய முதலீடுகளை தமிழ்நாடு பெற்றுள்ளது என்று இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் (CMIE) அறிவித்துள்ளது. கண்ணாடித் தயாரிப்பில் உலகளவில் பெரிய நிறுவனமான 'செயின்ட் கோபென்' நிறுவனம் தமிழ்நாட்டில் தனது உற்பத்தியை விரிவுபடுத்தவிருக்கிறது என்பதனை அறிய மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்வர். தூத்துக்குடி மாவட்டத்தில் 'டைட்டானியம் டை ஆக்சைடு' (Titanium di-oxide) திட்டத்தைத் தொடங்க மாநில அரசுக்கும் 'டாடா ஸ்டீல்' நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதைத் தொடர்ந்து அந்நிறுவனம் அப்பகுதியில் தொடக்க ஆய்வுப் பணியை துவக்கியுள்ளது. பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள சாதகமான திருப்பம் மற்றும் புதிய தொழிற் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள இரண்டாம் தலைமுறை சீர்திருத்தங்களைச் செயல்படுத்தியதில் உள்ள முன்னேற்றம் மற்றும் விருப்பத் தேர்வு அடிப்படையில் தொழில் தொடங்குவதற்குத் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக விளங்குவது போன்ற காரணங்களால் பெருமளவில் புதிய முதலீடுகள் வர வாய்ப்புகள் உள்ளன. இத்துறையில் பன்னாட்டு வல்லுநர்களின் கருத்தைப் பெற்று கட்டமைப்பு வசதி



மேம்பாட்டில் பொதுத் துறை மற்றும் தனியார் பங்கேற்புக் கொள்கை ஒன்று தற்போது உருவாக்கப்பட்டு வருகிறது.

37. தகவல் தொழில்நுட்பம், தமிழ்நாட்டின் சேவைப் பணித் துறையின் உந்துவிசையாக உள்ளது. தமிழ்நாட்டிலுள்ள தகவல்-தொழில்நுட்பத் துறை, 1.4 பில்லியன் டாலர் (ரூபாய் 7000 கோடி) அளவிற்கு ஏற்றுமதியைத் தாண்டிய நிலையிலும், 1000-க்கு மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதி நிறுவனங்கள் அமைந்த நிலையிலும், புதிய தொழில்களுக்கான வளமான வாய்ப்புகளைக் கொண்ட துறையாக உருவெடுத்துள்ளது. தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகள் (ITES), தங்களது தொழில்முறைத் தேவைகளை வெளிக் கொள்முதல் வாயிலாகப் பெறும் பணிகள் (BPO) ஆகியவற்றுக்கு அதிமுக்கியத்துவம் அளிக்கும் தொலைநோக்கிலான தகவல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்றை இந்த அரசு வகுத்துள்ளது. இரண்டாவது தகவல் தொழில்நுட்பப் பூங்காவை, 1.5 மில்லியன் சதுர அடி பரப்பிற்கு இடவசதியுடனும், உலகத் தரம் வாய்ந்த கட்டுமான தரத்திலும் நிறுவுவதற்காக டிட்கோ நிறுவனம், சிங்கப்பூரைச் சேர்ந்த திருவாளர்கள் ஆஸ்சென்டாஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டுள்ளது. அறிவுத் திறன் சார்ந்த தொழில் நகரியம் (Knowledge Industry Township) பற்றிய கருத்துரு இறுதியாக்கப்பட்டுள்ளது. இது சோளிங்கநல்லூரில் உருவாக்கப்படும். மத்திய கைலாசத்திலிருந்து மாமல்லபுரம் வரையில் 6 வழி தகவல் தொழில்நுட்ப விரைவுப் பாதைக்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும். கலிபோர்னியாவில் உள்ள தகவல் தொழில்நுட்ப வளைகுடா பகுதியையும் விஞ்சும் வகையில், தகவல்-தொழில்நுட்பத்திற்கான வளைகுடா பகுதி (I.T. Bay Area) ஒன்றை சென்னையில் உருவாக்குவதில் இந்த முயற்சிகள் பெருமளவில் உதவும். மின்னணு தயார் நிலை-2003 அறிக்கையின்படி, தமிழ்நாடு, மின்னணு தயார் நிலையிலுள்ள முதன்மை மாநிலம் என்ற நிலையை அடைந்துள்ளது. சென்னையில் 7-வது தேசிய கணினி வழி நிருவாக மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டது. உலக வங்கி அதன் நிருவாக நடைமுறைகளைக் கையாளும் நிரந்தர அலுவலகத்தை இந்தியாவில் சென்னையில் நிறுவத் தீர்மானித்துள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். சென்னை, தகவல் தொழில்நுட்பத் தொழிலில் அனைவரையும் ஈர்க்கக்கூடிய மாநகராக மாறியுள்ளது என்பதையே இது காட்டுகிறது.

[2004 பிப்ரவரி 5

38. இந்த அரசு, உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. சாலைகள் குறித்த பணிகளுக்குக் குறிப்பான முக்கியத்துவம் அளிக்கப்படும். ரூபாய் 2,116 கோடி திட்ட ஒதுக்கீட்டளவில் தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டப் பணி உலக வங்கியின் நிதியுதவியுடன் துவங்கியுள்ளது. மொத்தம் ரூபாய் 221.32 கோடி செலவில் 2,149 கிலோ மீட்டர் நீளத்திற்கு மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டப் பெருஞ்சாலைகள், கரும்பு ஆலைச் சாலைகள் ஆகியவற்றைப் புதுப்பித்து நிலையுயர்த்துவதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது.

39. 5 இலட்சம் டன் கச்சா எண்ணெய் கையாளும் வகையில் நாகப்பட்டினம் துறைமுகம், ரூபாய் 100 கோடி திட்டச் செலவில் சமீபத்தில் விரிவாக்கப்பட்டுள்ளது. கடலூர் துறைமுகத்தை ரூபாய் 250 கோடி மதிப்பீட்டுச் செலவில் விரிவாக்கி நிலையுயர்த்தும் திட்டத்தை தமிழ்நாடு கடல்சார் வாரியம் தயாரித்து வருகிறது. சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அனுமதியை மத்திய அரசு விரைவில் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

40. இந்த அரசு 2001 மே திங்களில் பொறுப்பேற்றபோது, தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ரூபாய் 5,000 கோடிக்கு மிகப் பெரிய அளவில் வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டது என்பதையும், மிக மோசமான நிதிச் சரிவைச் சந்திக்கும் நிலையில் இருந்தது என்பதையும் இந்த அவை உறுப்பினர்கள் நினைவுகூரலாம். இத்தகைய வேகமான நிதிச் சரிவைத் தடுத்து நிறுத்தி, தற்போது பயனீட்டாளர்களுக்குத் தரமான மற்றும் தடையில்லா மின் வழங்கலை வழங்கும் நோக்குடன் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், மின் பகிர்வுத் திறனை உயர்த்துவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் கூடுதலாக 902 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் உருவாக்கப்பட்டுள்ளது. புதிய திட்டங்களான, வடசென்னையில் 1000 மெகாவாட் மின் திட்டமும், தூத்துக்குடியில் 1000 மெகாவாட் மின் திட்டமும், கூடங்குளத்தில் 2000 மெகாவாட் மின் திட்டமும் உறுதி செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பெரிய அளவில் மின் தடை என்பது கடந்த கால நிகழ்வாகிவிட்டது. தமிழ்நாடு மின்வாரியம் அதன் பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட மொத்த ஒதுக்கீடான ரூபாய் 8,000 கோடியில் ரூபாய் 5,914 கோடியை மின் விநியோகக் கட்டமைப்பினை விரிவுபடுத்துவதற்காக ஒதுக்கியுள்ளது. 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்திற்கான செயல் திட்டம் ஒன்று வகுக்கப்படும். நடப்பாண்டில்



2004 பிப்ரவரி 5]

மின் வசதி இல்லாத 154 குக்கிராமங்களில் சூரிய ஒளிச் சாதனங்களின்
மூலம் மின்வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

41. அரசின் பயன்திறன் அடிப்படையிலான சுற்றுலா மேம்பாட்டுக் கொள்கையினால், விடுமுறையினைக் கழிப்பதற்கு, தென்னிந்தியாவில் அனைவரையும் கவரும் எழில்மிகு தேர்விடமாக தமிழ்நாடு உருவாகியுள்ளது. புதிய கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுவதற்காக சுற்றுலாத் துறையின் திட்ட ஒதுக்கீடு பெருமளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா மேம்பாட்டில் தனியார் துறையின் பங்கேற்பு ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் முதன் முறையாக 64 ஆம் "ஸ்கால்" (SKAL) உலக மாநாடு, 2003 அக்டோபரில் சென்னையில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்திற்கான இடமாக சென்னை தெரிவு செய்யப்பட்டதால், நமது மாநிலம் பன்னாட்டு சுற்றுலா வரைபடத்தில் இடம்பெற்றுவிட்டது.

42. சிறிய தேயிலை உற்பத்தியாளர்களுக்கு உதவுவதற்காக மத்திய அரசு விலை நிலைப்பாட்டு நிதி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. சிறிய தேயிலை உற்பத்தியாளர்கள் தொடக்கத்தில் சிறிய தொகை ஒன்றை அளிப்பதன்மூலம் இத்திட்டத்தில் சேர்ந்து, விலைச்சரிவு ஏற்படும்போது விலை உத்தரவாதம் பெறுவதற்குத் தகுதியுடையவராவர். சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், இந்நிதிக்கு 23,000 சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் சார்பில், தொடக்கப் பங்குத் தொகையாக, ரூபாய் 1.15 கோடியை வழங்குவதென அரசு முடிவு செய்துள்ளது. 'டீசெர்வ்' என்ற புதிய மின்னணு தேயிலை ஏல மையத்தைத் தொடங்கியது, பொது விநியோக முறையின்மூலம் ஊட்டி தேயிலையை விற்பனை செய்தது ஆகியவை, தேயிலை உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்க இந்த அரசு மேற்கொண்ட சில முக்கியமான நடவடிக்கைகளாகும்.

43. தமிழ்நாட்டில், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது சில்லறை விற்பனையைத் தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகத்தின் (டாஸ்மாக்) மூலம் மேற்கொள்வதென்ற அரசின் முடிவு, மாநிலத்தில் இதுநாள்வரையில் மது விற்பனையில் முழு ஆதிக்கம் செலுத்தி அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்திய மது விற்பனையாளர்களின் வணிகக் கூட்டணியை முறியடித்துள்ளது. இந்த முடிவு, டாஸ்மாக் நடத்தும் சில்லறை விற்பனைக் கடைகளில், தமிழ்நாடு முழுவதும் வேலைவாய்ப்பற்ற மொத்தம் 36,200 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உதவியுள்ளது.

[2004 பிப்ரவரி 5

44. ரூபாய் 18,000 கோடி முதலீட்டிலான "சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்" என்கிற மாபெரும் கட்டமைப்பு முதலீட்டுத் திட்டம் ஒன்று பத்தாண்டு காலத் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டில், மின்சாரம், குடிநீர் வழங்கல், வடிகால், வாகனப் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து, வீட்டு வசதி போன்ற பல்வேறு திட்டப் பணிகளை உள்ளடக்கிய கட்டமைப்புப் பணிகளுக்கான முதலீடுகள் மொத்தம் ரூபாய் 1780.75 கோடி அளவிற்குத் திரட்டப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவாக நடந்தேறி வருகின்றன. உலகப் புகழ்வாய்ந்த மெரினா கடற்கரையின் இயற்கையழகு மீட்கப்பட்டு, அனைத்து வகையான பொதுக் கூட்டங்களின் பேரொலிகளிலிருந்தும், சமூகவிரோத சக்திகளின் தொல்லைகள் இன்றியும் தற்போது பொது மக்கள் அலை கடலையும், கடல் மணலின் சுகத்தையும் அனுபவித்து மகிழலாம். விரைவு ரயில் போக்குவரத்துத் திட்டம்-இரண்டாவது கட்டத்தின்கீழ் ரயில் போக்குவரத்து அண்மையில் திருவான்மியூர் வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளதை அறிந்து இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கு மொத்த ஒதுக்கீடான ரூபாய் 690 கோடியில் சுமார் 67 சதவீதத்தை மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. ரூபாய் 1700 கோடி செலவில் சென்னையிலுள்ள நீர்வழிகளை மேம்படுத்தும் திட்டம் நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டச் செயல்பாடுகளின்மூலம், தென்னகத்தின் தலையாய நகரம் எனுமிடத்தை, சென்னை மாநகரம் பெறும் என்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

45. இம்மாநிலத்திலுள்ள நகர்ப் பகுதி கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ரூபாய் 575.30 கோடி செலவில், 3 மாநகராட்சிகளிலும் (திருச்சி, மதுரை, திருநெல்வேலி), 4 நகராட்சிகளிலும் (மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர், கரூர்), விரிவான கழிவு நீரகற்று திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எஞ்சிய அனைத்து மாவட்டத் தலைமையிடங்களும் கழிவுநீர் அகற்று வசதிகளைப் பெறும்வண்ணம் ரூபாய் 844 கோடி மொத்தச் செலவிலான பெருந்திட்டம் ஒன்றை மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது.

46. முதலமைச்சரின் "ஊட்டச்சத்துக் குறைவில்லாத் தமிழ்நாடு" எனும் கொள்கை அனைவருக்கும் தரமான ஊட்டச்சத்து பாதுகாப்பு அளிப்பதில் அரசின் நிலையான உறுதிப்பாட்டைக் காட்டுகிறது.



2004 பிப்ரவரி 5]

வைட்டமின் 'ஏ' குறைபாட்டைப் போக்க, மதிய சத்துணவு மையங்களில் அளிக்கப்பட்டு வரும் உணவில், முருங்கைக் கீரை மற்றும் கறிவேப்பிலைப் பொடி ஆகியவற்றை அறிமுகப்படுத்தும் திட்டமொன்றும் செயல்படுத்தப்பட்டுள்ளது. சென்றடைய முடியாத முடுக்குகளிலுள்ள குக்கிராமங்களையும் சென்றடையும் வகையில், 4,297 கூடுதல் அங்கன்வாடி மையங்களை ஏற்படுத்தும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

47. முதலமைச்சர் அவர்களின் வலுவான தலைமையின்கீழ் தமிழ்நாட்டில் பெண்ணுரிமை செயல்பாட்டு நடவடிக்கைகள் புதிய இலக்குகளை எய்தி வருகின்றன. ஒரு குழந்தை, தன் தாயின் பெயரிலுள்ள முதல் எழுத்தையோ அல்லது தந்தையின் பெயரிலுள்ள முதல் எழுத்தையோ அல்லது பெற்றோர் இருவரின் பெயரிலுள்ள முதல் எழுத்துக்களையோ தனது பெயரின் முதல் எழுத்தாக வைத்துக் கொள்ளலாம் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அரசின் புரட்சிகரமான கொள்கை பெண்ணுரிமையைப் பெருமளவு உயர்த்தியுள்ளது. 1.52 இலட்சம் சுய உதவிக் குழுக்களில், 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட மகளிரை உறுப்பினராகக் கொண்டுள்ள சுய உதவிக் குழு இயக்கத்தில் நம் மாநிலம் முன்னோடியாக உள்ளது. இந்தக் குழுக்களின் கணக்கிடப்பட்ட மொத்த சேமிப்பு ரூபாய் 393.64 கோடியாகும். தற்போது அளிக்கப்பட்டுள்ள கடன் வசதி ரூபாய் 564 கோடியை விஞ்சியுள்ளது. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இதுவரை 2.5 இலட்சம் மகளிருக்கு வெவ்வேறு வாழ்க்கைத் தொழில்களில், ரூபாய் 10 கோடி செலவில், பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும். புரட்சிகரமான தொட்டில் குழந்தைத் திட்டம் 1221 பெண் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற உதவியுள்ளது. அவர்களில் 1200 பெண் குழந்தைகள், வளர்ப்பு இல்லங்களைச் சென்றடைந்து, அங்கே அன்புடனும் ஆதரவுடனும் வளர்க்கப்பட்டு வருகிறார்கள். இந்த அரசு தொடங்கியுள்ள திருத்தியமைக்கப்பட்ட பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில், 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் ரூபாய் 12.48 கோடி மொத்தச் செலவில் 8188 பேர் பயனடைந்துள்ளனர்.

48. இந்த அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்கள், பொருளாதார மற்றும் கல்வி மேம்பாடு அடையச் செய்வதில் உறுதி பூண்டுள்ளது. ரூபாய் 99.54 கோடி மொத்தச் செலவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்காக படிப்படியாக 316 மாணவரில்லங்களைக் கட்டும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு

வருகிறது. இந்தத் திட்டம் 2004–2005 ஆம் ஆண்டிலும் தொடரும். மேனிலைப் பள்ளியில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவசமாக சைக்கிள்கள் வழங்கும் திட்டம் மாபெரும் வெற்றியினைப் பெற்றுள்ளது. தகுதியுள்ள பயனீட்டாளர்களுக்கு மொத்தம் 1.44 இலட்சம் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. மாணவரில்லங்களில் உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபாய் 225–லிருந்து ரூபாய் 300–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. நிலமற்ற ஆதிதிராவிடர், ப்ழங்குடியின மகளிருக்குச் சாகுபடிக்கேற்ற நிலங்களை வழங்கும் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

49. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் உரிமை மேம்பாடு மற்றும் நலனுக்காக தொடங்கப்பட்ட திட்டங்கள் மேலும் வலுவூட்டப்படும். இச்சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக மொத்தம் ரூபாய் 68.49 கோடி செலவில் 214 மாணவரில்லங்களைக் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்மாணவரில்லங்களில் இச்சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபாய் 225–லிருந்து ரூபாய் 300–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இச்சமுதாயத்தைச் சேர்ந்த மாணவிகளை ஊக்குவிப்பதற்கான சிறப்பு ஊக்க உதவித் திட்டமானது நடப்பாண்டில் ரூபாய் 12 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

50. நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த இந்த அரசு எப்போதுமே முக்கியத்துவம் அளித்துவந்துள்ளது. முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு இலவச சேலை, வேட்டி வழங்கும் திட்டமும், இலவச சீருடை வழங்கும் திட்டமும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. தொழில் திறனையும், கைத்தறியையும் மேம்படுத்துவதற்காக சிறப்புத் திட்டமொன்று ரூபாய் 25 கோடி முதலீட்டில் 13 மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் சுமார் 25,000 நெசவாளர்களுக்கு இத்திட்டம் ஒரு வரப்பிரசாதமாக அமையும். பாலிகாட் சேலைகளையும், வேட்டிகளையும் இலவசமாக வழங்கும் புதிய திட்டம் பெருவாரியான வரவேற்பினைப் பெற்றுள்ளது. இச்சேலைகள் மற்றும் வேட்டிகளின் தரம் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் 2.22 கோடி மக்கள் பயனடையும் வகையில் ரூபாய் 173 கோடி செலவில் 1.11 கோடி சேலைகள் மற்றும் 1.11 கோடி வேட்டிகள் வழங்க வகை செய்கிறது. மேலும், இத்திட்டம் மாநிலத்திலுள்ள விசைத்தறி



நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பினை நல்குகிறது. இத்திட்டம் வரும் ஆண்டிலும் தொடரப்படுவதுடன் சமூகப் பாதுகாப்பு வளையத் திட்டத்தின் ஒரு பகுதியாகவும் அமையும். இம்மாநிலத்தில் உள்ள விசைத்தறி நெசவாளர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து முதல்வர் அவர்கள் மத்திய நிதி அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்கள். இதுவரையிலும் விசைத்தறித் துறைக்கு அனுமதிக்கப்பட்டுவந்த விருப்ப ஆயத்தீர்வைமுறை தொடரப்பட வேண்டும் அல்லது சிறு தொழில் துறையில் உள்ளதைப்போன்று ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவாக விற்று முதல் உள்ள விசைத்தறிப் பிரிவுகளுக்கு மத்திய மதிப்புக்கூட்டு வரியிலிருந்து (சென்வேட்) முழு விலக்களிக்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார். ஆண்டு விற்று முதல் ரூபாய் 35 இலட்சத்திற்கு மேற்படாமல் இருப்பின், முதலில் விற்பனை செய்யப்படும் ரூபாய் 25 இலட்சத்திற்கு விசைத்தறித் துறைக்கு, ஆயத்தீர்வை செலுத்துவதிலிருந்து மத்திய அரசு விலக்களித்துள்ளது. இது போதுமானதாக இல்லாததால், சிறு விசைத்தறி நெசவாளர்கள் பயனடையும் வகையில் விலக்களிக்கப்படுவதற்கான வரையறையை ரூபாய் 25 இலட்சத்தில் இருந்து ரூபாய் ஒரு கோடியாக உயர்த்த வேண்டும் என்று இந்த அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

51. நூறு யானைகளுக்கு முதுமலை வனவிலங்கு சரணாலயத்திலும், 'டாப் ஸ்லிப்'பிலும் மேற்கொள்ளப்பட்ட ஒரு மாத ஓய்வு கொடுக்கும் திட்டம் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. யானைகளின் உடல் நலனுக்கு ஏற்ற, குளிர்ந்த இயற்கைச் சூழ்நிலையில் நடத்தப்பட்ட இந்தப் புத்துணர்வு முகாம், அவற்றிற்குக் கிடைத்த மகிழ்ச்சியான ஓய்வாகும். இது முதலமைச்சர் அவர்கள் விலங்குகள்மீது வைத்திருக்கும் அன்பினுக்கும், கருணைக்கும் உரிய சான்றாகத் திகழ்வதுடன், முழுமையான நமது உயிரின வாழ்க்கைச் சூழலுக்கும் சான்று பகர்கிறது.

52. தமிழ் மொழி, கலை மற்றும் பண்பாட்டினை மேம்படுத்துதல், மாநிலத்தின் வளஞ்செறிந்த பண்பாட்டு மரபுகளைப் பாதுகாத்தல் ஆகியவை இந்த அரசின் மிக உயர்ந்த கவனத்தைப் பெற்றுள்ளன. தமிழ்நாடு அரசு அனைத்துப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரையில் அனைத்து வகுப்புகளிலும் அறிவியல் தமிழை இக்கல்வியாண்டில் அறிமுகம் செய்துள்ளது. அறிவியல் தமிழ்ப் பாடப் புத்தகங்கள் ரூபாய் 5.42 கோடி செலவில் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. புது தில்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்

[2004 பிப்ரவரி 5

கழகத்தில் தமிழ் ஆய்வுகளுக்கான 'இருக்கை' ஒன்று அரசு வழங்கிய ரூபாய் 50 இலட்சத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 'சிட்டிசன்' (Citizen) என்னும் ஆங்கிலச் சொல் பெண்ணைக் குறிக்கின்றபோது, அதற்கு இணையாக "குடிமகள்" என்ற புதிய சொல் ஒன்றை உருவாக்கி ஆண்-பெண் இருபாலரும் சமம் என்ற கோட்பாட்டிற்கு முதலமைச்சர் அவர்கள் புதிய உத்வேகம் அளித்துள்ளார்கள். புதுமைத் திட்டமான "அன்னதானத் திட்டம்" மாநில அளவில் 162 கோயில்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. கும்பகோணத்தில் 2004 ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெறவிருக்கும் மகாமகம் திருவிழாவிற்கான ஏற்பாடுகள் ரூபாய் 50 கோடி செலவில் விரைவில் முனைப்புடன் முடிக்கப்படும். 2001-2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் தமிழ்நாட்டில் 2,780 கோவில்களுக்குக் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. பெரிய கோயில்களின் பங்களிப்புடன், ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளிலுள்ள 6,000 சிறிய கோயில்களை, ரூபாய் 15 கோடி செலவில் புதுப்பிக்கக் கருதப்பட்டுள்ளது. நூற்றாண்டு விழாவையொட்டி, மொத்தம் ரூபாய் 4.60 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்ட சென்னை அருங்காட்சியகம் ஒரு முக்கிய சுற்றுலா மையமாக மாறியுள்ளது.

53. நிருவாகத்தை மேம்படுத்துவதற்கான மிகப் பெரிய முயற்சியாக, அரசு, மாநிலத் தலைமைச் செயலகத்திற்கும், மாவட்டத் தலைமையிடங்களுக்கும் இடையில் தொலைதூரத் தொடர்பு (வீடியோ கான்பரென்சிங்) வசதியினை ஏற்படுத்தியுள்ளது. தற்போதுள்ள தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கிருஷ்ணகிரி மாவட்டத்தை ஏற்படுத்துவதற்கான முடிவு அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது. புதிய மாவட்டம் 9-2-2004-ல் தொடங்கி வைக்கப்படும். கணினி வழி நிருவாகத்தைக் கையாண்டு, பெருமளவு மக்கள் தொடர்புடைய பத்து துறைகள் மற்றும் நிறுவனங்களில் சேவைப் பணிகளின் தரத்தை மேம்படுத்தும் செயல்பாடுகள் 2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தகவல் பெறுவதற்கான உரிமை குறித்த புதிய சட்டம் ஒன்றின் சிறப்பியல்புகள் குறித்து அரசு விரிவான ஆலோசனை நடத்தி வருகிறது. இதற்குரிய வரைவு சட்டம், சட்டமன்றப் பேரவையில், விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

54. அனைத்துத் துறைகளிலும், இந்த அரசின் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் பெருமையுடன் நினைவுகூரலாம் என்பதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உறுதியான செயல்திறன் கொண்ட தலைமையின்கீழ், 2004 ஆம் ஆண்டில் அனைத்து நிலைகளிலும், தமிழ்நாடு அதன் சாதனைகளை விஞ்சும் என்று நாம் உறுதி கொள்ளலாம்.



2004 பிப்ரவரி 5]

இந்தப் பேரவையின் விவாதங்கள், தமிழ்நாட்டு மக்களுக்குப் பொருளாதார வளர்ச்சியும், வளம் சேர்க்கும் வகையிலும் நற்கருத்துக்களைக் கொண்டதாகவும், சீர்தூக்கிப் பார்க்கக்கூடியதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

வணக்கம்.

ஜெய்ஹிந்த்.

---

18507
D
V21.k,3,1 04
p04.55.1

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.